ஓம் சாயிராம்

# சாயி மார்க்கம்

ஜனவரி ~ ஜூன் 2012

இலங்கை
ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனத்தின்
தமிழ் சஞ்சிகை

50/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபூதி சுந்தர சாயி...





யாழ்ப்பாணம் சாயி நிலையத்தில் ...



ஆத்திசூடிவீதியில் ...



கோப்பாயில் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயி மார்க்கம்
# Sai Markam

மலர்: 19 | ஒரே ஒரு மதம் அது அன்பென்னும் மதம் | ஜனவரி - ஜூன்
இதழ்: 48 | 2012



**ஆசிரியர்:**
Dr.R.கணேசமூர்த்தி
659, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2832, 021 222 5580

**துணை ஆசிரியர்:**
திரு.S.R.சரவணபவன்
பிள்ளையார் கோவிலடி,
தாவடி, கொக்குவில்
தொ.பே.- 021 222 5442





இலங்கையில் தனிப்பிரதி ரூபா 50.00
வருடச் சந்தா ரூபா 200.00 (4 பிரதிகள்)


வெளிநாடு:
வருடச் சந்தா 15 அமிரிக்க டொலர்

**சந்தா அனுப்பும் முகவரி**
ஆசிரியர்,
சாயி மார்க்கம்
659, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

**காசோலை:**
Sai Markam
Sathya Sai Seva Organisation (NZ)
A/C No: 016010004771
Hatton National Bank
Jaffna, Sri Lanka


## உள்ளே...


| | |
|---|---|
| வேதம் ஓதுக – ஆசிரியர் தலையங்கம் | 02 |
| பகவானால் தரப்பட்ட வேத சாரம் | 04 |
| தீர்க்க தரிசியின் இறுதித் தரிசனமா? | 06 |
| உணவே பிரம்மம் | 09 |
| நித்திய சொரூபம் சத்திய சாயி | 10 |
| என்னோடு எப்போதும் சுவாமி | 11 |
| இதயத்திலிருந்து கேட்டால் கிடைக்கும் | 13 |
| பாபாவின் ஆன்மீகப் புரட்சி | 14 |
| பகவானின் அதிசயத் தரிசனம் | 16 |
| அன்பைப் பற்றிய விளக்கம் | 17 |
| சுவாமியுடன் சரணாகதி | 19 |
| பெண்ணின் பெருமை | 21 |
| அற்புதங்கள் அதிசயங்கள் | 24 |
| நல்லூர் சுவாமி அம்மா | 25 |
| சுவாமியின் ஆழமான செய்திகள் | 26 |
| தெய்வச் சிற்பி | 28 |
| வேதநாயகன் – வேதியர் நாயகன் | 33 |
| ஆத்மீக சாதனையா கடமை செய்வதா சிறந்தது | 35 |
| அற்புதங்கள் சாயியின் அறிமுக அட்டைகளே | 37 |
| பகவான் எம்மை ஆட்கொண்டு அருளிய அற்புதங்கள் | 40 |
| தேனாமிர்தம் | 42 |
| தேசிய இளைஞர் மகாநாடு | 45 |
| நிறுவனச் செய்திகள் | 48 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் தலையங்கம்

ஓம் ஸ்ரீ சாயிராம்

# வேதம்! வேதம்! வேதம்! வேதம் ஓதுக!

"வேதம்" என்ற சொல் "வித்" என்ற மூலக் கூறிலிருந்து எழுந்தது. "வித்" என்பதின் பொருள் அறிதலாகும். இப் பெரும் அறிவுக் களஞ்சியம் மனிதனால் ஆக்கப்படாததும் காலத்திற்கும் அப்பாற்பட்டதுமாகும். மகரிஷிகளின் இதயத் திலிருந்து வெளிப்பட்ட தெய்வீக ஒலிகளின் கூட்டே வேதம். இதிலுள்ள ஒவ்வொரு வசனமும் மந்திரமாகும். இவை தெய்வத்தின் மூச்சே யாகும், பிரபஞ்சத்தினதும், தர்மத்தினதும் ஆதாரமுமாகும். ஆகவே தான் இதை சனாதன தர்மம் என்றும் கூறகிறார்கள். இது குருவிட மிருந்து சீடனுக்கு வாய்மொழி மூலம் கொடுக் கப்பட்டதால் சுருதியென்றும் கூறுகின்றோம். பெரும்பாலானவை காலப்போக்கில் மறைந்து விட்டாலும், எஞ்சியிருந்தவற்றை வேத வியாசர் நான்காகத் தொகுத்தார். அவையாவன. இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்பவையாகும். இருக்கு வேதம், மந்திரத் தொகுதியையும், யஜுர் வேதம் யாகம் நடாத்தும் முறைகளையும், அப்போது கூறும் மந்திரங்களையும் கொண்டன. சாம வேதம் இசைக்கு ஆதாரமாகவுள்ளது. இதிலிருந்தே ஏழு அடிப்படை சுரங்கள் எழுகின்றன. மிகுதியானவை மனிதனின் அடிப்படைத் தேவைகளுடன் (மருத்துவம், விவசாயம், அரசியல், பாதுகாப்பு, அஷ்டாங்க யோகம்) தொடர்பு பட்டவையாகும் (அதர்வண வேதம்). வேத வியாசர் தொகுத்த காலத்திலிருந்த 1180 பிரிவுகளில் தற்போது 11 தான் எஞ்சியுள்ளன. இவற்றினுள் மூன்று பிரிவுகளே தற்காலத் தவர்களால் ஓதப்படுகின்றன. மிக உன்னதமான வேதங்கள் ஓதப்படாமையால் அழிந்து போகும் அபாயம் ஏற்பட்டது. பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா வேதத்தையும் பக்தர்களையும் காப்பாற்றவே அவதாரம் எடுத்ததாகப் பலமுறை கூறியுள்ளார்.

பகவான் 1952 ஆம் ஆண்டே நாம் வேதங்களைப் படித்து ஓதவேண்டுமென்று அறிவுறுத்தத் தொடங்கினார். வேத பாடசாலையொன்றை பிரசாந்தி நிலையத்தில் நிறுவி, மாணவர்களைப் படிக்கச் செய்தார். 1962 தொடங்கி தசர விழாவின் போது வேதபுருஷ ஸப்த ஞானயக்னம் கிரமமாக நடைபெறுகிறது. 1965 இல் பகவான் "பிரசாந்தி வித்வான் மகா சபையை" நிறுவினார். அக்காலத்தில் ஒவ்வொரு வருடமும் ஒரு கிழமைக்கு வேதத்தைப் பற்றியே பல அருளுரைகளை பகவான் ஆற்றினார். அப்போது வேத விற்பன்னராயிருந்த ஸ்ரீ கண்டிக் கோட்டை சுப்பரமண்ய சாஸ்திரி அவர்களின் நினைவாக "ஸ்ரீ சத்திய சாயி கண்டிக் கோட்டை சுப்பிரமணிய சாஸ்திரி வேத பரிஷாத்" என்பதை 14.10.1986 இல் பகவான் ஸ்தாபித்தார். இந்த வேத விற்பன்னர் வேதத்தைப் பற்றி பகவான் ஆற்றிய உரைகள் அனைத்தையும் தொகுத்து "ஸ்ரீ சத்திய சாயி வேத வாஹினி" என்ற பெயரில் தெலுங்கு மொழியில் நூலாக 1987 இல் வெளியிட்டார். அக்டோபர் மாதம் 2003 ஆம் ஆண்டு தொடங்கி வேதம் கிரமமாக ஒவ்வொரு நாளும் பகவானின் தரிசனத்தின் போது ஓதப்பட்டு வருகின்றது. இது பகவானின் கட்டளையே யாகும். 2009 ஆம் ஆண்டு ஜுலை 20 ஆம் திகதி தனது தரிசனத்தின் போது ருத்திரமும், புருஷ ஸூக்தமும் காலையும், மாலையும் ஓதப்பட வேண்டுமென்றும் கட்டளையிட்டார்.

வேத சிந்தனை தொடக்கத்தில் இயற் கைச் சக்திகளை தெய்வத்தின் வெளிப்பாடு என்று உணர்ந்து புகழ்ந்து பாடித் துதித்து பின்னர் எல்லாம் ஒன்று என்ற உயர்ந்த பரிமாணத்தை எட்டியுள்ளது. இந்த அதி உன்னத கருத்துச் சிந்தனைகள் கொண்ட உப நிடதங்களை வேதாந்தம் என்று கூறுகின்றோம். உபநிடதம் வேதத்தின் சூடாமணியாகும்.

வேதவியாசர் தொகுத்த நான்கு வேதத்திலும் சாரமாக உன்னத மகா வாக்கியங்கள் உள்ளன. இருக்கு வேதத்தில் "பிரக்ஞானம் பிரம்மா" யஜுர் வேதத்தில் "அகம் பிரமாஸ்மி" சாம வேதத்தில் "தத்துவம் ஆசி" அதர்வண வேதத்தில் "அயம் ஆத்மா பிரம்மா" என்பவையே மகா வாக்கியங்களாகும்.

வேதத்தை முழுமையாக விளங்குவது மிகவும் கஸ்டமானதாகும். சாதாரண மக்களுக்குப் புதிராகவு மிருக்கும். இதற்காகவே வேத வியாசர் ஒவ்வொரு வேதத்தையும் மூன்று காண்டங்களாகப் பிரித்துத் தந்துள்ளார். அவையாவன கிரியைகளுக்கு இயைந்த கர்ம காண்டம், பலவித பிரார்த்தனைகளுக்கு

**2003 ஆம் ஆண்டு தொடங்கி வேதம் கிரமமாக ஒவ்வொரு நாளும் பகவானின் தரிசனத்தின் போது ஓதப்பட்டு வருகின்றது. இது பகவானின் கட்டளையே யாகும். 2009 ஆம் ஆண்டு ஜுலை 20 ஆம் திகதி தனது தரிசனத்தின் போது ருத்திரமும், புருஷ ஸூக்தமும் காலையும், மாலையும் ஓதப்பட வேண்டுமென்றும் கட்டளையிட்டார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இசைந்த உபாசனை காண்டமும், உயர் அறிவை வெளிப்படுத்தும் ஞான காண்டமும். சாதாரண மக்கள் உயர் நிலையை அடைவதற்கு உதவியாகவும் வேதத்தை ஓரளவு விளங்க உதவுவதற்காகவும், இதிகாசங்கள், புராணங்கள், பகவத் கீதை ஆகியன தரப்பட்டுள்ளன. மக்களின் நிலைகளுக்கேற்ப ஆன்மீகத் தத்துவங்களும், செயற்பாடுகளும் வேதத்திலுள்ளன. இது மாத்திரமல்ல, சகல விதமான அறிவுகளும் (விஞ்ஞானம், அரசியல், இலக்கியம், இசை, நுண்கலை) வேதத்தில் அடங்கிக் கிடக்கின்றன.

பிரசாந்தி நிலையத்திலும் ஏனைய நிலையங்களிலும் ஸ்ரீருத்ரம் கிரமமாகப் பாராயணம் செய்யப்படுகின்றது. இதில் 11 அனுவாகங்கள் கொண்ட நமகமும், சமகமும் உள்ளன. நமகத்தில் 187 தடவைகள் நமக என்று இறைவனைப் புகழ்கின்றோம். நமக: என்னுடையதல்ல என்ற கருத்தையும் துதிக்கின்றோம் என்ற கருத்தையும் கொண்டுள்ளது. ஆன்மீக முன்னேற்றத்திற்கு தடையாயிருப்பவை அனைத்தையும் விட வேண்டுமென்ற கருத்தும் அடங்கியுள்ளது. இந்தத் துதியில் ஆணவம் அழிக்கப்படுகின்றது. நமகத்தில் சிவபெருமானையே (ருத்திரர்) வழிபடுகின்றோம். இதில் அவரின் வில்லைத் தளர்த்தவும், அம்புகளை மழுங்கச் செய்யவும் கோபத்தைத் தணிக்கவும் வேண்டுதல் செய்கின்றோம். சாதாரண நோக்கில் இதன் உன்னதம் தெரிவதில்லை. உள் தத்துவம் பின்வருமாறு: எனக்குள்ளே இருப்பது தான் வெளியேயுமுண்டு. வெளியில் உள்ள குழப்பங்கள் எல்லலாம் என்னுள்ளேயுமுண்டு. இந்தக் குழப்பங்களை (எதிர் மறையான உணர்வுகள், எண்ணங்கள், சொற்கள், செயல்கள்) நிவர்த்தி செய்து மீண்டும் வராமல் தடுக்கவே இதில் வேண்டப்படுகின்றது. நமகத்தில் திரிகரண சுத்தியை ஏற்படுத்த வேண்டுகின்றோம். இதன் பின்பு சமகத்தில் உலக வாழ்க்கைக்குத் தேவையானவற்றை வேண்டுகின்றோம். இதில் தன்னலமில்லை தானும் ஏனையோருக்கும் தேவையானவற்றையே ஏனையோருக்குமாகவே வேண்டுகின்றோம். சம கத்தில் 338 தடவைகள் சாமே என்ற பதம் திரும்பத் திரும்ப கூறப்பட்டுள்ளது.

ருத்திரத்தின் தொடக்கத்தில் பயமும், பதட்டமும் வெளிப்பட்டு உருத்திரனிடம் வீழ்ந்து வணங்கி அவரின் கோபத்தைத் தணிக்குமாறும், அதை ஆக்க சக்தியாகவும் பாதுகாக்கும் சக்தியாகவும் மாற்றுமாறு வேண்டும் பிரார்த்தனை அடங்கியுள்ளது. 11 அனுவாகம் என்ற எண், 5 ஞானேந்திரியங்கள், 5 கர்மேந்திரியங்கள், மனம் ஆகியவற்றையே குறிக்கின்றது. சமகத்தில் 19 ஆவது அனுவாகத்தில் 1 தொடங்கி 33 வரையுள்ள ஒற்றை எண்களும் 4 தொடங்கி 48 வரையுள்ள 4 இன் அடுக்கான எண்கள் குறிக்கப்பட்டுள்ளன. ஒற்றை எண்கள் 330 கோடி தெய்வங்களை கவருகின்றதும் நாலின் அடுக்கான முழு உயிரினங்களைக் கவருகின்ற சக்தியையும் தந்தருளுமாறு வேண்டப் படுதலையே குறிக்கின்றது. உலகத்தில் தேவையானவற்றை வேண்டிப் பின்பு அனைத்தையும் தியாகம் செய்து ஆத்மஞானத்தையும் பெறுவதையே கடைசி அனுவாகம் குறிக்கின்றது.

வேதம் பகவானின் மூச்சேயாகையால், வேத பாராயணத்தின் போது அவரின் பிரசன்னம் நிச்சயமாகிறது. பாராயணம் செய்யப் பழகியதும், அதன் கருத்தை விளங்கி வாழ்வில் கடைப்பிடித்தால் திரிகரண சுத்தி ஏற்படும். இப்படியானவர்கள் ஒன்று கூடிப் பாராயணம் செய்யும் போது விளைவு நீடிப்பது மட்டுமல்லாமல் உலகில் அமைதியையும் ஏற்படுத்தும். பஞ்ச பூதங்களின் சமநிலை பேணப்படும். வேத ஒலி அலைகளும், சனாதன தர்மத்தின் நறுமணமும் பக்தர் குழாமில் 5 அடிப்படை மனித மேம்பாடுகளாக வெளிப்பட்டு இறுதியில் முக்தி நிலைக்கு இட்டுச் செல்லும்.

வேத பாராயணம் எல்லோராலும் செய்யப்படலாம் என்றும், உச்சரிப்பு பிழையானால் தீங்கு விளையும் என்ற பயமிருக்கத் தேவையில்லை என்றும் பகவான் கூறியுள்ளார். இது கலியுகத்தில் பகவானால் தரப்பட்ட சலுகையாகும். முறையாக உச்சரித்து முறையான மெட்டில், கருத்தை விளங்கி இதய பூர்வமாக ஓதினால் நல் விளைவு மிகவும் அதிகமாகும். அத்துடன் அளவிலா ஆற்றலும் வெளிப்படும்.

வேதம் ஓதுவோம்.
ஜெய் சாயிராம்

- ஆசிரியர்

உசாத்துணை நூல்கள்:


1. வேத புஸ்பாஞ்சலி - M.Sairoopak
2. ஸ்ரீ சத்திய சாயி வேத வாஹினி - பிரசாந்தி நிலையம்
3. Rudra Tattva by: "Dharmaskshetra" - Mumbai




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்


# பகவானால் தரப்பட்ட வேத சாரம்

**(திரு.பி.என்.நரசிம்மமூர்த்தி அவர்கள் 19.08.2006 அன்று பகவான் முன்னிலையில் ஆற்றிய உரையின் சாராம்சம்)**

பாரத தேசமே வேதத்தின் பிறப்பிடம். பாரத தேசம் வேதம், யாகம், யக்ஞம், கிராத்துஸ், அவதாரம் சமூகநீதி, அறநெறி வாழ்வு எல்லாம் ஒன்றோடொன்று பிணைந்திருக்கின்றன. உன்னதமான எண்ணங்கள் எல்லாப் பக்கத்திலிருந்தும் எழட்டும் என்பதையே இருக்கு வேதத்தில் "ஆனோ பத்றா கிறத்தலோ யந்து விஸ்வதா" குறிக்கப்பட்டுள்ளது. பூமியின் நீடிப்பும் வேத போஷனமும் தனது முக்கிய பணியொன்று என்று பகவான் கூறியுள்ளார். பிரசாந்தி நிலையத்தில் பகவான் முன்னால், பல தேசங்களிலிருந்து பிள்ளைகள் வந்து வேதபாராயணம் செய்வதை வேறு எங்கும் காண முடியாது. மனிதனுள் ஆன்மீகமும் உலகாயுதமும் கலந்துள்ளன. ஆன்மீகத்தின் எழுச்சி மூலமே மனிதன் மேம்பாடடையலாம். பகவான் இதைப் பின்வரும் கூற்றில் அழகாக வெளிக் கொணர்ந்துள்ளார்.

"இதயத்தில் அறநெறி இருந்தால், ஒழுக்கத்தில் அழகு ஏற்படும், ஒழுக்கத்தில் அழகிருந்தால், இல்லத்தில் இசைவு ஏற்படும். இல்லத்தில் இசைவு ஏற்பட்டால், இனத்தில் ஒழுங்கு ஏற்படும். இவைகளில் ஒழுங்கு ஏற்பட்டால் உலகத்தில் அமைதி இருக்கும்."

வேத கலாச்சாரத்தின் முக்கியத்து வத்தை அறிவுறுத்த பகவான் 1970 ஆம் ஆண்டு பல உரைகள் நிகழ்த்தியுள்ளார். வேதத்தைப் பற்றிய அருளுரை ஒன்றின் முடிவில் டாக்டர்.கோகக் சுவாமியிடம் எப்படி உங்களுக்கு எல்லாம் தெரியும் என்று கேட்டார். அதற்கு சுவாமி, "எனக்கு புத்தகங்கள் படிக்கும் பழக்கமில்லை. வேத அறிவு மூளையிலே பதிந்துள்ளது. மனதை அடக்கு, ஒரு முகப்படுத்தி மூளையிலுள்ள பல்வேறு மையங்களில் ஒன்றைத் தெரிவு செய்து அதில் ஊன்றிச் சிந்தித்தால் அதிலுள்ள அறிவு வெளிப்படும். வேதங்கள் பிரபஞ்சம் தோன்றிய காலத்திலேயே வெளிப்பட்டன. என்றாலும் காலத்திற்கு அப்பாற்பட்டவையாகும்." என்று பதிலளித்தார்.



இன்னொரு சந்தர்ப்பத்தில் டாக்டர். பகவந்தம் பகவானால் புகழப்பட்ட காமவதனி என்ற வேத விற்பன்னரிடம் "சுவாமி சொல்வதெல்லாம் வேதத்தில் கூறப்பட்டவையா" என்று கேட்டதற்கு அவர்: "சுவாமி சொன்ன அனைத்தும் வேதத்திலுள்ளன. அது மாத்திரமல்ல அவர் சொன்ன அனைத்தும் வேதமே. அவரே வேத புருஷர், வேத ஞானி, வேதத்தின் வெளிப்பாடே சுவாமி" என்று கூறினார்.


சில வருடங்களுக்கு முன்பு பக்தர் ஒருவர் சுவாமியிடம் "சுவாமி யாகம், யக்ஞம் செய்வதால் உலகத்தைப் பாதுகாக்கலாமென்று சொன்னீர்கள். இவ்விரண்டும் பாரதத்திலே செய்யப் படுகின்றன. அப்படியாகில் முழு உலகிற்கும் எப்படி பாதுகாப்புக் கொடுக்கும்?" என்று கேட்டார். சுவாமி "உலகம் புகையிரதத்தைப் போன்றது. பாரத தேசம் தான் இயந்திரம். ஏனைய தேசங்கள் புகை வண்டியின் பெட்டிகளாகும். ஆகவே என்ஜினில் தான் நெருப்பை வைக்கலாம் அந்த நெருப்பு எல்லாப் பெட்டிகளையும் இழுத்துச் செல்லும்" என்று பதிலளித்தார். புதுமையும் பழமையும் ஒன்று சேர்ந்தால் உன்னதம் அதிகரிக்கும். ஒரு மரம் அழகாயிருப்பதற்கு பழைய வேரும், புதிய துளிர்களும் தேவை.

வேதத்தின் தத்துவம் உபநிடதத்தில் பொதிந்திருக்கிறது. சுவாமி எழுதிய உபநிடத வாஹினியை வாசித்தால் தத்துவம் விளங்கும். ஞானம் என்பது அத்வைத தர்சனம். அதாவது எல்லாம் ஒன்று என்ற உன்னத நிலையே வேதம் தத்துவமாக எடுத்துக் காட்டுகிறது. வேத தத்துவம் கீழ் நிலையிலிருந்து படிப்படியாக உயர் நிலைக்கு இழுத்துச் செல்கிறது. வேத தத்துவத்தின் நாலு

**"இதயத்தில் அறநெறி இருந்தால், ஒழுக்கத்தில் அழகு ஏற்படும், ஒழுக்கத்தில் அழகிருந்தால், இல்லத்தில் இசைவு ஏற்படும். இல்லத்தில் இசைவு ஏற்பட்டால், இனத்தில் ஒழுங்கு ஏற்படும். இவைகளில் ஒழுங்கு ஏற்பட்டால் உலகத்தில் அமைதி இருக்கும்."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1960 ஆம் ஆண்டில், சுவாமி புத்திஜீவிகள் மத்தியில் உரை நிகழ்த்தி முடித்ததும், ஓர் விஞ்ஞானி சுவாமியிடம்: "வேறு மதத்திலுள்ள வர்கள் ஒரு உருவத்தைத் தான் கடவுளாக வணங்குகிறார்கள் இந்தியாவில் ஏன் பல ரூபங்களை வணங்குகிறார்கள்?" என்று கேட்டார். சுவாமி: "நீ ஒரு உடுப்புக் கடைக்குப் போனால் அங்கே ஒரே அளவான எல்லாம் ஒன்றான மாதிரியில் இருந்தால், உமக்கு அளவு சரியாகவில்லையானால் உமக்குத் திருப்தியளிக்குமா? இந்தியாவிலே இந்து மதத்தில் ஒவ்வொருவருடைய மனநிலைக்கேற்றவாறு வழிபாடு அமைந்துள்ளது. பெரிய சுப்பர் பஜாரில் உடுப்புக்கள் பல அளவுகளில், பல கலரில், பல மாதிரியில் இருப்பதால் ஒவ்வொருவரும் தமக்குப் பொருத்தமான உடுப்பை எடுத்துக் கொள்ளலாம்" என்று பதிலளித்தார்.

வேதத்தை ஓரளவு விளங்குவதற்கும் இறைவனை அடைவதற்கும் அசையாத நம்பிக் கையும் நிபந்தனையற்ற பக்தியும் தேவை.

வேதசாரத்தை பின்வரும் ஐந்து வாக்கியங்களால் புரிந்து கொள்ளலாம்.

- நடந்ததை நினைத்து நன்றியாயிரு
-Look behind thank god
- முன்னே நோக்கி கடவுளிடம் நம்பிக்கை வை
-Look ahead and trust Swami
- சுற்றிவரப் பார்த்து கடவுளுக்கு சேவை செய்
-Look around and serve god
- உள்ளே சென்று கடவுளைக் காண்
-Look within and see god
- ஊடுருவிப் பார்த்து தெய்வமாக இரு
-Look through and be god

ஜெய் சாயிராம்

நிலைகளாவன.

1. இருக்கு வேதத்தில் பல உருவ வழிபாடுகள் குறிக்கப்பட்டுள்ளன. இயற்கைச் சக்திகளும் தெய்வீகமானவையாக வழிபடப் பட்டன. (Polytheism)
2. கடவுள் ஒன்றே அவர் பலவாகப் பரிணமித்துள்ளார். அவரைப் பல பெயர்கள் கொண்டு அழைக்கிறோம். (Monotheism)
3. அடுத்த நிலை கடவுளை உள்ளே காண்பதாகும். அவர்தான் விழிப்பு நிலை, சித்தம், கேவலம் (ஒன்றே யொன்று) சாக்கி, நிர்க்குணம், கதோபனிடதத்தில் யமராஜன் நசிக்கேதனுக்கு உபதேசித்தது:

   "இறைவன் மனிதனுக்கு அளித்த மனமும், புலன்களும் வெளி நோக்கிச் செல்லும் இயல்பைக் கொண்டவையாகும். ஆனால் ஆன்மீகச் சாதகன் இவற்றை உள்ளே இழுக்கப் பழக வேண்டும்."


4.) அடுத்த நிலை இறைவனை உணர்தல் (முக்தி நிலை) இந் நிலையில் பரவசமடைகிறான். இந் நிலையை அடைந்தவனின் கூற்றே பின்வரும் வேத மொழி:

**வேதாகமேதம் புருஷம் மகான்தம்**
**ஆதித்திய வர்ணம் தமஸ்துபாரே**
**தமேவா விதித்வாதி மிர்த்யுமைதி**
**நான்ய பன்தா வித்தியதே அயநாம**

நாம் மேற்கூறிய ஏதோ ஒரு நிலை யிலிருப்போம். அந்நிலை யிலிருந்து அடுத்த மேல் நிலைகளுக்கு கொண்டு செல்வதே வேதச் சிந்தனை.

நன்றி: www.radiosai.org
மொழிபெயர்ப்பு: ஆசிரியர்

**உடல் கேமராவில் நன் மனத்தை லென்சாகக் கொண்டு அதில் அன்பு ஃபிலீமைப் போட்டுக் கொண்டு, அறிவு விசையைத் தட்டினால் பகவான் ஒளிச் சித்திரமாக உள்ளே பதிந்து விடுவார்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# தீர்க்க தரிசியின் இறுதித் தரிசனமா?

எழுதுபவர்: பெஃகி மஸன் (Peggy Mason)

முற்கால முனிபுங்கவர்களாலும், மஹா ஞானிகளாலும் கூறப்பட்டு, ஏட்டில் வடிக்கப்பட்டிருக்கும் பண்டைய தீர்க்க தரிசனங்கள் பலவற்றை சமஸ்கிருத அறிஞர்கள் பலர் மிகவும் புனிதமாகப் பேணிப் பாதுகாத்து வைத்திருக்கிறார்கள். இவ் விபரங்கள் - சகுந்தலா பாலு அவர்களின் "வாழும் தெய்வங்கள்" (Living Divinity) எனும் நூலில் காணப்படுகிறது. அதில் "யான் கண்ட நிழற்படங்கள், இந்த இருபதாம் நூற்றாண்டில் திருவவதாரம் பெற்றிருக்கும் "சாயி அவதாரத்தின் விரிவான செய்திகளை தரக்கூடியதாகவுள்ளன. இவ் விபரங்கள் ஏறக்குறைய 5000 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட ஸுஹா எனும் ஏட்டுச் சுவடியில் பகவானின் அவதார ஜனனத்தின் நாள் - நேரம் - நட்சத்திரம் என்பவற்றோடு அவருடைய நாமமான சாயி எனும் திவ்ய நாமமும் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

இவ்வற்புத தீர்க்க தரிசன குறிப்புக்கள் இறை தூதுவர் - முகஹ்மது நபி (ஸல்) அவர்கள் கூறிய தீர்க்க தரிசன குறிப்புக்களோடு மிகவும் பொருத்தமாகப் பொருந்தியிருப் பதோடு, அவற்றில் ஒன்றாவது பிழையறாது இருப்பதையும் காண்கிறேன்.

மிகவும் அண்மைக்காலத்தில் தெஹ்ரான் நகரில் புத்தக விற்பனை நிலையமொன்றில் , ஓர் ஈரானிய எழுத்தாளர் அங்குள்ள நூல்களை அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கண்ணோட்டம் விட்டார். அப்பொழுது காத்திராப் பிரகாரமாக அங்கிருந்த நூற்தொகுதியை காணும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. அத் தொகுதி நூலே 25 தொகுதியாக வெளியிடப்பட்ட "பேராழியின் ஒளி" (The Ocean of Light) எனும் முகஹ்மது நபி(ஸல்) அவர்கள் அமரத்துவம் அடைந்து 700 ஆண்டுகளுக்குப் பின், அவருடைய சீடர்களாற் சேகரிக்கப்பட்டு, தொகுக்கப் பெற்றவையாகும். "பேராழியின் ஒளி" எனும் இந்நூலின் 13 வது தொகுதி - மெஹ்டி மௌத் (Mehedi Moud) என அராபிய மொழியிற் கூறப்படும். அதன் பொருளாவது - "வாக்களிக்கப்பட்ட மஹாகுரு (The Great Teacher that was Promised) எனபதாகும், இம் மஹாகுருவே - "பூவுலகின் முதல்வர்" (Master of the world ) "காலத்தின் முதல்வர்", "இறைவனின் தலைவர்" "நிலவுலகிற் தோன்றி இருக்கும் இறைவனின் ஒரு பெரும் பகுதி", "பேசும் - உபதேசிக்கும் கடவுள்" என்றெல்லாம் புகழப்படுபவராகும். இவற்றிலும் மேலாக - முஹம்மது நபி (ஸல்) அவர்கள், எதிர்வரும் தீர்க்கதரிசியின் அங்க அடையாளங்கள் சாமுத்திரிகா லட்சணங்கள் என்பவற்றை, தீக்ஷயண்யமாக கண்டு கொள்ள வகை செய்யுமுகமாகப் பற்பல அறிகுறிகளையும், அவதானங்களையும் தாராளமாக தந்துள்ளார்கள்.

ஒரு சமயம் நபி (ஸல்) அவர்களின் சீடர்கள், அவரை அணுகி, "தாங்கள், பூவுலகின் முதல்வர் என்பது இல்லையா?" என்று கேட்டார்கள். அதற்கு அவர், அவ்வாறு இல்லை என்று கூறியதோடு, இதுகாலவரை வராத இறைதூதுவர்களில் ஒரு தீர்க்கதரிசி இனி சகல வல்லமையும் பூண்டு வருவார் என்றுந் தீர்க்கதரிசனம் புகன்றார். இந்நூல் மூலம், அவர் கூறிய தீர்க்கதரிசியின் விபரங்கள் வருமாறு:

1) அத் தீர்க்கதரிசியின் சிரசில் கேசங்கள் அடர்ந்து, வெளிப்போந்து வியாபித்து விளங்கும்.
2) அவருடைய நெற்றி பருத்தும் உட்குவிந்தும் விளங்கும்.
3) அவருடைய நாசி சிறிதாய், சிறிது தள்ளியபடி வெளிப்போந்து, வியாபித்து விளங்கும்.
4) அவருடைய முன் வாய்ப்பற்கள் இடையிட்டு கொண்டிருக்கும்.
5) அவரது கன்னத்தில் ஒரு சிறு காய் போன்ற கருமச்சம் விளங்கும்.

**"ஏறக்குறைய 5000 ஆண்டுகளுக்கு முன் எழுதப் பட்ட ஸுஹா எனும் ஏட்டுச் சுவடியில் பகவானின் அவதார ஜனனத்தின் நாள் – நேரம் – நட்சத்திரம் என்பவற்றோடு அவருடைய நாமமான சாயி எனும் திவ்ய நாமமும் குறிப்பிடப் பட்டிருக்கிறது."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) அவருடைய தாடி, மீசை தெரியாதவாறு எப்பொழுதும் சுத்தமாகச் சவரஞ்செய்யப் பெற்றிருக்கும்.

7) அவருடைய ஆடை அனற் சுவாலை போல் விளங்கும்.

8) அவர் ஈரங்கி (ஓர் உள்ளங்கியும், வேஷ்டியும்) அணிவார்.

9) அவருடைய முகவிலாசம் ஒரு வேளையில் செம்பொன் நிறமாயும், மறுவேளையில் பொன்னிறமாயும், சில வேளையில் இருண்ட கருநிறமாயும் ,வேறு வேளைகளில் வான் மதி போல் பிரகசமாயும் விளற்கும்.

10) அவருடைய உடல், அளவிற் சிறிதாயினும், அவர் உந்தி பெரிதாகவே இருக்கும்.

11) அவரது கால்கள் ஓர் இளஞ் சிறுமியின் கால்கள் போல் இருக்கும்.

12) பிறப்பிலிருந்தே அவருக்கு உலகின் சகல சமயங்களினதும் போதனைகள் மனனமாக இருக்கும்.

13) உலகின் தொடக்க நாள் முதலான சகல அறிவியலும், அறிவும் அவருடைய சிரசில் (சிந்தனை) இருக்கும்.

14) இறைவனிடம் நீ கேட்கும் பொருட்கள் அனைத்தையும் உலகின் முதல்வரான அவர் உனக்களிப்பார்.

15) உலகின் சகல புதையல்களும் அவருடைய காலடியில் இருக்கும்.

16) கனதியிற் குறைந்த சன்மானங்களை அவர் வழங்குவார்.

17) அவரது மெய்யடியார்கள் ஒரு மாபெரும் மர (பேரால மரம்) நிழலிற் சங்கமிப்பார்.

18) அவர் அடியார்களிற் பெரும்பாலானோர் (இந்துக்கள் போல்) நெற்றியில் திலகமிடுவார்.

19) அடியார்களுக்கிடையில் அவர் சென்று, அவர் தம் சிரசினை ஸ்பரிசித்து, ஆசி வழங்குவார்.

20) அவரைக் காணும் ஒவ்வொரு கண மட்டுமல்லாது அருபமாக நிற்கும் சகல ஜீவன்களும் மகிழ்வுடன் விளங்கும்.

21) இம் மண்ணுலகில் அவர் 95 ஆண்டு காலம் வாழ்வார். (அதனை சத்திய சாயபாபா, தான் கொண்டிருக்கும் தூல சரீரத்தில் 96 வயது வரை தாங்குவார் என்று கூறியிருப்பதை இங்கு நினைவு கூர்தல் நன்று. பொதுவாக இந்தியர்கள் தாம் பிறந்த முதலாவது நாளை - முதலாவது பிறந்த நாளாக கொள்வர் என்பதைக் கொண்டு இக்கூற்றினையும் சிந்திப்பது நன்று

22) அவரது அடியார்கள் அவரைத் தரிசிப்பதற்காக தமது கழுத்துக் களைக் கொக்குபோல் வளைத்து நிற்பர்.

23) அவரது இறுதி 20 ஆண்டுகளில் அனைத்துலகினதும் ஏக மன்னர் போல் விளங்குவார். ஆயினும் அப்பொழுதும் உலகின் மூன்றிலொரு பங்கு மக்களே அவரில் நம்பிக்கை கொண்டிருப்பார். அதிலும் முஸ்லீம்கள் அவர் மறைவுக்கு (கி.பி 2012 இல்) ஒன்பது ஆண்டுகள் முன் அதாவது - கி.பி 2003 இல் தான் அவரை இனங்காண்பார்.

24) ஒரு மலையில் அவர் வாழ்வார். (பிரசாந்தி நிலைய ஆசிரமம், ஒரு மலையிற் அமைந்திருக்கிறது என்பதை இங்கு நினைவிற் கொள்வது நன்று)

25) அவரது இல்லம், சற்சதுரமாயிருக்கும்.

26) அவர் உலகை பிரகாசமாயும், அமைதியுடைய தாயும் இருக்கச் செய்வார்.

27) “ஆதலால், எதுவித ஏமாற்றமுமின்றி நீ - உலக முதல்வரானவர் தனது ஊனடலில் திருவாய் மூலம் தரும் காட்சியை உணர்ந்து கொள்ளக் கடவாய்”

ஸ்ரீ சத்திய சாயி பாபா தனது உடலுக்குள் இருந்து முட்டை வடிவ இலிங்கத்தை வெளியேற்றும் அற்புத நிகழ்வானது, உலக வரலாற்றிலேயே மிகவும் விசேடமானதாகும். முன் கூறிய, தீர்க்கதரிசன கூற்றுக்களிலிருந்து இது மிகவும் சிறப்பாகக் குறிப்பிடற்குரியதாகும். மேலும் இது - மிகவும் ஆழமான கருத்துடைய செயற்பாடாகவும் கருதப்படுகிறது. அத்துடன் மேலே கூறப்பட்ட தீர்க்கதரிசனக் கூற்றுக்கள் யாவும் ஸ்ரீ சத்திய சாயி பாபாவுக்கு பொருத்த மாகவும், தொடர்புடையதாகவும் இருப்பதைக் காணலாம். முகஹமது நபி(ஸல்) அவர்கள் தனது அடியார்களுக்குக் கூறிய தீர்க்கதரிசனக் கூற்றுக்களின் உண்மையான ஆன்மீகம் அவர்களுக்கு இடையிற் குன்றும், என்றும் கூறியுள்ளார். அதனைக் குறிப்பிடும் பொழுது -

“இனிவரும் தீர்க்கதரிசியை நீங்கள் இலகுவில் இனங்கண்டு கொள்ள மாட்டீர்கள். ஏனெனில் அப்பொழுது நீங்கள் மிகவும் அறியாமையில் மூழ்கிக் கீழ்நிலையில் இருப்பீர்கள். விரல் விட்டு எண்ணக்கூடிய உங்களிற் சிலரே அவரைக் காண முடியும்.”

“கிறிஸ்தவர்களும் ஏனைய சமயிகளும் அவரைக் காண முடிந்தாலும் முஸ்லீம்கள் மிகவும் கீழ் நிலையில் இருப்பதால் அவர் மறைந்து ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னரே அவர் பற்றிய உண்மைகளை உணர்வார்கள். மசூதிகளுக்குப் பலகோடி ரூபா பணத்தை நீங்கள் செலவு செய்வீர்கள். ஆனால் அங்கு வணங்குவதற்கு யாருஞ் செல்ல மாட்டீர்கள்”

“அல்குர் ஆன்” நூலை மிகவும் அழகாகச் சித்திர வேலைப் பாடுகளுடன் கட்டி வைத்திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்பீர்கள். ஆனால் அதனுள் அடங்கும் உட்பொருளை ஒருவரும் புரிந்து கொள்ள மாட்டீர்கள்."

"மோஸஸின் உண்மையான போதனைகள் யாவுங் குகையில் மறைந்திருக்கும். உலக முதல்வர் வந்து அதன் உட்பொருளைத் தருவார்."

மேலே கூறப்பட்ட ஈரானிய எழுத்தாளனின் கூற்றுப்படி, பேராழியின் ஒளி" எனும் இந்நூலே அராபிய கிரந்தத்தில் உள்ள உண்மையான மொழி பெயர்ப்பாகும். இந்நூல் பாரசிக மொழியில் இருக்கிறது. ஆயினும் இந்நூலாசிரியர் இதற்கான ஓர் ஆங்கில மொழி பெயர்ப்பை எதிர்பார்த்து நிற்கிறார். இதனிடையே, பல விசாரணைகளும், ஆய்வுகளும் நடைபெற்றன. ஆவண ரீதியான சான்றுகளால் குறிப்பிடப்பட்ட தீர்க்கதரிசனக் கூற்றுக்களை உறுதிப்படுத்து முகமாக, பல முயற்சிகளும் எடுக்கப்படடு வருகின்றன.

13 ஆவது போப் ஜோன் ஆண்டகை அவர்கள் இறப்பதற்கு முன்பு, ஒரு குறிப்பினையும் எழுதிச் சென்றுள்ளார். அதன் படி "பாதணியற்ற இருண்ட சரும மேனியுடைய ஒரு சிறிய மனிதன் செந்நிற அங்கியணிந்து, வத்திக்கான் பொறுப்பை ஏற்பார். ..... என்று குறிப்பிட்டுள்ளார். "பொறுப்பை ஏற்பார்" என்ற பதம், "பதிலீடு" என்றே பொருள் கொள்ளப்படும். இத்தாலிக்கு வருகை தரும் விருந்தினர் பலருக்கு அங்குள்ள விடுதிப் பரிசாரகர்கள் தெரிந்து வைத்திருக்கும் சாயி பாபாவின் திருநாமம் பற்றிய தகவல்கள் மிகவும் சுவையுடையதாக இருப்பதைக் காணலாம். கி.பி 2000 ஆண்டினை நெருங்க நெருங்க நாமும் எமது கண்களையும் இதயங்களையும் மூடிக் கொண்டிராமல் இருப்போமாக" "முகஹமது நபி (ஸல்) அவர்கள் தமது சீடர்களுக்குக் கூறிய உபதேசங்களில்....

"உங்களது இரு கரங்களையும் அவர் பால் நீட்டி அவரோடு நீங்கள் இணங்கி, இணைந்து இருந்திருக்கலாம். ஆனால் நீங்கள் அவ்விதஞ் செய்யாது அவரை இழந்து விடுவீர்கள்."

என்று விளித்திருக்கிறார். இது, இன்றைய முஸ்லீம்களுக்குப் பொருந்துவது போல், வேறு பலருக்கும் பொருந்தி நிற்கிறது.

ஜெய் சாயிராம்

தமிழாக்கம்:

தென்மயிலை.அநு.வை.நாகராஜன்

(நன்றி: அவதார உண்மைகள்)

தேடிஅளித்தவர்: திருமதி கலா மகேந்திரராசா

குறிப்பு:

23 ஆவது அடையாளத்தில் அவருடைய மறைவு 2012 இல் என்பதாக குறிப்பிடப்பட்டுள்ளதை அவதானிக்குக




**" எல்லா மதங்களும் மனிதன் தன் இதயத்தைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்று கூறுகின்றன. கோபம், தாபம், பொறாமை, ஆசை, வெறுப்பு இவற்றிலிருந்து நம் இதயங்களை விடுவிக்க வேண்டும். கடவுளின் கருணை எமக்கு வெகுமதியாகக் கிடைக்கும் என்று எல்லா மதங்களுமே கூறுகின்றன. நான் மேல், இன்னொருவன் கீழ் என்பதெல்லாம் நமது அகம்பாவம் நிறைந்த இதயத்தில் இருந்து தோன்றுவது தான். யாராவது தன்னை மேலானவன் என்று நினைத்தால் அல்லது தங்களது மதம் உயர்ந்தது என்று நினைத்தால் அவன் கடவுள் நம்பிக்கையை விட்டு வழுவியிருக்கிறான் என்று அர்த்தம்."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# உணவே பிரம்மம்




எல்லா உயிரினங்களுக்கும் பொது வானதும், தவிர்க்க முடியாததும் உணவு. உணவு தேவையில்லையாயின் உலக இயக்கமே இல்லை என்றிகது கீதை.

உணவிலிருந்தே எல்லா உயிர்களும் பிறக்கின்றன. உணவினாலேயே வாழ்கின்றன. பின் உணவின் உள்ளே தான் மீண்டும் செல்கின்றன. ஆக உணவை சார்ந்தே எல்லா இயக்கமும் நடைபெறுகின்றன. எனவே உணவே பிரம்மம் என்கிறது. தைத்திரீய உபநிஷதம்.

இவ்வரிய உண்மையை நிரூபித்துக் காட்டியவர் சீர்டிசாயி பாபா. அவர் தம் வாழ் நாளில் ஒருபோதும் பட்டினியிருந்ததில்லை. மற்றவர்களையும் பட்டினியிருக்க அனுமதித்ததும் இல்லை. விரதமிருந்து தம்மை தரிசிக்க வருபவர்களை உணவு அருந்திய பிறகே சந்திக்க அனுமதித்தார். அதற்கு பாபா கூறிய அறிவுரை விரதமிருந்து வெறும் வயிற்றுடன் இருப்பவர்கள் அமைதியாக இருப்பதில்லை. பசியுடனும், வெறும் வயிற்றுடனும் இருப்பவர்களால் கடவுளை அறிய முடியாது. முதலில் ஆன்மா சாந்தப்பட வேண்டும். வயிற்றில் ஈரமில்லையாயின் எந்தக் கடவுளையும் அறிய முடியாது. கண்களால் பார்க்கவோ, காதுகளால் அவரது புகழை கேட்கவோ இயலாது. சுருக்கமாகக் கூறவதானால் நமது எல்லா உறுப்புக்களும், அதற்குரிய போஷாக்கை பெற்று நன்றாக இருக்கும் போது தான் கடவுளை அடைவதற்குரிய பக்தி மற்றும் சாதனைகளை நாம் பெற முடியும். பசியோடு இருத்தலோ, மிக அதிகமாக உண்பதோ ஆகாது. உடலுக்கும் உள்ளத்துக்கும் மிதமான போக்கில் இருத்தல் உண்மையில் நல்லது.



ஸ்ரீ சத்திய சாயி பாபா கூறுகிறார்:

செல்வம், சொத்து, உடை முதலான தானங்கள் செய்வதற்கு விவேகம் தேவைப் படுகிறது. ஆனால் உணவு விஷயத்தில் அத்தகைய யோசனைகள் எதுவும் தேவை யில்லை. நண்பகல் நேரத்தில் யார் வேண்டுமானாலும் நம் வீட்டு வாசலில் யாசித்து வரட்டும். அவர்களுக்கு உணவு அளிக்கப்பட வேண்டும். மற்ற எல்லா தானங்களின் மூலமும் கிடைக்கும் புண்ணியத்தை விட அன்னதானத்தின் மூலம் கிடைக்கும் புண்ணியமே மிகவும் சிறந்தது

**சீர்டிசாயி பாபா. அவர் தம் வாழ் நாளில் ஒருபோதும் பட்டினியிருந்ததில்லை. மற்றவர்களையும் பட்டினியிருக்க அனுமதித்ததும் இல்லை. விரதமிருந்து தம்மை தரிசிக்க வருபவர்களை உணவு அருந்திய பிறகே சந்திக்க அனுமதித்தார்.**

ஓம் ஸ்ரீ சாயிராம்

# நித்திய சொரூபம் சத்திய சாயி....

பகவான் சத்திய சாயி பாபா பரம்பொருள், நித்தியமானவர், நிரந்தரமானவர், நம்பிச் சரணடைந்தோரை என்றும் காக்கும் இறைவன். சிவசக்தி ஸ்வரூபராய் உலகெங்கும் வழிபடப்படும் உன்னதத் தெய்வம்

சுவாமி பாபாவின் வாழ்வில் ஒவ்வொரு கட்டத்திலும் லீலைகள், மகிமைகள், உபதேசங்கள் வெளிப்படும் என்று சொல்லப் பட்டாலும், எப்போதுமேஇந்த மூன்றும் சேர்ந்த அற்புதமாகத்தான் சுவாமி இருக்கிறார். தன்னையே நம்பி, மனமுருகி கரைந்துருகும் பக்தர்களை அன்புடன் அரவணைத்துக் காத்து அருள் பொழிவதும், அனுக்கிரகம் புரிவதும் அவருடைய சாசுவதமான தெய்வீக இயல்பாக இருக்கின்றன. சாயி தந்த தெய்வீக அனுபவங் களை, உலகெங்கும் உள்ள பக்தர்கள் சொல்லத் தொடங்கினால், அது ஒவ்வொன்றும் ஒரு புத்தகமாகி விடும். நானறிந்த சுவாமியின் சில லீலைகளை, மகிமைகளை, சுவாமியின் சங்கல்ப்பப்படி உங்களுடன் பகிர்ந்து கொள் கிறேன்.

சுவாமி சத்திய சாயி பாபா ஒவ்வொரு வருக்கும் தரும் அனுபவங்கள் முழுமையானவை. அவர்களுக்கு மட்டுமே பிரத்தியேகமாக அருள் தந்து கொண்டிருப்பதைப் போன்ற அனுபவத்தை, சுவாமி ஒவ்வொருவருக்கும் தருகிறார்.

டாக்டர்.சுந்தரவல்லி ஆங்கிலப் பேராசிரி யை. பலதுறைப் படிப்பையும் பல பட்டங்களும் பெற்றவர். சமூகசேவகி, மனநல மருத்துவ ஆலோசகர், வைணவக் குடும்பம், குழந்தைப் பேறு இல்லை. கணவர் சுரேஷுக்கு அடிக்கடி வேலையில் மாற்றல் வந்து கொண்டிருந்ததால் குற்றாலம், மதுரை, கொடைக்கானல் என்று சுந்தரவல்லி, கல்லூரி கல்லூரியாக மாறிப் போய்க் கொண்டிருந்தார். அதே ரீதியில் விஜயவாடாவில், கல்லூரியின் முதல்வராக சில காலம் இருந்தார். தெலுங்கு சரியாகத் தெரியாததால், அங்கு பெரிய பிரச்சினையும், குழப்பமும் அவருக்கு ஏற்பட்டது. நம்பிக்கையான சிலர் மூலம் சிக்கலான சமயங்களில் சமாளித்தார்.

ஒரு முறை சத்திய சாயி சமித்தியைச் சேர்ந்த பக்தர் ஒருவர், சுவாமியின் பிறந்தநாள் தொடர்பான குரு விழாவில் பேச சுந்தரவல்லியை அழைத்தார். இவரோ "சாயி பாபாவைப் பற்றி தனக்கு ஒன்றும் தெரியாது, வரவில்லை" என்றார். வந்தவரோ திரும்பத் திரும்ப வந்தார். புத்தகம் தந்து, "ஆன்மீக மேன்மை பற்றித்தானே பேசப் போகிறீர்கள். உங்களைப் போன்ற மெத்தப் படித்தவர்கள் வந்து பேச வேண்டும்." என்று வற்புறுத்தினார். சரி என்று அழைப்பை ஏற்று, அந்த சாயி சமித்தி விழாவுக்கு இவர் போன போது, தனது கல்லூரியில் பணி புரியும் இராமகிருஸ்ணன் என்ற பேராசிரியரை அங்கே பார்த்தார். அந்த சுந்தரவல்லியை வரவேற்று "மேடம் நீங்க தெலுங்கில பேசுங்க" என்றதும் இவருக்கு கோபம் வந்து விட்டது, "தெலுங்கு தெரியாதவள் எப்படித் தெலுங்கில பேச முடியும்?" வம்புல மாட்டி விடப் பார்க்கிறீர்களா? என்றார். ராமகிருஸ்ணன் சொன்னார். "சுவாமி பாபா உங்களுக்குள்ளிருந்து பேசுவார்."

பிறகு கோபத்தை அடக்கிக் கொண்டு, தன் முறை வந்ததும் வழக்கம் போல் ஆங்கிலத்தில் பேசினார் சுந்தாவல்லி. சுமார் 50 நிமிடங்களுக்கு மேல் பேசினார். பக்தர்கள் கைதட்டியபடியே இருந்தனர். பேசி முடித்ததும் ராமகிருஸ்ணன் மேடைக்கு ஓடி வந்து "அழகாக தெலுங்கில் பேசி அசத்தி விட்டீர்களே என்று பாராட்ட, குழப்பத்துடன் இவர் மறுத்து "இல்லை இல்லை நான் ஆங்கிலத்தில் தான் பேசினேன்" என்றார். ராமகிருஸ்ணன் உடனே மைக்கைப் பிடித்தார்.. சாயிராம், சுவாமியைப் பற்றி இங்கு பேசிய மேடம் ஆங்கிலத்தில் தான் பேசினார்களாம் என்று சொல்ல அவ்வளவு தான் எல்லோரும் சாயிராம், சாயிராம் என்று எழுந்து கைதட்டினார்கள். சுந்தரவல்லிக்கு அப்புறம்தான் தெரிந்தது இவரது 50 நிமிடப் பேச்சும் பக்தர்களுக்கு தெலுங்கில் தான் கேட்டிருக்கிறது, என்பது. முழுக்கவும் சுவாமி இவருக்குள்ளிருந்து தெலுங்கில் பேசியிருக்கிறார். இவருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. அன்றிலிருந்து தெலுங்கில் இவரால் சரளமாகப் பேச முடிந்தது. சுவாமி இவருக்குத் தரும் அனுபவங்கள் அற்புதமானவை. இப்போது புட்டபர்த்தியில் தங்கி, கணவருடன் சாயி சேவையில் ஈடுபட்டு வருகிறார். சுந்தரவல்லி.

நன்றி: சக்தி விகடன் 17.05.2011

**அன்றிலிருந்து தெலுங்கில் இவரால் சரளமாகப் பேச முடிந்தது. சுவாமி இவருக்குத் தரும் அனுபவங்கள் அற்புதமானவை. இப்போது புட்டபர்த்தியில் தங்கி, கணவருடன் சாயி சேவையில் ஈடுபட்டு வருகிறார். சுந்தரவல்லி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# என்னோடு எப்போதும் சுவாமி

, சென்னை உயர் நீதி மன்றத்தில் நான் வழக்கறிஞராகத் தொழில் செய்து கொண்டிருந்த சமயம் அது. ஷீர்டி சாயி பக்தர் ஒரு வழக்கை என்னிடம் ஒப்படைத்தார். அந்த வழக்கு நல்ல விதமாக முடிவடைந்தது.

அந்த நண்பர் என்னை மயிலாப்பூர் ஷீர்டி சாயி கோயிலுக்கு அழைத்துச் சென்றார். அவர் அழைத்தார் என்பதற்காகக் கோயிலுக்குச் சென்று சிறிது நேரம் கழித்தேனே தவிர எனக்குள் ஈடுபாடு ஏற்பட்டுவிடவில்லை. சில நாட்களுக்குப் பிறகு ஒரு வழக்குக்காகத் டில்லி உச்ச நீதி மன்றம் செல்ல வேண்டியிருந்தது.

மாலை 6.30 மணிக்கு விமானம் புறப்பட்டது. 7.30 மணி அளவில் உணவு பரிமாறப்பட்டது. பயணிகள் அனைவரும் உணவு அருந்திக் கொண்டிருந்தனர்.

திடீரென ஒரு குலுக்கல் விமானம் தனது கட்டுப்பாட்டை இழந்து நிலை தடுமாறி வேகமாக பூமியை நோக்கிச் செல்ல ஆரம்பித்தது. பயணிகள் அனைவருக்கும் ஓர் அவசர அறிவிப்பு, பயணிகள் தங்கள் இருக்கைகளில் பெல்ட்டுகளை இறுக்கிக் கட்டிக் கொள்ளும்படி

அவ்வாறே அவசரம் அவசரமாக பெல்ட்டுகளை இறுக்கிக் கட்டிக் கொண்டோம். 35 ஆயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்த விமானம் பூமியை நோக்கி அதிவேகமாகக் கீழே விழுவதை அனைத்து பயணிகளும் உணர்ந் தோம்.

எனது மனதில் கலக்கம். "விமானம் கீழே விழுந்து நொருங்கப் போகிறது. இது தான் எனது கடைசி நேரம்" என்ற உணர்வு என்னை நடுநடுங்க வைத்தது. எனது மனைவியைப் பற்றியும், குழந்தைகளைப் பற்றியும் நினைத்தேன்.

நிலை குலைந்த அந்த நேரம் ஷீர்டி சாயி கோயில் தரிசனம் எனது நினைவுக்கு வந்தது. கண்ணை மூடினேன். ஷீர்டி சாயியை நினைத்தேன்.

"பாபா என்னைக் காப்பாற்று" அந்த நேரம் திடீரென்று எனது மனக்கண் முன் சத்ய சாயி பாபாவின் உருவம் தோன்றியது. அபயஹஸ்தம் அளித்துக் கொண்டிருந்தார்.

ஆச்சரியத்திலும் ஆச்சரியம். நான் கூப்பிட்டது. ஷீர்டி பாபாவை என் முன்னால் காட்சி அளித்த உருவமோ சத்திய சாயி பாபா. இப்போது என் மனதில் குழப்பம்.

சுழற்காற்றில் சிக்கிக் கொண்டு கீழ் நோக்கிப் பாய்ந்து கொண்டிருந்த விமானம் 10 நிமிடத்தில் மேல் நோக்கி பறக்க ஆரம்பித்தது. சீரான நிலைப்பாட்டை அடைந்து 35 ஆயிரம் அடி உயரத்தில் மீண்டும் பறக்க ஆரம்பித்தது. நாங்களும் சீரான மூச்சுவிட ஆரம்பித்தோம்.

ஒரு பெரிய விபத்தில் இருந்து காப்பாற்றப்பட்ட உணர்வு. நேரடியாக சென்னை செல்ல வேண்டிய அந்த விமானம் இடையில் ஹைதராபாத் விமான நிலையத்தில் இறங்கியது.

அதிர்ச்சியில் இருந்து மீண்ட மகிழ்ச்சியில் விமான ஓட்டி எங்களுக்கு அறிவித்தார். "சுழற்காற்றின் சுழற்சியில் சிக்கிக் கொண்ட விமானம் ஆண்டவனின் அருளால் விடுவிக்கப்பட்டு காப்பாற்றப்பட்டிருக்கிறோம்.

அப்போது தான் சத்திய சாயி பாபாவின் ஆசியால் தான் நான் காப்பாற்றப் பட்டிருக்கிறேன் என்பதை உணர்ந்தேன். மானசீகமாக அவருக்கு நன்றியைத் தெரிவித்தேன். பின் விமானம் புறப்பட்டுச் சென்னை வந்தடைந்தது.

அதன் பின் சென்னையில் உள்ள சத்திய சாயி பாபாவின் கோவிலுக்கு தவறாமல் செல்ல ஆரம்பித்தேன். சாயி புத்தகங்களை வாங்கி படிக்க ஆரம்பித்தேன். அவற்றில் என்னை அறியாத ஒரு லயிப்பு, பாபாவின் மீது ஒரு ஈர்ப்பும் ஏற்பட்டது. அவரைப் பார்க்க வேண்டும். அவரது பாத நமஸ்காரம் பெற வேண்டுமென்ற ஆவலும் துடிப்பும் எனக்குள் ஏற்பட்டது.

சில மாதங்களுக்குப் பிறகு பகவான் பாபா

**சென்னையில் உள்ள சத்திய சாயி பாபாவின் கோவிலுக்கு தவறாமல் செல்ல ஆரம்பித்தேன். சாயி புத்தகங்களை வாங்கி படிக்க ஆரம்பித்தேன். அவற்றில் என்னை அறியாத ஒரு லயிப்பு, பாபாவின் மீது ஒரு ஈர்ப்பும் ஏற்பட்டது. அவரைப் பார்க்க வேண்டும். அவரது பாத நமஸ்காரம் பெற வேண்டுமென்ற ஆவலும் துடிப்பும் எனக்குள் ஏற்பட்டது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடைக்கானல் வந்திருப்பதாக அறிந்து அங்கு சென்றேன். மாலை தரிசனத்தின் போது பகவான் நான் அமர்ந்திருந்த வரிசை வழி வந்து என்னருகில் நின்று கொண்டு விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ள ஆரம்பித்தார்.

அந்த நேரம் பார்த்து அவரது பாதக் கமலங்களில் விழுந்து அவற்றைப் பற்றிக் கொண்டேன். எல்லையில்லா மகிழ்ச்சி. சொர்க்கத்தில் நான் இருந்த அந்தச் சில நிமிடங்களுக்குப் பிறகு எழுந்தேன். சுவாமியின் ஆசீர்வாதம் பரிபூரணமாகக் கிடைத்த மகிழ்ச்சியோடு, நான்கு நாட்களுக்குப் பின்னர் என்னைக் கொடைக்கானலுக்கு கூட்டிச் சென்ற நண்பர் என்னிடம் ஒரு புகைப்படத்தைக் கொடுத்தார். ஆஹா! என்ன ஆச்சரியம்! நான் சுவாமியின் பாதங்களைப் பற்றிக் கொண்டிருந்த பாத நமஸ்காரக் காட்சி. அது மட்டுமா?

அந்தப் படத்தில் சுவாமி தன்னுடைய கையைத் தூக்கி ஆசீர்வதித்துக் கொண்டிருந் தார். அந்த நிமிடம் முதல் நான் பாபா அவர்களின் தீவிர பக்தனாக மாறத் தொடங்கினேன்.

அது முதல் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு வழக்கறிஞர் வீட்டிலும் சாயி பஜன் நடக்கிறது. அது இன்றளவும் தொடர்கிறது.

பஜன், பக்திச் சொற்பொழிவு என்பது மட்டுமல்லாமல் வழக்கிஞர்கள் கல்வி வட்டங்கள் மூலம் பொதுச் சேவையும் செய்து வருகிறார்கள். இந்த கல்வி வட்டம் தொடங்கிய 6 மாதத்தில் எனக்கு சென்னை உயர் நீதி மன்ற நீதிபதியாக பதவி உயர்வு கிடைத்தது. புட்டபர்த்திக்கு சென்று சுவாமியை தரிசித்து ஆசி பெற்று பதவியை ஏற்றுக் கொண்டேன்.

தமிழ்நாடு உயர் நீதி மன்றத்தில் 10 ஆண்டுகள் 6 மாதங்கள் நீதியரசராகப் பணி புரிந்தேன். புகழ் வாய்ந்த தீர்ப்புக்களை பாபாவின் ஆசியால் என்னால் வழங்க முடிந்தது.

2006 செப்டம்பரில் ஜார்க்கண்ட் மாநில தலமை நீதிபதியாகப் பதவி உயர்வு பெற்றேன். அங்கு பணி புரிந்தது. 18 மாதங்கள்.

2008 மே மாதம் தலைமை நீதியரசர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றேன். புதுடில்லியில் மின்சாரம், பெற்றோலியம் மேல் முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் தலைவராக நியமிக்கப்பட்டேன்.

மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் தலைவர் என்ற முறையில் லண்டனில் நடைபெற்ற ஒரு மகாநாட்டுக்கு அழைக்கப்பெற்றேன். எனக்கு பாஸ்போர்ட்டும், விசாவும் உடனே கிடைத்து விட்டது. எனது மனைவி பத்மினிக்கு விசா கிடைப்பதில் சில சிக்கல்கள். பயணம் தடைப்பட்டுப் போகிற சூழ்நிலை. சுவாமியைப் பிரார்த்தனை செய்தேன். உடனே சிக்கல்கள் தீர்ந்தன. கடைசி நாளன்று விசா கிடைத்தது. நாங்கள் லண்டன் சென்றோம். லண்டன் மாநாட்டில் பேசினேன்.

லண்டனில் முருகன் கோயிலுக்குச் சென்றோம். அங்கு சாய் மன்ற நிர்வாகி படேல் தனது வீட்டில் நடக்கும் சாயி பஜனைக்கு அழைத்தார். சென்றோம். அது வீடு அல்ல. அதை ஒரு கோயிலாக மாற்றி இருந்தார்.

எங்கு பார்த்தாலும் சுவாமியின் படங்கள். எங்கும் வீபூதி மணம். எல்லா இடங்களில் இருந்தும் வீபூதி கொட்டிக் கொண்டிருந்தது. பாபா எப்போதும் எங்கள் கூடவே இருக்கிறார் என்ற எண்ணத்திற்கு சாட்சியாக அமைந்த நிகழ்ச்சிகள் இவை. நான் உயர்நீதி மன்ற நீதிபதியான 1966 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு நாளும் சுவாமிக்கு என்னுடைய பிரார்த்தனைகளை அனுப்புவேன். சுவாமிதான் என்னை வழிநடத்துகிறார். சுவாமி தான் என்னை உயர்த்துகிறார் என்று தினம் தினம் உணர்கிறேன். என் நன்றி உணர்வை சுவாமி மேல் வைத்திருக்கிற பக்தி மூலமும், சமுதாயத்திற்குச் செய்கிற சேவை மூலமும் வெளிப்படுத்துவேன். சுவாமியோடு எப்போதும் நான், என்னோடு எப்போதும் சுவாமி

ஜெய் சாயிராம்

(நன்றி: தினமணி 2011)

நெத்து விரித்துப் பிடிக்கலாம்

மடித்துக் கையில் சுருட்டலாம்

அடித்து மழை பெய்தாலும்

சுருட்டி வெயில் அடித்தாலும்

பிடிக்கக் குடை விக்குதே

கோட்டை சுப்பண்ணா கடையிலே

(சத்தியா பள்ளிக்கூடத்தில் படிக்கும் காலத்தில் எழுதிய பாட்டு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத்திலிருந்து கேட்டால் கிடைக்கும்


குருவின் மேல் பரிபூரண நம்பிக்கை வைத்து, அவர் சொல்லும் வார்த்தைகளை மந்திரமாகக் கொண்டால் நினைத்தது நடக்கும். அது என்ன வார்த்தை, என்ன வாக்கியம் என்ற ஆராய்ச்சியே கூடாது.

சுவாமி கூட்டம் ஒன்றில் பக்தர்களிடம் பேசிக் கொண்டிருந்தார். அப்போது பெண்ணொருத்தி,காணாமல் போன வைரத் தோடுகளை பற்றி கேட்டாள். உடனே சுவாமி ஏதாவது பொருள் தொலைந்து விட்டால் "காசி கால பைரவா" என்று மனமுருகிப் பிரார்த்தனை செய்தால், காணாமல் போன பொருள் கிடைத்து விடும்." என்றார் உடனே அந்தப் பெண் தொடர்ந்து மனமுருகிப் பிரார்த்தனை செய்ய, அந்த வைரத் தோடு வீட்டிலேயே ஒரு இடத்தில் கிடைத்து விட்டது. அதே நேரத்தில், சிவகாசியில் இருந்து வந்திருந்த இன்னொரு பெண்மணி, சுவாமியின் பேச்சைக் கேட்டும், அதன்படி அந்தப் பெண்ணுக்கு வைரத் தோடு கிடைத்ததை நினைத்தும் ஆச்சரியப்பட்டாள்.

பல வருடங்காக துக்கத்தில் மூழ்கியிருந்த அவளுக்கு நம்பிக்கை வந்தது. அவளுடைய மகன், காணாமல் போய் 17 வருடங்களாகி விட்டது. எங்கு தேடியும் கிடைக்கவில்லை. அவன் போன திசையும் தெரியவில்லை. பகவானின் அன்பும் அவர் சொன்ன மந்திரமும் மகன் கிடைத்து விடுவான் என்ற நம்பிக்கையை அவளுக்குள் ஏற்படுத்தின. காணாமல் போன தன் மகன் கிடைக்க வேண்டும் என்கிற வேண்டுதலுடன் ஊருக்குத் திரும்பிப் போன பெண்மணி, தீவிரமாக தினமும் "காசி கால பைரவா" என்று சொல்லிக் கொண்டே இருந்தாள். ஒரு மாதமாக அவள் பிரார்த்தனை, பலித்த நம்பிக்கையுடன் தொடர்ந்தது.

ஒரு நாள் திடீரென.... அவர் மகன் "அம்மா" என்று கூப்பிட்டபடி வந்து நின்றான். மகிழ்ச்சியில் திணறினாள் அவள். மகனை உபசரித்து மகிழ்ந்தவள் "எங்கிருந்து வருகிறாய்" என்று கேட்டாள்.

"பல இடங்களில் அலைந்து திரிந்து கொண்டிருந்த என்னை புட்டபர்த்திக்கு வரச் சொல்லி யாரோ அழைத்தார்கள். சரி அங்கேயும் போவோமே என்று சென்றேன். தரிசனத்தில் பாபா என்னை அழைத்து ஆசீர்வதித்து சாப்பிட வைத்து,



சிவகாசிக்குச் செல்லப் பணமும் கொடுத்து, "உடனே ஊருக்குப் போ! உன் அம்மாவிடம் போய்ச் சேர் என்று அனுப்பினார்." என்று மகன் சொல்லவும். நெக்குருகினாள் அந்தத் தாய். அவள் பாபாவின் மேல் கொண்ட நம்பிக்கையே மகனை வரவழைத்தது. அவள் தனது அக்கம்பக்கத்து ஜனங்கள், உறவுக்காரர்களையெல்லாம் அழைத்து மகன் வந்ததையும், சுவாமி எப்படி அனுப்பினார் என்பதையும் சொல்லி ஆனந்தித்தாள். "கடவுள் புட்டபர்த்தியில் இருக்கிறார். வாருங்கள் தரிசிக்கலாம் என்று ஊர்மக்கள், உறவு மக்கள் என 180 பேரை அழைத்துக் கொண்டு, புட்டபர்த்திக்கு சென்றாள். சுவாமியைத் தரிசித்து, அனைவரும் பேரானந்தம் அடைந்தனர்.

"வானத்து மீனை உன்னால் அளக்க முடியுமா? என் தெய்வீகத்தை உன்னால் அளக்க முடியாது. என்கிறார் சுவாமி பாபா. அவரது மகிமைகளுக்கு, லீலைகளுக்கு எல்லையே இல்லை!

பகவான் சத்திய சாயி பாபா தன் மீது அன்பும் நம்பிக்கையும் கொண்டு பக்தி செலுத்தும் அத்தனை பேருக்குள்ளேயும் இருக்கிறார். அனைவருடனும் வாழ்கிறார். அனைவரையும் வாழ வைக்கிறார். சுவாமி பாபாவின் பொற்பாத கமலங்களைப் பணிந்து அவரின் பேரருளைப் பெறுவோம்.

(நன்றி : சக்தி விகடன் 17.05.2011)

**"வானத்து மீனை உன்னால் அளக்க முடியுமா? என் தெய்வீகத்தை உன்னால் அளக்க முடியாது. என்கிறார் சுவாமி பாபா. அவரது மகிமைகளுக்கு, லீலைகளுக்கு எல்லையே இல்லை!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின்

# ஆன்மீகப் புரட்சி

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா மனித குலத்தை பேரன்பின் மூலம் ஒன்றுபடுத்த தோன்றிய அவதார புருஷராவார். 20 ஆம் நூற்றாண்டில் ஈடு இணையற்ற விஞ்ஞான தொழில்நுட்ப தகவல் பரிமாற்றங்கள் உச்சக்கட்ட வளர்ச்சியடைந்த அதே நேரம் இந்த உலகமே கண்டுணராத இரண்டு மாபெரும் உலக யுத்தங்களையும் அதனைத் தொடர்ந்து பல பயங்கர இயற்கை அழிவுகளையும் தன்னகத்தே கொண்டது. மாத்திரம் அன்றி பல பயங்கர அணு ஆயுதங்களையும் உருவாக்கியது. மனித குலத்தில் ஒரு இனத்திற்கு எதிராக இன்னொரு இனமும், ஒரு நாட்டுக் கெதிராகக இன்னொரு நாடும் மேலாதிக்கம் செலுத்த முற்பட்ட போது சகிப்புத் தன்மையும் அன்பும் நலிவடைந்து சுமார் 100 மில்லியன் மக்களை மனித குலமே கொன்றொழித்த கொடுமையை 20 ஆம் நூற்றாண்டிலேயே காண முடிந்தது. இத்தகைய ஒரு அவலம் நிறைந்த அன்பு அருகிப் போன சூழ்நிலையில் தான் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா அவதரித்தார்.

அக்கால கட்டத்தில் மனித குலத்திற்கு மிகவும் தேவையான தெய்வீக அன்பை தன் ஆயுதமாக கையில் ஏந்தி மனித குலத்தை ஒன்று படுத்தி வழிநடத்த தன் தெய்வீக செய்தியை 1940 ஆம் ஆண்டில் தனது 14 ஆம் வயதில் பிரகடனப்படுத்தினார். சமயம் ஒன்றே. அது அன்பு மதம், குலம் ஒன்றே அது மனித குலம், மொழி ஒன்றே அது இதய மொழி, கடவுள் ஒருவரே அவர் எங்கும் நிறைந்தவர். இத் தெய்வீக செய்தி வெறும் வார்த்தைகளாக நின்று விடவில்லை. உலகில் நாலாபுறங்களிலும் ஆன்மீக உந்து சக்தியோடு விரைவில் பரவி சுமார் 160 நாடுகளிலும் வாழும் பல்வேறுபட்ட இன, மத, மொழி, வேறுபாடுகொண்டவர்களை ஒன்றிணைத்து இதனால் ஒரே ஆன்மீக குடையின் கீழ் புட்டபர்த்தியில் உள்ள பிரசாந்தி நிலையத்தில் ஒன்றாக பஜனை பாடி ஆன்மீக சாதனைகள் புரிந்து தங்களது வேறுபாடுகளை மறந்து ஒரு மனதுடன் பகவான் வழியில் தமது வாழ்க்கையை வளப்படுத்தினார்கள். இது மனித குல வரலாற்றில் இதுவரை நாம் காணாத ஒன்றாகும். இதுவே பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் ஆன்மீகப் புரட்சியாகும்.

மனித குலத்தின் இதயங்களில் அன்பை விதைத்து சத்தியத்தை உணரச் செய்து தர்ம வழியில் அஹிம்சையை வளர்த்தெடுத்து சாந்தியை மனித மனங்களில் உருவாக்க இப்புரட்சி வழி வகுத்தது. மனித மனங்களில் அடிப்படை மாற்றங்களை உருவாக்கி இன, மத, மொழி வேறுபாடின்றி எல்லோரையும் அன்பு செலுத்தி எல்லோருக்கும் சேவை செய்ய பகவான் வலியுறுத்தினார். இந்த ஆன்மீக புரட்சி ஒரே நேரத்தில் இரண்டு வகையில் வழிப்படுத்தப் பட்டது. ஒன்று தனிப்பட்ட ஆன்மீக உள்ளார்ந்த மறுமலர்ச்சி ஆகும். இதனை தனது அன்றாட வாழ்க்கையில் இலகுவாக கடைப்பிடிக்க வழிகாட்டப்பட்டது. இதன் மூலம் தன்னில் இருக்கும் தெய்வீகத்தை அவன் உணர்வதோடு எல்லோரிடமும் இருக்கும் தெய்வீகத்தையும் அவன் உணர வழிவகுத்தது.

அடுத்தது அவரது ஆன்மீகப்புரட்சி உலக ளாவிய ரீதியில் மனித குலத்தை அன்பின் அடிப்படையில் ஒன்றுபடுத்தி சுயநலமற்ற சேவைக்கு வழிகாட்டியது. பிரார்த்தனை செய்யும் உதடுகளை விட சேவை செய்யும் கரங்கள் புனிதமானவை என்பதை உணரச் செய் சுயநலம் அற்ற சேவையின் மூலம் தமது தெய்வீகத்தை உணர வழி வகுத்தார். அது மட்டும் இன்றி ஏற்கனவே இருக்கும் மத நம்பிக்கைகளை

**இவ்வுலக வரலாற்றில் பிரான்சியப் புரட்சி, மேலும் சீனாவில் நடைபெற்ற கலாச்சாரப் புரட்சி மற்றும் இங்கிலாந்தில் நடைபெற்ற கைத்தொழில் புரட்சி என்பன அந்தந்த நாடுகளில் மட்டுமே நடைபெற்றன. ஆனால் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவால் அமைதியாக நடாத்தப்பெற்ற ஆன்மீகப் புரட்சி 160 நாடுகளில் ஒரே நேரத்தில் ஆன்மீக ரீதியாக சமத்துவத்தை உருவாக்கி கோடான கோடி மக்களை இணைத்தது. இதுவெ மாபெரும் ஆன்மீகப் புரட்சியாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலுப்படுத்தி வேற்றுமையில் ஒற்றுமை கண்டார். அதாவது இந்துவை சிறந்த இந்துவாகவும், பௌத்தனை சிறந்த பௌத்தனாகவும், கிறிஸ்தவனை சிறந்த கிறிஸ்தவனாகவும், இஸ்லாமியனை சிறந்த இஸ்லாமியனாகவும் அக்குவதே அவரது ஆன்மீகக் கொள்கையாகும். எனவே தான் எல்லா மதத்தை சார்ந்தவர்களும் பகவானின் பக்தர்கள் ஆனார்கள்.

தனிப்பட்ட ஆன்மீக வளர்ச்சிகளை மட்டும் இன்றி மனித குலத்திற்கான சுயநலம் அற்ற சேவையை பாரிய அளவில் 1965 ஆம் ஆண்டில் இருந்து ஆரம்பித்தார். இச் சேவை திட்டங்களுக்கு இந்தியாவில் உள்ள பல்வேறு பட்ட இனத்தவர்கள் மட்டும்இன்றி உலகெங்கிலுமுள்ள பல்வேறு மதத்தவர்களும் இனத்தவர்களும் தங்கள் பங்களிப்பை செலுத்தி உலகெங்கிலும் ஆதரவற்றவர்களுக்கு மாபெரும் சேவைகள் புரிந்தார்கள். பாரிய கல்வித் திட்டங்கள், மருத்துவ சேவைகள், குடிநீர்திட்டங்கள், குடியிருப்புத் திட்டங்கள் போன்றவைகளை உலகெங்கிலும் உள்ள சாயி அடியார்களால் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இத்தகைய அடிப்படையில் தான் உலகில் உள்ள கோடான கோடி சாயி அடியார்கள் தமது ஆன்மீக ஈடேற்றத்திற்கு வழிகாட்டியாக இருந்த அவதார புருஷரான பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா 2011 ஏப்ரல் 24 ஆம் திகதி தனது தெய்வீக உடலை விட்டு நீங்கியதை தாங்க முடியாத வேதனைகளுடன் எதிர்நோக்கி னார்கள். இச்சமயத்தில் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா தனது அருளுரையில் அடிக்கடி கூறியது போல தன் உடம்பு அல்ல தன் தெய்வீகத்தையே அடியார்கள் உணர வேண்டும் என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். அவரது ஸ்தூல சரீரம் நீங்கினாலும் அவரது தெய்வத்துவம் பிரபஞ்சம் முழுவதும் நீக்கமற நிறைந்து இருப்பதோடு அவர் எல்லோரது இதயங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பதை அடியார்கள் உணர வேண்டும். பகவான் ஏற்கனவே கூறியது போல் அவரை எவராலும் எவ்வாறு முயன்றாலும் அறிய முடியாது. ஆகவே தனது போதனைகளை மாத்திரம் பூரணமாக கடைப்பிடியுங்கள் என அறிவுறுத்தினார். எனவே நாம் அவர் போதனைகளை பூரணமாக கடைப்பிடிக்க வேண்டும். இதுவே பகவானுக்கு அவரது அடியார்கள் தற்போது செய்ய வேண்டிய தலையாய கடமையாகும்.

சாயி அடியார்கள் இவரது போதனை களை தெளிவாக உணர்ந்து எமது இதயங்களில் நிலையாக இருத்தி பகவானின் சேவைகளை இடையறாது தொடர்ந்து செய்ய வேண்டும். பகவானின் ஆன்மீக போதனைகளை கிராமங்கள் தோறும் சென்று இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் பரப்ப வேண்டும். கிராமங்களில் ஆதரவற்றிருக்கும் நலிவுற்றவர்களுக்கு ஆன்ம பலத்தையும், தன நம்பிக்கைகளையும் கொடுத்து அவர்களுக்கு தேவையான சேவைகளைச் செய்து அவர்களை உற்சாகப் படுத்த வேண்டும். சிறுவர்களை பாலவிகாஸ் கல்வித் திட்டத்தின் மூலம் ஊக்குவித்து எழுச்சியுறச் செய்ய வேண்டும். சமதாயத்தில் உள்ள எல்லோரும் மனித மேம்பாடுகளை உணர்ந்து கடைப்பிடித்து சமுதாயத்தில் அமைதியையும், சாந்தியையும் நிலை நிறுத்த உற்சாகப்படுத்தப்பட வேண்டும். எங்கே பெண்மை போற்றப்படுகின்றதோ அங்கெல்லாம் தெய்வத்துவம் மிளிர்கின்றதென வேதங்கள் முழங்குகின்றன என கூறுகின்ற பகவான் அருள் உரைகளுக்கிணங்க மகளிரின் முக்கியத்துவம் உணரப்பட்டு அவர்கள் சமூகத்திற்கு வழிகாட்ட ஊக்குவிக்க வேண்டும். இளைஞர்கள், யுவதிகளின் பங்கு பூரணமாக உணரப்பட்டு அவர்களை ஆன்மீக ரீதியில் எழுச்சியுறச் செய்து அன்பு வழியில் மனித மேம்பாடுகள் இணைந்த சமுதாயத்தை கட்டியெழுப்ப அவர்களை கருவியாக பயன்படுத்த வேண்டும். நிறுவன ரீதியாக பகவானின் ஆன்மீக செய்திகளும், ஆன்மீக செயற்பாடுகளும் மேலும், மேலும் வளர்ந்து அன்பின் அடிப்படையில் மனித குலத்தை ஒன்றிணைக்க இளைஞர் சமுதாயமே முன்நின்று உழைக்க வேண்டும். இவ்வுலக வரலாற்றில் பிரான்சியப் புரட்சி, மேலும் சீனாவில் நடைபெற்ற கலாச்சாரப் புரட்சி மற்றும் இங்கிலாந்தில் நடைபெற்ற கைத்தொழில் புரட்சி என்பன அந்தந்த நாடுகளில் மட்டுமே நடைபெற்றன. ஆனால் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவால் அமைதியாக நடாத்தப்பெற்ற ஆன்மீகப் புரட்சி 160 நாடுகளில் ஒரே நேரத்தில் பல்வேறுபட்ட மதத்தை, இனத்தை, மொழியை, கலாச்சாரத்தை கொண்டவர்களின் மனங்களில் உட்புகுந்து அன்பின் அடிப்படையில் ஆன்மீக ரீதியாக சமத்துவத்தை உருவாக்கி கோடான கோடி மக்களை இணைத்தது. இதுவெ மாபெரும் ஆன்மீகப் புரட்சியாகும். இவர்கள் ஒன்று சேர்ந்து அமைதி, சாந்தி, நிம்மதிக்காக ஒன்றாக ஒரே இடத்தில் இருந்து பிரார்த்தனைகள் செய்வது புட்டபர்த்தியில் உள்ள பிரசாந்தி நிலையத்தில் மாத்திரமே!

ஜெய் சாயிராம்.

நா.புவனேந்திரன்
திருகோணமலை


(நன்றி: தினக்குரல் 2012 பெப்ரவரி 12)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# பகவானின் அதிசயத் தரிசனம்



பகவானின் பொற் கமலப் பாதத்தை வணங்கிக் கொண்டு சுவாமியின் தரிசனம் பற்றி கட்டுரை வடிவில் எழுதுவதற்கு ஆசைப்படுகிறேன். எனக்கு சுவாமியின் தரிசனம் 2006 இல் முதன் முதலாக ஒரு சாயி அன்பர் மூலம் கிடைத்தது. சுவாமியை தரிசிக்க காலடி எடுத்து வைத்த நாள் 80 ஆவது அவதார திருநாளாகும். சுவாமியை அன்றிலிருந்து இன்றுவரை வணங்காமலிருக்க மாட்டேன். அவருடைய அருட் பார்வை பட்டதும் எனக்கு இருந்த துன்ப துயரங்கள் எல்லாம் மறைந்து விட்டன.

"நீ என்னை நோக்கி ஒரு அடி எடுத்து வை, நான் உன்னை நோக்கி நூறு அடி எடுத்து வைப்பேன்" பகவான் கூறியது போல் என் வாழ்விலும் நடந்துள்ளது. யாருக்கும் கிடைக்காத பாக்கியம் எங்கள் குடும்பத்திற்கு கிடைத்துள்ளது. எல்லா வழிகளிலும் எனக்கு சுவாமி உதவி செய்திருக்கிறார். நாங்கள் இருப்பது ஒரு கூட்டுக் குடும்பத்தில். நான் இருந்த வீட்டை விட்டு சிறிது காலம் வேறு வீட்டில் இருந்த போது சுவாமியிடம் வருவதற்கு கஸ்டமாக இருந்தது. அப்படி இருந்தும் சுவாமியிடம் வந்தேன். வரும் போதும் எல்லோரும் எங்கே போகிறாய் என்று கேட்பார்கள்?. நான் சுவாமி சாயிராமிடம் போகிறேன் என்று சொல்வேன். அவர்கள் எனது பதிலைக் கேட்டு கேலியாக நகைப்பார்கள். அதற்கு நான் சுவாமி நீயே இவர்களுக்கு பதில் கூற வேண்டும் என்று நினைத்துக் கொண்டு சுவாமியிடம் செல்வேன்.

அப்போது தான் அறிந்தேன் திருகோணமலையில் சாய் அன்பர் வீட்டில் வீபூதி வருவதாகவும், அங்கு சென்று பார்த்ததாகவும் சொன்னார்கள். எனக்கு சரியான கவலை வந்துவிட்டது. அழுதேன் சுவாமியின் தரிசனம் பார்க்கக் கிடைக்கவில்லையே என்று நினைத்து அழுதேன். அழுதுவிட்டு வீட்டுக்குப் போனேன் மனம் ஆறவில்லை. அமைதியான இடத்தில் இருந்து சுவாமியிடம் கேட்டேன் "எனக்கு நேரடியாக பார்ப்பதற்கு கிடைக்கவில்லையே. மனம் வருந்தினேன். என் வீட்டுக்கு ஒரு தடவையாவது வாருங்கள் சுவாமி. நான் படும் வேதனையைப் பாருங்கள்" என்று கேட்டேன். சுவாமியின் பொற்பாதங்களை இறுகப் பற்றிக் கொண்டேன். மகளின் அழுகுரல் கேட்டு விரைவில் ஓடி வந்தார். என் வீட்டிற்கு வீபூதி அள்ளித் தந்தார். எங்களுடன் வாய் அசைத்துப் பேசினார். அந்த அற்புதக் காட்சியைக் கண்டு ஆனந்தம் அடைந்தோம். ஆனந்தக் கண்ணீரும் விட்டோம். இது வரையும் கண்டிராத காட்சியை சுவாமி தந்துள்ளார். நான் எங்கே போகின்றேன் என்ற கேள்விக்கு பதில் தந்தார். எல்லோரையும் வரவழைத்து தன்னுடைய அற்புதத்தைக் காட்டினார் சுவாமி. என்னைக் கேலி செய்தவர்கள் சுவாமியின் தரிசனத்தைக் கண்டு வியப்படைந்தார்கள். அன்பு சாயியின் அற்புத லீலைகள் பல இருந்தும்கூட சிலவற்றை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

முதலாவது லீலை - 17.12.2011 இல் நடந்தது. 80 ஆவது அவதார படத்தின் மூலம் வீபூதி தரிசனம்

இரண்டாவது லீலை - 01.03.2012 இல் நடந்தது.

மூன்றாவது லீலை - 08.03.2012 இல் நடந்தது. 84 ஆவது அவதார தினம் பொறிக்கப்பட்ட வீபூதி சரையில் இரண்டு ரூபாய் நாணயம் வைத்து தந்துள்ளார்.

இந்த கலியுகத்தில் மனித உருவில் நடமாடிய தெய்வம் என்றால் சுவாமி ஒருவரே. அவர்தான் சாயி பாபா. சாயி நாமத்தை உச்சரிப்பவர்களுக்கு துன்பங்கள் பறந்தோடி விடும். நான் பெற்ற இன்பம் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்று விரும்புகிறேன். என் நீண்டகால ஆசையை நிறைவேற்றிய சுவாமிக்கு எனது நன்றிகள்.

ஜெய் சாயிராம்

தே.சித்திரா

ஆத்திசூடி ஒழுங்கை

**சுவாமியின் பொற்பாதங்களை இறுகப் பற்றிக் கொண்டேன். மகளின் அழுகுரல் கேட்டு விரைவில் ஓடி வந்தார். என் வீட்டிற்கு வீபூதி அள்ளித் தந்தார். எங்களுடன் வாய் அசைத்துப் பேசினார்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# அன்பைப் பற்றிய விளக்கம்

**பகவானின் பழைய மாணவர்கள் நடாத்திய கல்வி வட்டத்தின் சாரம்** (Radio Sai Study Circle)



சுவாமியை வணங்கி அவரின் (Love is my form) என்ற பாடலைக் கேட்டுத் தொடங்கினார்கள். சுவாமி அறிவுறுத்திய தெய்வீக அன்பிலே நாம் அக்கறை கொள்வோம். அன்பைப் பற்றிய பெரியார்களின் கூற்றுக்கள் சில:

உயிரே அன்பு - சுவாமி

அன்பு எங்கேயோ அங்கே உயிருண்டு - காந்திஜி

உயிரே பூ, அதன் தேனே அன்பு

அன்பே சிவம் - திருமூலர்

எல்லா மதங்களும் அன்பையே அடிப்படையாகக் கொண்டன. அன்பையே போதிக்கின்றன. அன்பு பிரபஞ்சத்திலுள்ள இறை சக்தி என்றாலும் அதன் வெளிப்பாடு பல நிலைகளிலுள்ளதால் சாதாரண மக்களுக்கு உலக அன்புக்கும் தெய்வீக அன்புக்கும் வித்தியாசம் காண்பது கடினம். தெய்வீக அன்பு தொடர்ச்சியானதும், நிலையானதும், எதிர்பார்ப்பற்றதும், தன்னலமற்றதுமாகும்.

இங்கே அன்பின் தன்மையை பகவான் சொன்ன கதைகள் மூலமாக விளக்கம் தரப்படுகிறது.

துவாபர யுகத்தில் நிகழ்ந்தது. கிருஸ்ண பகவான் பல வருடங்களுக்குப் பின்பு பிருந்தாவனத்திற்கு வந்து, தனது பெற்றோர்களை சந்தித்த பின்பு யமுனா ஆற்றங்கரையிலிருக்கும் ராதாவிடம் சென்றார். ராதா கிருஸ்ண பலத்திலே திளைத் திருந்தார். கிருஸ்ண பகவான் தன்னைக் கண்டதும் ராதா மிகவும் சந்தோசப்படுவாள் என்று எண்ணினார். அவளோ பகவானைப் பார்த்ததும் மென்மையான புன்னகை பூர்த்தாள். அப்போது நடந்த சம்பாஷணை:

கிருஸ்ணா: ராதா நான் திரும்பி வந்துள்ளேன். ஆனந்தமாக இல்லையா?

ராதா : (பகவானைக் கேள்விக் குறியுடன் பார்த்து ஆற்றிலிருந்து நீரைக் கையிலேந்தி வந்து) கிருஸ்ணா! நீ இந்த நீரிலுள்ள ஒவ்வொரு துளியிலுமல்லவா இருக்கிறாய். பின்பு இலையைக் காட்டி ஒவ்வொரு இலையிலும் அல்லவா இருக்கிறாய். இங்கு வீசும் காற்றிலும் ஒவ்வொரு அணுவிலும் நீ அல்லவா. எல்லாம் நீ தானே திரும்பி வந்து விட்டேன் என்று சொல்வதற்கு, எப்போது இங்கிருந்து போனாய்?

கிருஸ்ணர்: ராதா என்ன விருப்பமோ, கேள் தருகிறேன்?

ராதா : உன்னிடமிருந்து ஒன்றும் தேவையில்லை

கிருஸ்ணர்: எனது அன்பு கூட வேண்டாமா?

ராதா : கிருஸ்ணா உன் மீது நான் வைத்திருக்கும் அன்பு எனக்கு நன்றாகத் தெரியும் நீ என்னுடையவனே. உன்னிடமிருந்து நான் ஒன்றையும் ஏன் உனது அன்பையும் கூட எதிர்பார்க்க வில்லை.

கிருஸ்ணா : (முழங்காலில் நின்று) ராதா ஒரு பக்தையிடமிருந்து முதன் முறையாக எதிர்பார்ப்பில்லாத அன்பை இன்று தான்பெற்றுள்ளேன்.

**அவரின் உள் மனம் திரும்ப அங்கே போகும்படி உறுத்தவே போய் உடலைச் சுற்றிக் கையைவிட்டுப் பார்த்த போது உடலுக்கு கீழே சிறு குழந்தையிருப்பதை அவதானித்துக் கூக்குரலிட்டார். மண்ணை அகற்றி உடலை எடுத்த போது, உயிருடன் குழந்தை அதற்கு கீழே பாதுகாப்பாக இருந்ததை அவதானித்தார்கள். அருகில் இருந்த கையடக்கத் தொலைபேசியில் "குழந்தாய் நீ உயிருடன் தப்பினால், நான் உன் மீது வைத்த அன்பை மறக்க வேண்டாம்." செய்தியாக இருந்ததை அவதானித்தார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராதையின் அன்பை எவ்வாறு விவரிக்கலாம்? தூய்மையான தெய்வீக அன்பல்லவா அது.

சீனாவில் சிகுஆன் மாகாணத்தில் மே மாதம் 2008 ஆம் ஆண்டு நிகழ்ந்த பூகம்பத்தின் போது பல வீடுகள் சேதமாகின. பூகம்பம் அடங்கிய பின்பு தொண்டர்கள் ஒரு மண்ணில் மூழ்கியிருந்த குடிசையை சின்ன வெடிப்பூடாக ஒரு மீட்பாளர் ஒரு பெண் கைகூப்பிய வண்ணம் மடிந்து கிடந்ததை அவதானித்தார். எட்டித் தொட்ட போது உடல் குளிர்ந்து விறைத்துப் போயிருந்த படியால் மரணம் ஏற்பட்டு விட்டது என்று முடிவெடுத்து நகரத் தொடங்கினார். அவரின் உள் மனம் திரும்ப அங்கே போகும்படி உறுத்தவே போய் உடலைச் சுற்றிக் கையைவிட்டுப் பார்த்த போது உடலுக்கு கீழே சிறு குழந்தையிருப்பதை அவதானித்துக் கூக்குரலிட்டார். மண்ணை அகற்றி உடலை எடுத்த போது, உயிருடன் குழந்தை அதற்கு கீழே பாதுகாப்பாக இருந்ததை அவதானித்தார்கள். அருகில் இருந்த கையடக்கத் தொலைபேசியில் "குழந்தாய் நீ உயிருடன் தப்பினால், நான் உன் மீது வைத்த அன்பை மறக்க வேண்டாம்." செய்தியாக இருந்ததை அவதானித்தார்கள். தாய் தன்னைத் தியாகம் செய்து குழந்தையைக் காப்பாற்றியுள்ளார். இது தான் தெய்வீக அன்பு. இது தியாகம் நிறைந்தது. எமது பகவானும் பக்தர்களுக்காக தனது உடல், உளம் சகலதையும் தியாகம் செய்துள்ளார்.

இன்னொரு தாயின் தியாகத்தை சுவாமி கூறினார். இராமாயாணத்தில் கைகேயி தான் இராமனைக் காட்டுக்கு அனுப்பியதாக மக்கள் எண்ணுகிறார்கள். உண்மை எதுவென்றால், இராமரே கைகேயியைச் சில வாரங்களுக்கு முன்பு சந்தித்து "அம்மா நீ என்னை எவ்வளவோ நேசிக்கிறாய், எனது அவதார நோக்கத்தை பூர்த்தி செய்ய உதவ வேண்டும். இதற்காக நீங்கள் எவ்வளவோ அவமானத்தை ஏற்றுக் கொள்ள வேண்டி நேரிடும்." என்று கூறக் கைகேயி " நான் கட்டாயம் செய்வேன்" என்று உறுதியளித்தாள் ஒருவரும் தம்து பெண் பிள்ளைகளுக்கு கைகேயி என்ற பெயரைக்கூட வைக்க மாட்டார்கள். அவ்வளவு வெறுப்பை கைகேயி இராமரின் வேண்டுகோளுக்காக அனுபவித்தாள். என்னே அவளின் தியாகம்.

எல்லாவற்றிற்கும் மேலாக சுவாமியின் பின்வரும் கூற்று:

"நான் என்மீது அன்பு கொள்ளவே, என்னை என்னிலிருந்து பிரித்து படைப்பை உண்டாக்கினேன்"

"ஒரே ஒரு மதம் தான். அது அன்பென்னும் மதம்" அன்பு பிரபஞ்சத்தில் பரந்திருக்கும் ஒரு பசையேயாகும். இதுதான் கவர்ச்சிக்குக் காரணம். விரிவாக்கமே அன்பின் இயல்பு"

அன்பு பல நிலைகளில் வெளிப் படுகின்றது. சாஸ்திரங்களில் வியஸ்தி, சமஸ்தி, சிருஷ்டி பரமேஷ்தி என்று நான்கு விதமான அன்பு குறிக்கப்பட்டுள்ளது. வியஸ்தி தனிப்பட்டவருடன் தொடர்புள்ளது. சமஸ்தி சமூகத்துடனும், சிருஷ்டி படைப்பு அல்லது இயற்கையுடனும் பரமேஷ்தி கடவுளுடனும் தொடர்புள்ளது.

பற்றுத்தான் தெய்வீக அன்பின் வெளிப்பாட்டுக்குத்தடையாகவுள்ளது. பற்றை உயரிய நோக்கத்திற்குரிய பற்றாக மாற்றுவதன் மூலம் தடையை அகற்றலாம். இதற்கு உதாரணமாக திரு.விக்ரர் கானு அவர்கள் எப்படி இலண்டனிலுள்ள சொத்துக்களை விற்று (சுவாமியின் ஆணைப்படி) சாம்பியா தேசத்தில் சத்திய சாயி பாடசாலையை ஆரம்பித்து ஒரு முன்மாதிரியானதாக இயங்க வைத்தார்கள்.

பற்று (Attachment) பொருளில் அல்ல. அதை உள்வாங்கிய மனதில்தான் உள்ளது. உள்வாங்கியது போல மிகவும் இலேசாகத் துறந்தும் விடலாம். இதற்கு சுவாமி கைக்குட்டையை கையில் எடுத்து வைத்திருப்பது கஸ்டமா? அல்லது கை விரிப்பது கஸ்டமா என்று கேட்டு கையை விரித்து கைக்குட்டையைக் கீழே போட்டார். ஆனால் எமக்கு அது மிகவும் கஸ்டமாக இருக்கிறதே, ஏனென்றால் மோகம் அல்லது மாயையின் காரணமாகவே தான் பற்றற்ற நிலை உள்ளிருந்து வர வேண்டும்.

பொருள்களுக்கு பின்னால் ஓடினால் அதுவும் தூரவேகமாக நகரும். அதில் பற்றில்லாமல் இருந்தால், அது பின்னால் ஓடிவரும் என்று பகவான் சொல்லி தாய், பிள்ளையைத் பின் தொடரா விட்டால் பிள்ளை தானாகவே தாயிடம் வரும் என்று இந்த உதாரணத்தையும் சொன்னார்.

பற்றுள்ள அன்பு கீழ் நிலையானது
பற்றில்லா அன்பு மேலானது

ஜெய் சாயிராம்

நன்றி: ரேடியோ சாய் - நவம்பர் 2011
(மொழிபெயர்ப்பு: ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# சுவாமியுடன் சரணாகதி பற்றிய உரையாடல்

2007 ஆம் ஆண்டு சென்னையில் நடந்த மகா யக்ஞத்தில் சுவாமி கலந்து கொண்டார். அப்போது பக்தன் (LK) என்பவர் சுவாமியின் குழுவில் சென்றார் அவரை அங்கு உரையாற்றவும் சுவாமி ஏற்பாடு செய்திருந்தார். அப்போது இருவருக்கும் இடையில் நிகழ்ந்த சம்பாஷணை:

சுவாமி : என்ன பேசப் போகிறாய்?

பக்தன் : சுவாமி எனது குரு என்ற தலைப்பில்

சுவாமி : குரு என்பதன் அர்த்தம் என்ன?

பக்தன் : குரு என்ற பதத்திலுள்ள "கு" என்பது குணாதீதம் என்பதையும் "ரு" என்பது உருவமற்றதையும் குறிக்கிறது என்று ஆன்மீக நூல்கள் கூறுகின்றன.

சுவாமி : அப்படியான குருவைச் சந்தித்திருக் கிறாயா?

பக்தன் : (கைகூப்பி) சுவாமி நீங்கள் தான்.

சுவாமி : எனக்கு உருவம் இருக்கிறதே!

பக்தன் : உருவமோ, இல்லையோ சுவாமி தான் எனது குரு

சுவாமி : என்ன பேசப் போகிறாய் என்று சொல்?


பக்தன் : (நான் கூறப்போவதைச் சொன்ன பின்பு) இருந்தாற் போல் மாணவர்களைப் பார்த்து, "உங்கள் மனதின் எவ்வளவோ சந்தேகங்கள் உள்ளன. இன்று நீங்கள் முன் வைக்கும் சந்தேகங்களைத் தீர்ப்பேன்."

மாணவன்: சுவாமி சரணாகதி என்றால் என்ன?

சுவாமி : முதலில் உனக்குத் தெரிந்ததை சொல்லு.

மாணவன்: சகலதையும் இறைவனிடம் ஒப்படைப்பதே சரணாகதி என்று நான் படித்தேன்.

சுவாமி : இறைவனுக்கு உங்களிடமிருந்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றும் தேவையில்லை "சகல சந்தர்ப் பங்களிலும், நடப்பதெல்லாம் எனது நன்மைக்கே" என்ற மனப்பாங்கு தான் சரணாகதி

உனக்குக் கார் ஓட்டத் தெரியுமா?

மாணவன்: ஆம் சுவாமி

சுவாமி : எத்தனை கியர்ஸ் காரில் உண்டு?

மாணவன்: 4 சுவாமி

சுவாமி : ஆம், 1,2,3.4 இத்துடன் பின் போகச் செய்யும் கியர். முதலாவது கியரில் ஓடம் போது ஏதும் பிரச்சினை உண்டா?

மாணவன் : இல்லை சுவாமி

சுவாமி : 2, 3 அல்லது 4 ஆவது கியரில் ஓடும் போது?

மாணவன்: இல்லை சுவாமி

சுவாமி : அப்போ எப்போது பிரச்சினை எழும்?

மாணவன்: தெரியாது விழித்தான்

சுவாமி : கியர்களை மாற்றும் பொழுதுதான் கஸ்டம் வரலாம். கியர் மாற்றும் பொழுது என்ன செய்வாய்?

மாணவன்: நாங்கள் கிளச்சைப் பாவிப்போம்.

சுவாமி : சரி, கிளச்சைப் பாவித்தால் கியர்களை பவுத்திரமாக மாற்றலாம். இதே போல வாழ்க்கையிலும் 4 கியர்ஸ் ஆனந்தம், துக்கம், ஆனந்தம், துக்கம் என வாழ்க்கையிலும் உண்டு. ஒரு நிலையிலிருக்கும் போது வாழ்க்கையும் ஓடும். ஆனால் ஒரு நிலையிலிருந்து மற்ற நிலைக்கு மாறும் போது தான் பிரச்சினை எழலாம். இதை எதிர் கொள்ளவும் கிளர்ச் ஒன்று உண்டு. அது தான் "நடப்ப தெல்லாம் எனது நன்மைக்கே" என்ற எண்ணமேயாகும். இதைத்தான் கிருஸ்ணபகவான் அர்ச்சுனனுக்கு மகாபாரதப் போரின் போது போதித்தார். என்ன மாதிரிச் சொன்னார் தெரியுமா?

மாணவன்: (மௌனம் சாதிக்க)

சுவாமி : ஆனந்தத்திலும், துன்பத்திலும், இலாபத்திலும், நட்டத்திலும், வெற்றியிலும், தோல்வியிலும் எவனொருவன் சமநிலையிலிருக் கிறானோ அவனே என்னிடம் முழுச் சரணாகதியடைந்தவன்.

அடுத்த நாள் நிகழ்வில் உரை நிகழ்த்தும் போது ஒலிபெருக்கி வேலை செய்யவில்லை. சுந்தரம் வந்ததும்.

சுவாமி கோபத்துடன் என்னைப் பார்த்து (LK) "நீ நன்றாகப் பேசவில்லை" என்று சொன்னார்.

நான் கவலையுடன் இருந்தேன். இரவு போசனத்தின் போது சுவாமியின் முன்னிலை யிலேயே அமர்ந்தேன். இப்பையனின் பேச்சு எப்படியிருந்தது? கூடியிருந்த பக்தர்கள் மெச்சினார்கள். ஆனால் சுவாமி.... "நீ நன்றாக பேசவில்லை. சரணாகதியைப் பற்றி ஒன்றும் கூறவில்லை" சுவாமி முதல் நாள் எங்களுக்குத் தெளிவு படுத்தியதைத்தான் குறிப்பிடுகிறார் என நினைத்தேன். தலை சுற்றியது. எனக்குத் தந்த விடயம் குரு. சரணாகதியல்ல, என்னை ஏன் வருத்துகிறீர் என நான் நினைத்தேன்.

சுவாமி : உனது சரணாகதி எங்கே?

மாணவன்: என்னுள்ளே பெரும் அமைதி நிலவியது. கண்ணீர் வழிந்தது. சுவாமி புன்னகையுடன் அன்புடன் பார்த்தார். எனது சரணாகதியின் குறையை விளங்கினேன். சுவாமியிடம் "எனது பிழைக்காக மன்னிக்கவும்" என்று மண்டாடினேன்.

சுவாமி : "நான் உன்னைத் தொடருவேன்"

ஜெய் சாயிராம்

(அரவிந்த.ந என்பவர் ரேடியோ சாய் மூலம் தந்த செய்தி - 04.09.2011)


**வாழ்க்கையிலும் 4 கியர்ஸ் ஆனந்தம், துக்கம், ஆனந்தம், துக்கம் என வாழ்க்கையிலும் உண்டு. ஒரு நிலையிலிருக்கும் போது வாழ்க்கையும் ஓடும். ஆனால் ஒரு நிலையிலிருந்து மற்ற நிலைக்கு மாறும் போது தான் பிரச்சினை எழலாம். இதை எதிர் கொள்ளவும் கிளர்ச் ஒன்று உண்டு. அது தான் "நடப்ப தெல்லாம் எனது நன்மைக்கே" என்ற எண்ணமேயாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# பெண்ணின் பெருமை



ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் 19 ஆம் திகதி சத்திய சாயி நிறுவனம் மகளிர் தினம் கொண்டாடுகிறது. உலக ரீதியில் பங்குனி மாதம் 8 ஆம் திகதி மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. அன்று உலகியல் ரீதியாக சகல துறைகளிலும் சமத்துவம் வேண்டி பெண்ணானவள் ஆணுக்கு அடிமையல்ல. சரி நிகர் சமானமானவள் என்று கூறி மகளிர் தினத்தைக் கொண்டாடுகிறார்கள். ஆனால் சாயியின் மகளிர் தினம் பெண்களின் ஆன்மீக சக்தியை வெளிப்படுத்தி, சமூகத்திற்கு அவர்கள் எத்தகைய ஆதாரமாக விளங்குகிறார்கள் என்பதை எடுத்துக்கூறி அவர்கள் ஆற்ற வேண்டிய பொறுப்பை எடுத்தியம்புகிறது. உடற் கட்டமைப்பு ரீதியாகவும், உள் உறுப்புக்களின் கட்டமைப்பு ரீதியாகவும், தொழிற்பாடுகள் ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் இருவருமே சமம் தான். பிறப்புறுப்புக்கள், மற்றும் ஓமோன் சுரப்புகளின் விகிதாசார வேறுபாட்டினால் ஆண் தன்மை, பெண் தன்மை என இயல்புகள் வேறுபடுகின்றன. ஆண்கள் முரட்டுதனமாக, உடற்பலம் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். பெண்கள் மென்மையாக, உடற்பலம் குன்றியவர்களாகவும் இருக்கின்றார்கள். அதன் காரணமாக அவர்களை அபலைகள் என்றோ, பெரும் பொறுப்புக்களை ஏற்று செயற்படுத்தத் தகுதியற்றவர்கள் என்று நினைப்பது அறியாமை என்கிறார் சுவாமி.

உண்மையில் பெண்களுக்கு உள்ளார்ந்த ஆற்றல்கள் ஏழு இருக்கையில் ஆண்களுக்கு அத்தகைய ஆற்றல்கள் மூன்று மட்டுமே ஆண்டவன் கொடுத்திருக்கிறான் என்ற உண்மையை சத்திய சாயி பாபா உறுதிப்படுத்துகிறார். பெருமை, செல்வம், இனிமையாகப் பேசும் குணம், அறிவு, புத்திசாலித்தனம், தைரியம், பொறுமை என ஏழு ஆற்றல்களும், ஆண்களுக்கு ஆற்றல், புகழ், சமூகத்தில் மதிப்பு என மூன்று ஆற்றல்களும் கொடுக்கப்பட்டுள்ளன. பெண்களின் இந்த ஆற்றல்தான் அவளுக்கோ, அவள் தம் குடும்பத்திற்கோ, அல்லது தேசத்திற்கோ அமைதி, வளம், முன்னேற்றம், நலம், கௌரவம், கீர்த்தி போன்ற நல்ல விளைவுகளை ஏற்படுத்தக் காரணமாக அமைகின்றன.

பாரதீயப் பெண்கள் இத்தகைய ஆற்றலுடன் விளங்கியமையாலேயே பாரதம், ஆன்மீகம், கலை, கலாச்சாரம் போன்றவற்றில் வழிகாட்டியாக இருந்தது. பெண்களுக்கு உயர் மதிப்புக் கொடுத்ததாலேயே பெண்ணை முன்னிலைப் படுத்தி தாய் மொழி, தாய் நாடு என்று சொல்லப்படுகிறது. அது மட்டுமல்ல தெய்வங்கள் தேவியரைக் குறிப்பிடும் போது லட்சுமி நாராயணன், பார்வதி பரமேஸ்வரன், ராதா கிருஸ்ணன், வள்ளி மணவாளன், தேவசேனாதிபதி என்று சொல்லப்படுகிறது.

எனவே பெண்கள் சமூகத்தில் தாம் ஆற்ற வேண்டிய பங்கின் முக்கியத்துவத்தை உணர வேண்டும். பெண்மைத் தத்துவம் மிகவும் நல்ல உயர் குணமுடையதொன்று. மங்கையர்

**ஒரு பெண் தாய் என்னும் ஸ்தானத்தை அடையும் போது, அவள் சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய பங்கு பலமடங்காகிறது. எனவே அது தான் பெண்ணின் முதல் கடமை அதற்காக அவள் பல தியாகங்களை செய்யத் தயாராக இருக்க வேண்டும். எனவே தான் பெண்களுக்கு இரு கண்களாக அன்பும், தியாகமும் சொல்லப்படுகிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவராக இருக்கும் போது நாடு சிறப்புப் பெறும். மரத்துக்கு ஆதாரம் மண்ணின் கீழ் பிறர் கண்ணுக்குத் தெரியாமல் இருக்கும் வேர்கள். வேர்கள் தான் நீர், கனியுப்புக்களை உறிஞ்சிக் கொடுத்து மரத்தை ஆரோக்கியமாக வைத்திருப்பதுடன் மரத்தையும் விழாது தாங்கிப் பிடித்து வைத்திருக்கிறது. அது போல அமைதியான, ஆனந்தமான இல்லத்துக்கு, நன்னடத்தையுள்ள சமூகத்துப் பெண்களே ஆதாரமாக இருக்கிறார்கள். எனவே பெண்கள் கல்வி கற்பது அவசியம். கற்றதை வாழ்க்கையில் கடைப்பிடித்து, அறிந்ததை எல்லோருடனும் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஆரம்ப காலத்தில் பெண்கள் வேலைக்குப் போவதை சுவாமி விரும்பவில்லை. ஆனால் கால மாற்றம், பொருளாதாரச் சிக்கல் காரணமாகப் பெண்கள் வேலைக்குப் போவது தவறல்ல, சூழ்நிலைக்குத் தகுந்தவாறு பெண்கள் செயல்ப்படலாம். ஆனால் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்னவென்றால் உணவு சமைப்பதையும் பரிமாறுவதையும் பெண்களே செய்ய வேண்டும் என்று பகவான் வலியுறுத்துகிறார்.

உணவு தயாரிப்பதில் பாத்திர சுத்தி, பதார்த்த சுத்தி, பாக சுத்தி என மூவகை சுத்தங்கள் அவசியம் என்பதை பகவத் கீதை கூறுகிறது. சமைக்கும் பாத்திரங்கள் சுத்தமாக இருக்க வேண்டும். சமைக்கப் பயன்படும் பொருட்கள் சுத்தமாக இருக்க வேண்டும், இதைவிட மிக மிக முக்கியமானது பாக சுத்தி அதாவது, சமைப்பவரின் உணர்வுகள், மனோ நிலைகள், நாம் உண்ணும் உணவு சமிபாடு அடைந்து தசையாகவும், எலும்பாகவும் பிற இழையங்களாகவும் மாறுகின்ற போது, உணவின் சூட்சுமமான பகுதி மனவுடம்பையும் அதிசூட்சுமமான பகுதி பிராண உடம்பையும் போஷிக்கின்றன. அவை எமது உணர்வுகளைப் பாதிக்கின்றன. அவை எமது உணர்வுகளைப் பாதிக்கின்றன. ஆனந்தமாக இறை சிந்தனையுடன் சமைப்பவரின் உணர்வுகள், நல்ல உணர்வுகளைத் தூண்டுகின்றன. எதிர்மறையான உணர்வுகள் சமைப்பவரின் மனதில் இருந்தால் உண்பவரின் உணர்வுகளிலும் எதிர்மறையான உணர்வுகள் ஏற்படலாம். உதாரணமாக திருட்டு குணமுடையவர் சமையல் செய்யும் போது அதை உண்பவருக்கும் திருட வேண்டும் என்ற எண்ணம் அவரை அறியாமலே உருவாகும் என்பதை விளக்கும் கதை உண்டு.

தற்போது சில குடும்பங்களில் சாப்பாட்டு மேசையிலேயே சண்டை உருவாகி விடுகிறது. இதற்குக் காரணம் சம்பளத்துக்காகச் சமைக்கும் சமையற்காரனின் உணர்வுகளே. அதனால் தான் உணவு சமைப்பதிலும் படைப்பதிலும் பெண்கள் தங்கள் இல்லங்களில் ஈடுபட்டால் குடும்பம் அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும், இனிமையாகவும் இருக்கும் நம் வேலையை நாமே செய்ய வேண்டும். முடியாத பட்சத்தில் தோய்த்தல், துப்பரவு செய்தல் போன்ற வேலைகளை வேலையாட்கள் மூலம் செய்விக்கலாம். ஆனால் சமைத்தலையும், பரிமாறுதலையும் குடும்ப அங்கத்தவர்களே செய்ய வேண்டும். குடும்பம் நலமாக இருந்தால் கிராமம் நலமாக இருக்கும். இவ்வாறு நாடு நலமாக வேண்டுமென்றால் குடும்பத்தில் ஆரம்பிக்க வேண்டும். எனவே பெண்ணை மதித்து வாழ வேண்டும். கலியுகத்தில் தற்காலக் கல்வி முறை உலக மயமாக்கல் போன்ற காரணிகளால் சில பெண்களில் மாறுபாடான இயல்புகள் காணப்படலாம். இத்தகைய கோணலான மனோபாவம் அதிகரித்துக் தவறான வழிகள் உருவாகிப் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

எனவே நமது புனித, கலாசார, தர்மத்தை நிலைநாட்டும் பொருட்டு. 19 ஆம் திகதி மகளிர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. இன்றைய மங்களகரமான நேரத்தில் பெண்கள் மாறுவதற்கான உறுதியை எடுத்துக் கொள்ள வேண்டும். பெண்கள் எங்கு பேசுவது, என்ன பேசுவது, எப்போது மௌனமாக இருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அது போல ஆண்களும் தத்தம் எல்லைகளை அறிந்து கட்டுப் பாட்டுடன் எங்கு போவது, எப்படி நடந்து கொள்வது என்பதை அறிந்து, அதைக் கடைப்பிடிக்க வேண்டும்.

பெண்கள் மாறினால் ஆண்கள் நிச்சயம் மாறுவார்கள். பெண் தான் கணவனின் அர்த்தாங்கி அதாவது சரிபாதி. அவள் தான் வழிகாட்டியாகச் செயற்பட வேண்டும். அன்பு, தியாகம், இரக்கம் போன்ற குணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். இத்தகைய இலட்சியப் பெண்களின் விகிதம் கூடும் போது உத்தமமான இளைய சந்ததி ஒன்று உருவாக்கப்படுகிறது. கர்மமே ஞானத்திற்கு ஆதாரம். கடமையே தெய்வம், வேலையே வழிபாடு என்பதற்கமைய குடும்பக் கடமைகளைச் செய்யும் பொழுது அது எம்மை ஞானத்திற்கு இட்டுச் செல்லும். புத்தக அறிவு வேறு, ஞானம் எனும் அனுபவ அறிவு வேறு. புராதனப் பெண்களான சாவித்ரி, நளாயினி, அனுசுயா, மைத்ரேயி போன்ற பெண்கள் பல்கலைக்கழகம் செல்லவில்லை. புத்தக அறிவு பெறவில்லை. ஆனால் அவர்களின் பொறுமை, சகிப்புத் தன்மை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியாகம் போன்றவற்றால் மக்களுக்கு அமைதியையும் ஆனந்தத்தையும் கொடுத்தனர். இதனால் குடும்பத்தின் சமநிலை பேணப்பட்டது. எனவே பெண்கள் கல்வி கற்றாலும். உத்தியோகம் பார்த்தாலும், அவரவர் இல்லங்களை அன்பு நிறைந்ததாக வைத்துக் கொள்ள வேண்டும். அன்பு அரசாள, பொறுமை, சகிப்புத்தன்மை, தியாக உணர்வு பக்கத் துணைகளாக இருக்க வேண்டும். தற்காலப் பெண்கள் எதிர் நோக்கும் முக்கிய பிரச்சினை தொழில், தாய், என்னும் ஸ்தானம். தனக்கேயுரித்தான ரசனை (பக்தி, சங்கீதம் போன்ற கலையார்வம், எழுத்துத் துறை போன்றவை) என்பவற்றை சமப்படுத்தி வாழ்க்கையை கொண்டு செல்லுதலே இந்த சமநிலை குழம்பும் பட்சத்தில் அவள் கலக்கமுறுகிறாள். நிதானம் இழக்கிறாள். இச்சந்தர்ப்பத்தில் புரிந்துணர்வுடன் நடந்து அவளுக்கு பக்கபலமாக இருந்து ஆறுதல் கூறி வழிகாட்ட வேண்டியது கணவனின் முக்கிய கடமையாகிறது. மேலும் சகிப்புத் தன்மையை வளர்த்து நிறை குறைகளை மறந்து பிறந்த வீட்டிலும், புகுந்த வீட்டிலும் நல்லுறவுகளைப் பேணுவதன் மூலம் அவர்கள் தமக்கு வேண்டிய உடலுதவி, மனோதிடம், மனஉறுதி பாதுகாப்பு உணர்வு ஆகியவற்றைப் பெற முடியும். முக்கியமாக ஒரு பெண் தாய் என்னும் ஸ்தானத்தை அடையும் போது, அவள் சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய பங்கு பலமடங்கா கிறது. எனவே அது தான் பெண்ணின் முதல் கடமை அதற்காக அவள் பல தியாகங்களை செய்யத் தயாராக இருக்க வேண்டும். எனவே தான் பெண்களுக்கு இரு கண்களாக அன்பும், தியாகமும் சொல்லப்படுகிறது. எனவே ஒரு பெண்ணானவள்:


காரியங்கள் செய்வதில் அமைச்சராக
பணிவிடை செய்வதில் பணிப்பெண்ணாக
அறச் செயல்களில் துணைவியாக
பொறுமையில் பூமாதேவியாக
அன்பு செலுத்துவதில் அன்னையாக
பொழுது போக்குவதில் நண்பனாக

இருந்து குடும்பத்தை வழிநடத்தும் போது, குடும்பம் சிறப்புப் பெறும். நாடு நலம் பெறும். உத்தமப் பிரஜைகள் உருவாகுவார்கள்.

ஜெய் சாயிராம்

திருமதி.சியாமளா ரவீந்திரன்
இருபாலை

## எல்லாம் அவரின் சங்கல்பமே



திரு. இராமப்பிரம்மம் என்பவர் பெங்களூரிலுள்ள வைற்பீல்ட் என்னும் சுவாமியின் ஆசிரமத்தில் பராமரிப் பாளராக பல வருடங்கள் பணிபுரிந்தார். அவருடைய மகனுக்கு விவாகம் நடைபெற சகல ஆயத்தங்களும் நடந்து கொண்டிருந்தன. விவாக நாளுக்கு முதன் நாள் விவாகத்தை ரத்துச் செய்யுமாறு சுவாமி தகப்பனாரிடம் சொன்னார். தகப்பனார் சுவாமியிடம் முழச் சரணாகதியடைந்த ஒருவராகையால், ஏன் என்று கேட்காமல், உடனே ரத்துச் செய்தார். பெண் வீட்டார் மிகுந்த ஆத்திரமடைந்து இராமப்பிரம்மத்தைக் கண்டபடி ஏசினார்கள். அவரே எல்லாவற்றையும் மௌனமாகப் பொறுத்துக் கொண்டார். அடுத்த நாள் காலை மணமுடிக்கவிருந்த மகன் பாம்பு தீண்டி இறந்தார். பெண் வீட்டார் இதை அறிந்ததும் மிகவும் வருந்தி தகப்பனாரிடம் மன்னிப்புக் கேட்டார்கள். சுவாமி தடுத்திருக்காவிட்டால் பெண் ஒருத்தி விவாகமான நாளே விதவையாயிருப்பாள்.

ஆகவே பகவான் சொல்வதை அப்படியே இதயத்திலிருத்திப் பின்பற்ற வேண்டும். அவர் எல்லாம் அறிந்தவர். அத்துடன் எம்மைப் பாதுகாத்து, வழிகாட்டி நன்மையடையச் செய்பவர்.

நன்றி: பாலவிகாஸ் சஞ்சிகை 2011 மே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# அற்புதங்கள் அதிசயங்கள்

அற்புதம் அதிசயங்கள் அறிந்தோமே - இது
அவதாரத் திறன் என்று புரிந்தோமே
பர்த்தியில் இறைவனையே பார்த்தோமே - அவன்
பொற்பாதம் சரண் என்று நின்றோமே
சுவாமியின் போதனையாவும் தேனாகும்
சோதனை வேதனையாவும் தூசாகும்
மலை போன்ற துயரங்கள் பனியாகும்
நிலையான பேரின்பம் நமதாகும்

ஆணவத்தை அடங்க வைத்து அன்புவழி நாடவைப்பான்
ஆசைகளைத் தணிய வைத்து அமைதியாக வாழ வைப்பான்
கடும் கோபம் குறையவைத்து கனிவாகப் பேசவைப்பான்
கல்லும் முள்ளும் விலகிவிட நல்வழியைக் காட்டிடுவான்
அவனின்றி அணுகூட ஒருபோதும் அசையாது
பாபாவின் அருட்பார்வை ஒரு நாளும் குறையாது
சாயி நாமம் பாடிடுவோம் சாயிபுகழ் பேசிடுவோம் - இனி
துன்பமில்லை ஒரு கலக்கம் இல்லை. சாயி சேவை
செய்திடுவோம்


மலை போன்ற துயரங்கள் பனியாகும்
நிலையான பேரின்பம் நமதாகும்

கடல்கடந்தும் பக்தரிடம் சூக்குமமாய்ச் சென்றிடுவான்
தாயான பரிவுடனே திருநீறு பொழிந்திடுவான்
கடந்து வந்த தீமைகளை மன்னித்தேமறைய வைப்பான்
செய்தபாவம் தொடர்ந்திடாமல் தடைகள் செய்து காத்திடுவான்

புரியாதபுதிரல்ல அவதாரம் அவன் தானே
தெரியாத கதையல்ல யுகம் தோறும் இவன் தானே
முன்பு செய்த புண்ணியந்தான் இறைவனோடு வாழுகின்றோம்
நல்ல பணிகளிலே எம்மை அர்ப்பணித்தே
நாடு போற்ற வாழ்ந்திடுவோம்

அவனே கதியெனவே சரண் அடைந்திடுவோம் - அவன்
சிவனே என நினைந்தே நாம் மகிழ்ந்திடுவோம்

ஜெய்சாயிராம்



இரா.தெய்வராஜன்
திருக்கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(எங்கள் மத்தியில் நல்லூரில் வாழ்ந்த முக்தானந்த சரஸ்வதி அம்மாவின் மகா சமாதியின் போது இராமகிருஸ்ணாலய இயக்குனர் ராஜா மகேந்திரசிங்கம் நிகழ்த்திய உரை)



# நல்லூர் சுவாமி அம்மா

கடவுளை வழிபடும் போதும்கூட நமக்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும் என்று எண்ணுகின்ற அளவுக்கு நாம் அடிமை நிலைக்கு தாழ்ந்து விட்டோம் என்று சுவாமி விவேகானந்தர் தன் யாழ்ப்பாண பிரசங்கத்தின் முடிவில் கூறியிருந்தார். ஆலயங்கள், மன்றங்கள், சமிதிகள் என்ற பல்வேறுபட்ட ஆரவாரங்கள் சமயத்தின்ஊடாக தமது பெயரை முக்கியத்துவம் அடையச் செய்தல் போன்ற காரியங்கள், விளம்பரங்கள் போன்றவற்றிற்கு மத்தியில் தனிமையில் நீண்டு வளர்ந்த அசோகமரச் சோலைக்குள் வைகுந்த கைலாசத்தை அமைத்து சாதனைகளை ஆரவாரமற்ற நேரங்களில், ஆரவாரமின்றிச் செய்து இறையடி சேர்ந்த சுவாமி அம்மா அவர்கள் எவ்வுயிரிலும் இறைவனைக் கண்டு தொழுதவர் என்பதை அடியேன் கண்ணாரக் கண்டு களித்துள்ளேன். ஆச்சிரமத்திற்கு வரும் பூனை, நாய்களுக்கு பெயர் சூட்டி, உடுப்பு தைத்து போட்டு, மணிகள் கட்டி அலங்கரித்து தனது நெற்றியில் வைக்கும் அளவுக்கு குங்குமப் பொட்டு வைத்து பூக்களால் அர்ச்சித்து வணங்குவார். அது மட்டுமல்லாது, அங்கு வரும் பாம்புக்குக் கூட பெயர் வைத்து அழைத்தார். லோக குரு சுவாமி சிவானந்தா அன்பு மயமானவர். சுவாமி சிவானந்தரின் சிஷ்யை ஆகிய அம்மா அவர்களிலும் அதே அன்பு பிரதி பலித்தது. அம்மா சிறந்த கலாரசிகையாகவும் திகழ்ந்தார். சுவாமி விவேகானந்தரின் யாழ் பிரசங்க நூற்றாண்டு சிகாகோ பிரசங்க நூற்றாண்டு மாநாட்டை இராமகிருஷ்ணாலயம் நடத்திய போது அங்கு நடைபெற்ற கலை நிகழ்வுகளை அம்மா ரசித்து பரவச நிலை எய்தியதை மறக்க முடியாது.

அதிகாலையில் எழுந்து காலுக்கு அணியும் பரத சலங்கையை கையில் கட்டி, கால் பெருவிரலுக்கிடையில் தாளத்தை வைத்து குருதேவர் முன்னே அமர்ந்து வீணையை வாசித்தபடி அம்மா பாட தொடங்கினால் அங்கு ஒரு பாடகர் குழு இருந்து பாடுவது போன்றே இருக்கும். ஆனால் அங்கு அவரும் குருதேவரும் மட்டுமே இருப்பார்கள்.

அம்மா ஒரு சமையல்காரியாகவும் திகழ்ந்தார். அம்மா தன் கையால் சுவையாக சமைத்து எமக்கு பரிமாறும் பொழுதெல்லாம் நானும் மனைவியும் பிள்ளைகளும் அவரை அன்னபூரணியாகவே கண்டுள்ளோம். அம்மா சிறந்த ஓவியராகவும் திகழ்ந்தார். தன் கையால் வரைந்த தெய்வீக ஓவியங்களை எமக்கு காட்டி அதற்குரிய விளக்கங்களையும் தருவார்.

அவ்வப்போது இராமகிருஸ்ணாலயத் திற்கு காலையில் வந்து மாலையில் திரும்புவார். எனது வாகனத்தில் பின்னுக்கு அமர்ந்து பெரிய சிரிப்புடன் கதைத்தபடி வழிகாட்டுவார். அப்போதெல்லாம் தேரை ஓட்டும் சாரதியாகவும், வழிகாட்டும் ஆசானாகவும் அம்மா திகழ்ந்தார் என்றால் மிகையாகாது.

அம்மா தன் தெய்வீக சாதனைகளின் வெளிப்பாடுகளை எவரும் அறிவதை விரும்பவில்லை. ஆனால் அன்புக்கும், பண்புக்கும், பெண்மைக்கும், துறவுக்கும் இலக்கணமாக திகழ்ந்தார் என்பதே அவரின் தெய்வீக சாதனைகளின் வெளிப்பாட்டுக்கு சான்றாகும். சாதுக்கள், துறவிகள் அவ்வப்போது யாழ்ப்பாணம் வருகை தரும் போதெல்லாம் அம்மாவை தரிசிக்க மறப்பதில்லை. இதுவும் அவரின் அடக்கமான ஆரவாரமற்ற சாதனைகளின் வெளிப்பாடு எனலாம். சாதனைகள் மூலம் பொறாமையை மனதில் இருந்து அகற்றி அன்பை வளர்த்து, அளப்பரிய மகத்தான காரியங்களை செய்தவர் தான் எங்கள் சுவாமி அம்மா முக்தானந்த சரஸ்வதி. எமது குரு சுவாமி சாந்தானந்த சரஸ்வதியின் சகோதர சிஷ்யை ஆகிய சுவாமிஜினி எம் குரவை போன்றே

"Free Us From Egotism. Lust, Greed, Hatred, Anger & Jealousy"

"Fill Our Heart With Divine Virtues"

என்று பிரார்த்திப்பார். உடல் அழிந்து விட்டது அம்மாவின் ஆத்மா தொடர்ந்து வழிகாட்ட பிரார்த்திப்போமாக.

**அம்மா தன் தெய்வீக சாதனைகளின் வெளிப்பாடுகளை எவரும் அறிவதை விரும்பவில்லை. ஆனால் அன்புக்கும், பண்புக்கும், பெண்மைக்கும், துறவுக்கும் இலக்கணமாக திகழ்ந்தார் என்பதே அவரின் தெய்வீக சாதனைகளின் வெளிப்பாட்டுக்கு சான்றாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# சுவாமியின் ஆழமான செய்திகள்


ஹைதராபாத் இளைஞர்களுடன் பாபா நேர்காணலின் போது உரையாடியவை.

இரண்டாவது உலக இளைஞர் மகாநாட்டின் பின்பு சுவாமியிடம் இளைஞன் ஒருவன்: "சுவாமி தங்களின் பொற் கமலப் பாதங்களில் மேலும் மேலும் சேவை செய்வதற்குப் போதியளவு பலத்தையும் சக்தியையும் தர வேண்டும்" என்று கேட்டார். சுவாமி அவரைப் பார்த்து புன்னகை பூர்ந்து " நீ எனது பணியைச் செய் நான் உனது வேலையைச் செய்வேன்" என்று ஆழமாகக் கூறினார். ஆகவே நாம் இன்னும் தாமதிக்காது சுவாமியின் பணியில் ஈடுபடுவோம்.

"எனது வாழ்வே எனது செய்தி" என்று சுவாமி அடிக்கடி கூறுவதை எம்மால் கிரகிக்க முடியுமா? நாம் எதைப் படித்துக் கொண்டோம்? "அனைவரிடமும் அன்பாயிரு. அனைவருக்கும் சேவை செய்" என்ற செய்தியையே சுவாமி வாழ்ந்து காட்டியுள்ளார்.

இளைஞர் அமைப்பாளர் சில வருடங்களுக்கு முன்பு சுவாமியிடம் "உலகம் குழப்பமாகவுள்ளது அகங்காரம் மேலோங்கியுள்ளது. எனக்கும் தூய்மையற்ற எண்ணங்களே எழுகின்றன. இதை நான் எவ்வாறு இல்லாமற் செய்யலாம்?" என்று கேட்டார். சுவாமி மிகவும் அன்புடனும் கரிசனையுடனும் "பசி எழும்பினால் என்ன செய்யலாம்? என்று கேட்க, "நான் சாப்பிடுவேன்." என்று பதிலளித்தேன். சுவாமி எப்படிச் சாப்பிடுவாய்? கோப்பையை எடுத்து உணவைப் போட்டு கையால் வாயிலிட்டு விழுங்குவேன். இதன் பின்பு சமிபாடு தன் பாட்டிலே நடக்கிறது. இதே போல தூய்மையற்ற எண்ணங்கள் எழும் போது இறைவனைச் சிந்தி, சாயியைச் சிந்தி, நல்ல எண்ணங்களை வலுவாக்கு, நல்ல செயல்களில் ஈடுபடு. இப்படி நாம் செய்து பழக்கம் ஏற்பட்டால் தீய சிந்தனைகள் தாமாகவே நின்று விடும்." என்றார்.

உதே என்ற இளைஞனைக் காட்டி "இவரை எவ்வளவு வருடங்களாகத் தேய்த்து மாசக் கட்டினேன். இப்பொழுது நல்ல பையனாகப் பிரகாசிக்கிறான்" என்று கூறி முடித்தார். சுவாமி மேலும், சொன்னபடி செய். நன்மை, தீமையென்று ஆராய்ச்சி செய்யாதே" என்று கூறினார். அநேகர் சொன்னபடி செய்யாது, சுவாமியையே ஆராய்ச்சி செய்து நேரத்தை வீணடிக்கிறோம். சுவாமியோ தாய் போல எப்பொழுதும் எமக்கு உதவக்



காத்திருக் கின்றார். சுவாமி பெற்றோருக்கும், சமூகத்திற்கும், பிறந்த தேசத்திற்கும் சேவை செய்ய வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றார்.

நானும் உதேயும் (1981) கோடைக் கால நிகழ்வுகளின் போது பாத்திரம் கழுவுதல், பாதணிகளைப் பாதுகாத்தல் முதலிய சேவைகளில் ஈடுபட்டிருந்தோம். மேன்மையாக நாம் சேவை செய்து, மேன்மையாக வரவேண்டுமென்று நாம் சிந்தித்தோம். 1988 இல் ஹைதரபாத் இளைஞர் அணியை உள்ளடக்கிச் சேவையில் ஈடுபட்டோம். சுவாமி எங்களை உன்னதமானவர்களாக மாற்றினார். எமக்கு எப்படித் தெரிந்தது? ஒரு முறை ஒரு பெரியவருக்கு எம்மை அறிமுகம் செய்யும் பொழுது "இவை தான் எனது ஹைதரபாத் பையன்கள். என்ன மாதிரிப் பிரகாசிக்கின்றார்கள் இவர்களை பிரகாசிக்க வைக்க 10 வருடம் தேய்த்து உராய்ந்தேன்" என்று சுவாமி சொன்ன போது நாங்கள் ஆனந்தமடைந்தோம். இளைஞர்களைப் பிரகாசிக்க வைப்பதில் சுவாமிக்கு அதிக அக்கறை இருக்கிறது.

மனிதனுக்கும் கடவுளுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? என்று சுவாமி நேர்காணலின் போது கேட்டார். நாங்கள் பலவற்றைக் கூறினோம்.

"எனது வாழ்வே எனது செய்தி" என்று சுவாமி அடிக்கடி கூறுவதை எம்மால் கிரகிக்க முடியுமா? நாம் எதைப் படித்துக் கொண்டோம்? "அனைவரிடமும் அன்பாயிரு. அனைவருக்கும் சேவை செய்" என்ற செய்தியையே சுவாமி வாழ்ந்து காட்டியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் சுவாமி "கடவுள் எல்லாம் அறிந்தும் ஒன்றும் தெரியாதவர் போல் மௌனமாக இருப்பார். மனிதனோ ஒன்றும் தெரியாம லிருந்தாலும், எல்லாம் தெரிந்தவன் போல நடந்து கொள்வான். இதுதான் வித்தியாசம்" என்று தெளிவு படுத்தினார்.

இன்னொரு இளைஞன் "சுவாமி நாங்கள் பிரசாந்தி நிலையத்தில் இருக்கும் வரை நல்லவர்களாக இருக்கின்றோம். ஆனால் வீடு திரும்பியதும் பழைய நிலைக்குப் போய் விடுகிறோம் இது ஏன் என்று விளக்கம் கொடுங்கள் என்று கேட்டார்? சுவாமி அதற்கு " நீங்கள் மட்குடத்தைப் போன்றவர்கள். நான் அதனுள் பிரேமை என்ற நீரை விட்டு நிரப்பியுள்ளேன். வீடு திரும்பியதும் பழையவர்களுடன் சேர்ந்து, சூரிய வெப்பம் போன்ற தீய அதிர்வுகளால் குடத்திலுள்ள நீர் ஆவியாகி மறைந்து விடுகின்றது. நீங்கள் குடத்தை நீர்த் தடாகத்தினுள் வைத்தால் அந்த நீர் வற்றாது. அது போல நல்ல குழுவினருடன் (சத் சங்கத்தில்) இருக்க வேண்டும். என்று விளக்கினார். சுவாமி சொன்னவற்றை மீட்டெடுத்துப் பயில வேண்டும் என்று விளக்கினார். ஆகவே நாம் சுவாமியுடன் ஏற்பட்ட அனுபவங்களை நன்றாகக் கிரகித்து மற்றையவர்களுடன் பகிர வேண்டும்.

நேர்காணல் முடிவில் சுவாமி வீபூதிப் பக்கட்டுக்கள் கொடுப்பது வழக்கம். ஒரு சந்தர்ப்பத்தில் சுவாமி வீபூதிக் கூடையைத் தூக்கிக் கொண்டு வரும் போது இளைஞர் ஒருவர் சுவாமியின் கூடையை வாங்கித் தூக்க முன் போனார். சுவாமி அவரைப் பார்த்து புன்னகையுடன் " நான் உம்மை மிகவும் உன்னிப்பாகக் கவனிக்கிறேன், அந்தச் சுமையிலும் பார்க்க இந்தக் கூடைச் சுமை பெரிதல்ல. என்னால் இதைச் சமாளிக்க முடியும்" என்று கூறினார். சுவாமி எங்களின் பாரங்களையெல்லாம் சுமக்கின்றார் என்பதை நாம் உணர வேண்டும்.

இன்னொரு முறை சுவாமி "நல்ல மனிதனுக்கும் கெட்ட மனிதனுக்குமிடையேயுள்ள வித்தியாசம் என்ன?" என்று கேட்டார். பலர் பல மறுமொழிகளை கூறியும் சுவாமிக்குத் திருப்தியில்லை. அவர் "நல்ல மனிதன் தனது முன்னால் நிற்கும் மனிதன் துன்புறும் போது துன்பப்பட்டும், மகிழ்ச்சியாக இருக்கும் போது மகிழ்ச்சியடைவான். தீய மனிதன் அயலவன் மகிழ்ச்சியடையும் போது துன்பப்பட்டும், துக்கமாயிருக்கும் பொழுது மகிழ்ச்சியாகவும் இருப்பான்" என்று தெளிவாகவும் இலேசாகவும் சொன்னார்.

இன்னொரு சந்தர்ப்பத்தில் "சுவாமி எம்முடைய மனதை எவ்வாறு கட்டுப்படுத்தாலும்?" என்று கேட்டதற்குச் சுவாமி மனதைக் கட்டுப் படுத்துவது இளைஞர்களுக்கு மிகக் கஷ்டம். நான் கட்டுப்படுத்தும்படி கூறவில்லை. மனதை நல்ல வழியில் திருப்பத் தான் சொன்னேன்." என்று கூறினார். நல்ல எண்ணங்கள், நல்ல சேவைகள் மூலம் மனதைத் திருப்பலாம்.

ஒரு முறை கிராம சேவைக்காக பிரசாந்தி நிலையத்தில் உணவு சமைக்கும் சேவையி லீடுபட்டோம். முடிவில் சுவாமி படம் எடுக்கச் சம்மதித்ததும் எங்களுக்குப் பிரசாதமும் தந்தார். அப்போது ஒரு இளைஞன் "சுவாமி உங்களின் ஆசீர்வாதம் எங்களுக்குத் தேவை" என்று கூறினார். சுவாமி "தொடர்ந்து சேவையைச் செய்தால், ஆசீர்வாதமும் தொடர்ந்து கிடைக்கும்" என்று கூறினார். சுவாமியின் ஆசீர்வாதத்தை நாம் சேவை செய்வதன் மூலம் நிறைய அனுபவித் துள்ளோம்.


சகோதர சகோதரிகளே சந்தர்ப்பங்கள் நிறைய உண்டு. நாம் பயன்படுத்தி ஆண்டவனின் அருளைப் பெறுவோமாக.

ஸமஸ்த லோகா சுகினோ பவந்து.

ஜெய் சாயிராம்

தமிழாக்கம்: ஆசிரியர்

(Ref: www.theprasanthireporter.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# தெய்வச் சிற்பி

**மிகவும் மதுரமாக தெய்வீகத்துடனான தன் அனுபவங்களை சகோதரன் சத்யஜித் அவர்கள் 25.12.2011 அன்று பெங்களூரில் இளைஞர்கள் மத்தியில் "தெய்வச் சிற்பி" என்ற தலைப்பில் ஆற்றிய உரையின் தமிழாக்கம்.**

சத்யஜித் சுவாமியுடனேயே எந்நேரமும் இருந்து பகவானின் தேகத் தேவைகளை பூர்த்தி செய்யும் வாய்ப்பை பெற்றவர். சுவாமி அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் இருக்கும் காலத்தில் முழுநேரமும் சுவாமியின் அருகில் இருந்து சகலதையும் கண்காணித்து சேவை செய்தவர். சுவாமியின் சுகவீனத்தைப் பற்றி ஒருவரிடமும் ஒன்றும் கூறாமல் இருந்து 25.12.2011 அன்று தான் மௌனம் கலைத்து இங்கு பிரசுரிக்கப்பட்ட உரையை நிகழ்த்தினார். (ஆ-ர்)

சுவாமியுடனான எனது பயணம் 1991 இல் தொடங்கியது. பம்பாய் பட்டினத்தைச் சார்ந்தவன், மற்ற இளைஞர்களைப் போல் நானும் இளமைப் பருவத்திற்குரிய மனப்பாங்குடனேயே இருந்தேன். பகவான் ஸ்ரீ சத்திய சாயி பிருந்தாவன் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து நாலாம் நாள், காலைச் சிற்றுண்டியின் போது எனது அருகில் இருந்த நண்பனிடம் "என்ன இது இங்கு 4 இட்லிகள் மாத்திரம் தருகின்றார்கள், வீட்டிலேயோ நான் 10 இட்லிகள் சாப்பிடுவேன்" என்று கூறினேன். சிற்றுண்டியின் பின்னர் காலைத் தரிசனத்திற்காக முன்றாவது அல்லது நான்காவது வரிசையில் அமர்ந்தேன். சுவாமி நேரே என்னை நோக்கி வந்து, என்னைப் பார்த்து ஏதோ சொன்னார். எனக்கு விளங்கவில்லை. நான் சுவாமிக்குக் கிட்டப் போனேன். சுவாமி திரும்பவும் முன்பு சொன்னதையே சொல்லியிருக்கின்றார். எனக்குப் பின்னால் உள்ளவர்கள் அனைவரும் "இட்லி சுவாமி, இட்லி சுவாமி" என்று




சொன்னார்கள். நான் அதிர்ச்சியடைந்தேன். நானும்கூட இட்லி சுவாமி என்று கூறினேன். சுவாமி எத்தனை இட்லி எனக் கேட்டார். எனது நண்பனும் பயத்தில் என்னை உற்று நோக்கினான். சுவாமி "நீ என்ன சொன்னாய்? வீட்டில் 10 இட்லிகள் சாப்பிடுவேன் இங்கு 4 இட்லிகள் தான் தருகின்றார்கள் எனச் சொன்னாயல்லவா? எனக் கேட்டார். நான் எப்போதும் போல சாதுரியமாக "இல்லை சுவாமி இங்கே பெரிய இட்லிகள், நல்ல ருசியானவை" என்று சொன்னேன். இந்த நிகழ்ச்சியின் பின்னர் 5 வருடங்கள் சுவாமி என்னுடன் பேசியதே கிடையாது. அதாவது என்னுடைய சிற்பி இந்தப் பாறைக் கல்லை அன்றே தெரிவு செய்து, அடையாளம் இட்டு, எதிர்காலத்தில் பாறைக்கல் தயாரானவுடன் செதுக்கும் வேலையை ஆரம்பிக்கலாம் என விட்டு விட்டார். ஐந்து வருடங்களின் பின்னர் ஒரு நாள், சுவாமி தனது திருக்கரத்தைக் காட்டி, என்னை அழைத்து பிரசாதத்தை வழங்கும்படி கூறினார். நான் பிரசாதத்தை எடுத்து வருவதற்காக மிகுந்த கீழ்ப்படிவுடன் பேட்டி அறைக்குள் சென்றேன். பிரசாதத்தை எடுத்து வந்த போது அப் பாத்திரத்தை மற்ற மாணவனிடம் கொடுத்து விட்டு தன்னிடம் வருமாறு அழைத்தார். நான் சுவாமியின் கதிரை அருகில் முழங்காலில் நின்றேன். அப்போது சுவாமி இன்னொரு மாணவனிடம் கதைத்துக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில், நான் எனது கரத்தை மெதுவாக உள்ளங்கை மேல் நோக்கிக் கொண்டிருக்கக் கூடியதாக சுவாமியின் திருப்பாதத்தின் அடியில் வைத்தேன். சுவாமி மற்றப் பையனுடன் கதைக்கும் அதே நேரத்தில் தனது திருப்பாதத்தினால் எனது கரத்தை மிகவும்

**நாங்கள் தொடர்ந்து சுவாமியின் வார்த்தைகளை வாசித்துக் கொண்டிருக்க வேண்டும். சுவாமி எங்களுக்காகப் பேசிய அந்த தனிவரியை எப்போது வாசிப்போம் என எங்களுக்குத் தெரியாது. அந்தத் தனிவரி தான் எங்களது தெய்வச் சிற்பி எங்களைச் செதுக்கி உயர் மாற்றம் செய்வதற்குத் தேவையான அடியாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அழுத்தமாக அமர்த்தினார். அந்த மெல்லிய திருப்பாதம் அமர்த்திய விதம் இந்தப் பாதங்களா எத்தனையோ தொன்கள் நிறையின் அடியில் எனது கை அகப்பட்டது போல அமர்த்துவது என என்னால் நம்பவே முடியவில்லை. அந்த ஜனத்திரள் முன்பாகவே மிகவும் அமைதியாக என்னில் தனது சிற்ப வேலையை தொடங்கி விட்டார். பின்னர் நான் சுவாமியின் பிருந்தாவன் பல்கலைக்கழகத்தில் இருந்த போது சுவாமி வந்து என்னுடன் கதைத்தார். நான் பிருந்தாவனில் நின்று கொண்டிருந்த போது சுவாமி என்னைத் தாண்டி வேகமாக நடந்து சென்ற போது எனது இடது காதினுள் "என்னுடன் கொடைக்கானலுக்கு வா" என மிகவும் சப்தமாகக் கூறிச் சென்றார். எனது இடது செவிப்பறை வெடித்து விடும் போலிருந்தது. நான் அழத் தொடங்கி விட்டேன். சுவாமியுடன் கொடைக் கானலுக்குப் போகப் போகின்றேன் என்ற விடயத்தை என்னால் நம்பவே முடியவில்லை. சுவாமியுடன் கொடைக்கானலில் செலவிடும் நேரம் மிகவும் பரமானந்தமயமானது.

இன்னொரு சந்தர்ப்பத்தில், பிருந்தா வனில் உள்ள சாப்பாட்டறைக்கு சுவாமி போய்க் கொண்டிருந்த போது , நான் அவர் பின்னே போய்க் கொண்டிருந்தேன். அப்போது போகும் வழியில் கடதாசிப் பெட்டி ஒன்றிருந்தது. சுவாமி என்னை நோக்கி அப் பெட்டியில் என்ன இருக்கின்றது எனப் பார் எனச் சொன்னார். நான் பெட்டியைத் திறந்து பார்த்துவிட்டு "ஊறுகாய்ப் போத்தல்கள் சுவாமி" என்று பதிலளித்தேன். சுவாமி : மிகவும் அவதானமாக இரு உடுப்பெல்லாம் தெளிபட்டு சிவப்பு நிறமாகி விடும் என்றார். நான் ஒரு போத்தலை மூடித் திறந்து பார்த்துக் கொண்டிருந்த போது, எனது குரங்கு மனம் "பாருங்கள் சுவாமி நான எவ்வளவு கவனமாகச் செய்கின்றேன், கெட்டிக்காரன், விவேகமுள்ளவன் என எண்ணிக் கொண்டிருந்தது. சுவாமி சாப்பாட்டு அறையில் இருந்து திரும்பிக் கொண்டிருந்த போது, மீண்டும் அந்தப் பெட்டிகளைக் காட்டி அவற்றில் என்ன இருக்கின்றது. எனக் கேட்டார். நான் மீண்டும் "ஊறுகாய் சுவாமி" எனக் கூறினேன். சுவாமி இன்னொரு தடவை என்ன இருக்கின்றது எனப் பார் எனக் கூறினார். நான் மீண்டும் பெட்டியை திறந்த போது, பெட்டியினுள் மறுபக்கத்தில் தக்காளி ஸோஸ் இருந்தன. இந்தச் சிவப்பு நிறப் போத்தல்களை வெள்ளை நிற மூடியுடன் மறக்கவே முடியாது. சுவாமி மீண்டும் அவற்றில் என்ன இருக்கின்றது எனக் கேட்ட போது, "இவை தக்காளி ஸோஸ் சுவாமி" என்றேன். அதற்கு சுவாமி தக்காளி ஸோஸ் என்றால் என்ன? எனத் தனக்குத் தெரியாதது போலக் கேட்டார். நான் "சுவாமி தக்காளிப் பச்சடி" எனக் கூறிக் கொண்டு சுவாமிக்குக் காட்டுவதற்காக போத்தலின் மூடியைத் திறந்தேன். மூடியைத் திறந்தவுடனேயே முழுத் தக்காளிச் ஸோஸும் பீறிட்டுக் கொண்டு தெளிபட்டு உடுப்பெல்லாம் சிவப்பு மயமாக்கியது. நான் சுவாமியைத் திரும்பிப் பார்த்த போது மிகவும் ஆனந்தமாக சத்தமாகச் சிரித்து, பரவச நிலையில் இருந்தார். பின்னர் சுவாமி கேட்டார் "உனக்கு நான் சொல்லவில்லையா? உனது சேட்டு சிவப்புக் கலராக மாறும் என" இப்போது எனது வால் எப்படி தெய்வச் சிற்பியால் செதுக்கி விடப்பட்டது என உங்களுக்கு விளங்கும்.

மே மாதம் 1996 ஆம் ஆண்டு சுவாமி ஒருநாள் என்னிடம் பிருந்தாவன் பல்கலைக்கழகப் பக்கமாகப் போய் வரலாம், போய்க் காரில் ஏறி இரு என்றார். அவ்வளவும் தான். நான் ஓடிச் சென்று காரில் ஏறி, பின் சீட்டில் சுவாமியின் பக்கத்தில் அமர்ந்தேன். காரில் போய்க் கொண்டிருந்த போது சுவாமி ஹிந்தியில் என்னிடம் "சுவாமியிடமிருந்து உனக்கு என்ன வேண்டும்?" எனக் கேட்டார்.

நான் உடனே "சுவாமி மாத்திரமே வேண்டும்" என்றேன். சுவாமி "என்னைக் கிருஷ்ணராகவோ? அல்லது இராமராகவா? பார்க்க விரும்புகிறாய்? எனக் கேட்டார். நான் சுவாமி மாத்திரமே எனக்கு வேண்டும் என்றேன். "சுவாமி உன்னுடைய வேதாந்தம் போதும் , சுவாமியை நரசிம்ஹ அவதாரமாகப் பார்க்கப் போகின்றாயா? எனக் கேட்டார். இல்லை என விரைவாகச் சொன்னேன். சீரடிக் கிழவராகப் பார்க்கப் போகின்றாயா? எனவும் கேட்டார். நான் இல்லை சுவாமி என்றேன். ஆ சுவாமி! இவ்வளவு தடவை கேட்கின்றேன், நீயோ இல்லை சுவாமி, இல்லை சுவாமி எனக் கூறிக் கொண்டேயிருக்கின்றாயே என்றார். இவ்வாறு சுவாமி திரும்பத் திரும்பக் கேட்பதால், சுவாமியுடன் முரண்படாமல், சுவாமி "உங்களுடைய விஸ்வரூபத்தைக் காட்டுங்கள்." என்றேன்.

அந்த நேரத்தில் கிருஸ்ணபகவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருச்சுனனுக்கு காட்டிய காட்சி அர்ச்சுனனை உயர் மாற்றத்திற்குள்ளாக்கியதா? அல்லது கிருஸ்ண பகவான் அர்ச்சுனனின் பார்வையில் மாற்றத்தை ஏற்படுத்தியதால் அர்ச்சுனனால் அந்தக் கண்களால் பார்க்க முடிந்ததா? என பல எண்ணங்கள் என் மனதில் ஓடிக்கொண்டிருந்தன. அப்போது சுவாமி தனது திருக்கரத்தை ஜன்னலுக்கு வெளியே நீட்டி உள்ளங்கை காரை நோக்கி இருக்கக் கூடியதாக வைத்திருந்தார். பின்னர் சுவாமி, "ஒவ்வொரு நாளும் அவன் பார்க்கின்றான், அப்படியிருந்தும் அவன் கேட்கின்றான்." எனக் கூறினார். எங்களது காரோட்டம் முடிந்து திரும்பவும் பிருந்தாவனுக்கு வந்த போது மிகவும் பழைய பக்தையான அன்ரியொருவர் சுவாமியை "சுவாமி இப்போது பிள்ளைகள் என்ன செய்கின்றார்கள்?" எனக் கேட்டார். சுவாமி அதற்குப் பார், அவர்கள் சுவாமிக்கு சேவை செய்யும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் இப் பையன் (சத்யஜித்) தனக்கு மோட்சம் வேண்டும் என்கின்றான். எனக் கூறினார். அவருடைய விமர்சனத்தின் ஆழத்தைப் பாருங்கள். எப்படி எங்கள் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்து கின்றார். எப்படி எங்களது வாழ்க்கையின் இலட்சியத்தில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றார். வாழ்க்கை என்றால் என்ன? வாழ்க்கையில் எது முக்கியமானது? வாழ்க்கையில் முக்கியமற்றது எது? என எப்படித் தெளிவு படுத்துகின்றார். எங்களது உணர்வுகளில், எண்ணங்களில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றார்.

நான் எனது இறுதிவருட முதுமாணிப் படிப்பு படித்துக் கொண்டிருந்த சமயம் நாங்கள் அனைத்து மாணவர்களும் ஒரு கண நேரத்திற் காவது சுவாமியின் தரிசனத்தைப் பார்க்க வேண்டும் என்பதற்காக சுவாமியின் காரின் பின்னே ஓடிக் கொண்டிருப்போம். ஏனெனில் எங்களது படிப்பு முடிய நாங்கள் வெளியுலகத்திற்கு செல்ல வேண்டும். எது எங்களது கடைசித் தரிசனமோ தெரியாது என நினைந்து சுவாமியின் காரின் பின்னால் ஓடுவோம்.



ஒருநாள் நான் இப்போது சுவாமியின் மகாசமாதி இருக்கும் இடத்தில் பிள்ளையாரின் சிலைக்கு முன்னால் நின்று கொண்டிருந்த போது, சுவாமி - "உனக்கு என்ன வேண்டும்?" எனக் கேட்டார். நான் "சுவாமி நீங்கள் தான் வேண்டும் என்றேன். சுவாமி திரும்பவும் என்ன வேண்டும் எனச் சொல் என்றார். உடனே நான் "சுவாமி உங்களுடைய பல்கலைக்கழகத்தில் எனக்கு எம்.பி.எ படிப்பதற்கு அனுமதியளியுங்கள்" எனக் கேட்டேன். உடனே சுவாமி உனக்கு எம்.பி.ஏ தான் வேண்டும் அல்லவா? அப்படியென்றால் அதோ பல்கலைக்கழக உபவேந்தர் அங்கு நிற்கின்றார் எனக் காட்டி அங்கு செல் என்றார். அப்போது தான் நான் உணர்ந்தேன். சுவாமிக்கு நான் அளித்த முதலாவது பதிலே சரி. கடவுளிடம் கடவுளை மட்டுமே கேட்க வேண்டும். எப்போது அவரை விட்டு வேறு ஏதாவது கேட்கின்றோமோ, அக்கணமே அவர் எங்களை எங்கள் விருப்பத்துக்கு அமைய வெளியே அனுப்பி விடுவார்.


இன்னொரு நாள் அப்போதிருந்த வழக்கப்படி பிற்பகல் 2.30 - 3.00 மணிக்கும் இடையில் நாம் சுவாமியை பின் தொடர்ந்து இன்ரவியூ அறைக்குச் செல்வோம். அன்று நான் இன்ரவியூ அறைக்குச் சென்ற போது, வெளியே நின்ற ஒருவர் "சுவாமி ஏற்கனவே வந்து விட்டார் எனக் காதில் குசுகுசுத்தார். சரி சரி நான் கொஞ்சம் பிந்தி விட்டேன் எனக் கூறி அறையினுள்ளே சென்றேன். சுவாமி அங்கு எந்த அவதாரத்தின் உருவத்தை நான் பார்க்க விரும்பவில்லையோ அந்த நரசிம்ஹ அவதார உருவத்தில் (மிகவும் கடுமையான கோபத்தில்) நின்றார். சுவாமி "எதற்காகப் பிந்தி வந்தாய் எனக் கேட்டார்?" எனக்குச் சுவாமி நீங்கள் வழக்கத்தை விட முன்னதாகவே வந்து விட்டீர்கள் எனக் கூறத் துணிவில்லை. சுவாமி கோபமா யிருந்தார். சுவாமியின் கையில் ஒரு கடிதம் இருந்தது. நான் ஹாஸ்டலில் இருந்த 5 வருட காலங்களில் பல இளமைப் பருவத்திற்குரிய நடவடிக்கையில் ஈடுபட்டேன். என்னை வழி நடத்த சுவாமியின் தலையீடு நேரடியாகத் தேவைப்பட்டது. சுவாமி கையில் இருந்த கடிதத்தைக் காட்டி, இதோ பார் "உன்னைப் பற்றி என்னவெல்லாம் வெளிவருகின்றது" எனக் கூறினார். நான் சுவாமி என்ன நடந்தது. எனக் கேட்டேன். நீ மிகவும் வாயாடிப் பையன் எனவும் மற்றும் குறைகள் பற்றி ஹாஸ்டல் வார்டன் எழுதியுள்ளார். பார் கடிதத்தை எனக் கூறினார். "நீர் இப்படியெல்லாம் இருந்தும் சுவாமி எப்படித் தெரிந்தெடுத்தார் எனக் கேட்கின்றனர் என்றார். என் மனம் மிகவும் உடைந்தே போய் விட்டது. எனது முழங்காலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையை வைத்து மனந்திறந்து, தேம்பித் தேம்பி அழத் தொடங்கி விட்டேன். எனக்கு மிகவும் சப்தமாக மூச்சு வாங்கத் தொடங்கி விட்டது. உடனே சுவாமி மென்மையான பட்டர் மாதிரி மிகவும் உருகி விட்டார். சுவாமி தனது தலையை பின்புறமாகக் கழுத்திற் பிடித்து, எனது தலையை தன்னுடன் நெஞ்சுடன் சேர்த்து அணைத்துக் கொண்டார். எனது தலை சுவாமியின் நெஞ்சைத் தொட்ட கணமே எனது விம்முதல் நின்று விட்டது. என் மனம் சாந்தமடைந்து விட்டது. அதன் பின்னர் சுவாமி கேட்டார். "நீ குழந்தையாக இருந்த சமயம் வெறுமனே நிர்வாணமாக ஓடியாடித் திரிய வில்லையா? நான் சிரித்து ஆம் சுவாமி, அப்படி நான் செய்திருக்கக் கூடும்." என்றேன். சுவாமி "அப்படியென்றால் இப்போதுகூட அப்படி செய்வாயா? எனக் கேட்டார்.. நான் "இல்லை சுவாமி. இல்லை இப்போது செய்ய மாட்டேன்" எனக் கூறினேன். சுவாமி சொன்னார் "இங்கே பார் அப்போது அவ்வாறு நடந்து கொண்டது உனது சுவபாவம். ஆனால் இப்போது, அவ்வாறு நடந்து கொண்டதை நினைத்தால் கூட வெட்கப் படுகின்றாய் இல்லையா? எனக் கேட்டார். அதே போல சுவாமியுடன் கதைப்பதற்கு முன்னர் உனது நடத்தை உன்னுடைய சகஜ சுபாவமாக இருந்தது. ஆனால் சுவாமியுடன் கதைத்த பிறகு உனது நடத்தை இனிமேலும் உனது சகஜ சுபாவமாக இருக்க மாட்டாது. அப்படியிருக்க, ஏன் நீ கவலைப்பட வேண்டும். நீ உனது அஞ்ஞானத் தினால் முன்பு அவ்வாறு நடந்து கொண்டாய்" எனச் சுவாமி என்னுடன் மிகவும் அன்புடன் பேசி, எவ்வாறு இந்தப் பாறைக்கல்லை உயர் மாற்றத்திற்குள்ளாக்கினார் என்பதை நான் இன்னும் ஞாபகத்தில் வைத்திருக்கிறேன்.

நான் சில காலங்களுக்கு முன்னர், சுவாமியிடம் அனைவருக்கும் காலைத் தரிசனம் கொடுங்கள் என பிரார்த்திப்பேன். நான் அவரிடம் கெஞ்சி சுவாமி, எவ்வளவோ மக்கள் தொலைவி லிருந்தெல்லாம் வந்து தரிசனத்திற்காகக் காத்திருக்கின்றார்கள். கிழமைக்கு இரண்டு தடவைகளாவது காலைத் தரிசனத்துக்குச் செல்வோம் என வேண்டுதல் செய்வேன். சுவாமி சொன்னார். "இந்த உடம்பு எவ்வளவு பணி செய்து விட்டது என உனக்குத் தெரியுமா? கிராமம், கிராமமாகச் சென்றேன். இப்போது இந்த சரீரம் பலவீனமாகி விட்டது" என்றார். இவ்வாறு சுவாமி கூறுவதைக் கேட்டவுடன் என் கண்கள் குளமாகின. நான் சுவாமியிடம் "சுவாமி நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள் எனப் பிரார்த்தித்தேன். நான் "சுவாமி நீங்கள் தயை செய்து ஓய்வெடுங்கள். நாங்கள் வேலை செய்வோம், நீங்கள் எங்களை கண்காணியுங்கள் சுவாமி" எனச் சொன்னேன்.



ஒருநாள் ஹரியானாவைச் சேர்ந்தவர்கள் சுவாமிக்கு முன்னால் நாடக நிகழ்ச்சி ஒன்றை நடாத்திக் காட்டினார்கள். அச்சமயம் பெண்மணி ஒருவர் "சுவாமி நான் உங்களை நேசிக்கிறேன்" எனக் கூறினார். உடனே சுவாமி "என் வார்த்தைகளை நேசி" எனக் கூறினார். ஆம் சகோதர சகோதரிகளே நாங்கள் எங்கள் தெய்வச் சிற்பி பேசிய வார்த்தைகளை அன்புடன் நேசித்து நமது வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும்.

நாங்கள் தொடர்ந்து சுவாமியின் வார்த்தைகளை வாசித்துக் கொண்டிருக்க வேண்டும். சுவாமி எங்களுக்காகப் பேசிய அந்த தனிவரியை எப்போது வாசிப்போம் என எங்களுக்குத் தெரியாது. அந்தத் தனிவரி தான் எங்களது தெய்வச் சிற்பி எங்களைச் செதுக்கி உயர் மாற்றம் செய்வதற்குத் தேவையான அடியாகும். நாங்கள் அதுவரைக்கும் வாசித்துக் கொண்டேயிருக்க வேண்டும். எவ்வாறு மக்கள் பகவத் கீதையை வாசிக்கின்றனரோ, அதே போல இன்றிலிருந்து ஆயிரக்கணக்கான வருடங்கள் வரை சுவாமியின் அருளுரைகளை வாசித்துக் கொண்டேயிருப்பார்கள்.

சுவாமி வைத்தியசாலையிலிருந்த காலகட்டம் மிகவும் கஸ்டமான கால கட்டம். நான் சுவாமி மீண்டும் வருவார் என எதிர்பார்ப்புடன் இருந்தேன். தினமும் சுவாமி நடந்து வருவதாகவும், என்னுடன் முன்பு போல கதைப்பதாகவும் கனவு கண்டேன். இரண்டாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழமை சுவாமி வைத்தியசாலையில் கட்டிலில் படுத்திருப்பதாகவும், ஆரோக்கியம் நலமாக வில்லை எனவும் கனவு கண்டேன்.

கடைசிக் கிழமை சுவாமி எனது கனவில் வருவதை நிறுத்தி விட்டார். கனவில் வருவதும் இல்லை. கதைப்பதும் இல்லை என்பதை உணர்ந்த நான் , சுவாமியின் கட்டிலின் அருகில் ஓடிச் சென்று சுவாமி எனக்கு ஒரு செய்தியாவது தர வேண்டும் என்னுடன் கதைக்க வேண்டும் என இரந்து வேண்டினேன். நான் வைத்தியசாலையில் தொடர்ச்சியாக 3,4 நாட்கள் நித்திரை போக வில்லை. ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி, நான மிகவும் களைப்படைந்திருந்ததால் சில நிமிடங்களாவது கண்களை மூட நினைத்தேன். நான் நித்திரை போகவெனக் கண்களை மூடி 5 நிமிடங்கள் கூட இல்லை, சுவாமியின் குரலை மிகவும் தெளிவாகக் கேட்டேன். இத்தடவை முன்பு கொடைக்கானலுக்கு வா எனச் சொன்னது போல மிகவும் சத்தமாக இச்சமயத்தில் எனது வலது காதில் "கவனமாக இரு" என்று சொன்னார். எனது செவிப்பறை வெடித்து விடும் போலிருந்தது. நான் திடீரென எழுந்து சுவாமியின் அறைக்குள் ஓடினேன். ஆனால் எனக்குள்ளே ஏதோ நடக்கப் போகின்றது எனத் தோன்றியது.

அண்மையில் சுவாமியின் மகா சமாதி திறந்து 4 நாட்களான பின்னர் முன்னொரு சமயம் சுவாமியின் இன்ரவியூ அறையில் விம்மி விம்மி அழுதது போல அழுதேன். எனது தலையை சமாதியின் மாபிளில் வைத்த அந்தக் கணமே எனது அழுகை நின்று விட்டது. எனது மனத்தில் பூரண சாந்தி நிலவியது. முன்னர் ஒரு தடவை சுவாமி எனது தலையை நெஞ்சில் வைத்த போது எப்படி சாந்தி கிடைத்ததோ, அதே மாதிரியே இச் சந்தர்ப்பத்திலும் உயர்ந்தேன். ஆம் சுவாமி இன்னமும் எங்களுடனேயே இருக்கின்றார்.

கடந்த பிறந்த நாட்களுக்குக் கிட்டவாக, 10 நாட்கள் என்னால் நித்திரையே கொள்ள முடியவில்லை. நான் மிகவும் பாதிப்படைந்த நிலையில் இருந்தேன். சுவாமி தனது பௌதீக உடலை விட்டுச் சென்ற நாள் தொடக்கம் நான் மனமுடைந்த நிலையிலேயே இருந்தேன். இரவும், பகலும் விழிப்புடனே இருப்பேன். சுவாமியின் பிறந்தநாள் 23 ஆம் திகதி அன்று, ஒரு நிகழ்ச்சி நடந்தது. அதை உங்களனைவருடனும் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். நாங்கள் அனைவரும் சுவாமியின் ஊஞ்சலை அலங்கரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தோம். அதே ஊஞ்சலில் சுவாமி திருவூஞ்சல் ஆடுவது வழக்கம். சுவாமியின் பிறந்த நாளன்று நானும் சில பையன்களும் சுவாமியின் அறைக்குச் சென்று திருவிளக்கு ஏற்றினோம். அன்று நாங்கள் பஜனை பாடினோம். அதன் பின்னர், சுவாமி பாடிய பஜனையை சுவாமியின் அதே அறையிலேயே கேட்பதற்காக இருந்தோம். அவ்வாறு கேட்டுக் கொண்டிருக்கும் சமயம் நான் நித்திரை போய்விட்டேன். அப்போது சுவாமியை கனவில் கண்டேன். அந்தக் கனவு என்னைப் பற்றியது. சுவாமியின் அதே அறையிலேயே நான் இறந்து கிடப்பதாகவும், சுவாமி என்னை உயிர்ப்பிப் பதற்காக இதயத்தை மஸாச் செய்து அழுத்தி திரும்பவும் என்னை மீள உயிர் பெறச் செய்வதாகவும் கண்டேன். நான் திடீரென நித்திரை முளித்தேன். அப்போது உணர்ந்தேன். சகோதரர்களே, நாங்கள் எழுந்திருந்து சுவாமியின் தெய்வீகப் பணியை முன்னெடுத்துச் செல்வதற்கு நேரம் வந்து விட்டது. என நாங்கள் அனைவரும் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள் ஏனெனில் வாழும் தெய்வத்துடன் வாழ்ந்தவர்கள். ஆனந்தத்தை அனுபவிக்கக் கொடுத்து வைத்தவர்கள். சுவாமியினால் யாரெல்லாம் தேர்ந்தெடுக் கப்பட்டார்களோ அவர்களினா லெல்லாம் சாதாரண வாழ்க்கையை நடாத்த முடியாது. "சகோதரர்களே எங்களுக்கு சாதாரண வாழ்க்கை என்பது இல்லை" சுவாமி எங்களுடைய வாழ்க்கையை சிறப்பு மிக்க வாழ்க்கையாக மாற்றி விட்டார். இப்பொழுது எங்களுடைய கடமை சுவாமியினுடைய பணியை முன்னெடுத்துச் செல்வதாகும். ஆம் நாங்கள் அவர் ஆற்றிய அருளுரைகளை எந்த நேரத்திலும் நேசிக்க வேண்டும். அவர் எந்த நேரத்திலும் சந்தேகத்துக்கிடமின்றி எங்களுடனேயே இருக்கின்றார். அவருடைய அருளுரைகள் வரப் போகும் மில்லியன் வருடங்களுக்கு இந்த உலகத்தை ஆகம். இவையெல்லாம் எங்கள் ஞாபகத்தில் இருந்து, நாங்கள் தளர்ந்து போகும் சமயத்திலெல்லாம் சக்தியை அளிக்கும். இந்த ஞாபகச் சுவடுகள் எங்களை முன்னோக்கி இட்டுச் செல்லும். எங்களுக்குச் சாதாரண வாழ்க்கை என்பதே கிடையாது.

இந்தச் சமீபத்தில் ஒலிபெருக்கி தடைப்பட்டது. உடனே சத்யஜித் சிரித்து. சுவாமி நான் இன்று பேசியது காணும் என அறிகுறி காட்டி விட்டார் எனக் குறி அவருடைய இனிமையான பேச்சை நிறைவு செய்தார்.

ஜெய் சாயிராம்

தமிழில் மொழிபெயர்த்தவர்:
சுலோசனா உமாபதிசிவம்
புட்டபர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# வேத நாயகன் - வேதியர் நாயகன்



எங்கும் நிறைந்த இறைவனுடைய மூச்சு வேதமாகும். ஆகவே வேதம் எங்கும் நிறைந்தது. வேதமானது ஆன்மீக அறிவையும், உலக அறிவையும் உள்ளடக்கியது.

வேதநாயகனாகிய பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா அவர்கள் 2006 ஆம் ஆண்டு அதிருத்ர மகா யக்ஞனத்தின் முடிவில் "வேதம் எல்லோருக்கும் பொதுவானது. சகலரும் வேதம் ஓத வேண்டும்" என்று கூறினார்.

2008 ஆம் ஆண்டில் உலக நன்மைக்காக எல்லோரும் ஸ்ரீ ருத்ரம் ஓத வேண்டும் என்று வலியுறுத்திக் கூறினார். அது மட்டுமல்லாது பிரசாந்தி நிலையத்திற்கு வந்திருந்தவர்கள் அனைவருக்கும் அவரவர் மொழியில் ஸ்ரீ ருத்ரம் அச்சிட்டுக் கொடுக்கப்பட்டு சுவாமியினுடைய மாணவர்களால் ஸ்ரீ ருத்ரம் சொல்லிக் கொடுக்கப்பட்டது.

ஸ்வாமியின் இந்த அறைகூவலின் விளைவாக யாழ் நிலையத்தில் ஒரு சில பக்தர்கள் வேதம் சொல்ல வேண்டும் என்ற முனைப்புடன் 2008 ஆம் ஆண்டு வேதம் பழக ஆரம்பித்தார்கள்.

2010 ஆம் ஆண்டு பர்த்தி யாத்திரையின் போது அந்த பக்தர்கள் வேதநாயகனாகிய ஸ்வாமியின் முன்னால் வேதம் சொல்ல வேண்டும் என்ற விருப்பம் இருந்தது. ஆனால் சுவாமி தன்னுடைய மாணவர்களுடன் சேர்ந்து ஓதுங்கள் தனியாக ஓதி ஸ்வாமி அறிய வேண்டியதில்லை என்று சங்கல்பத்திருந்ததால் அவர்களுக்கு அந்த வாய்ப்பு அவர்களுக்கு கிட்டவில்லை. ஆனால் பர்த்தி யாத்திரையின் பின்னர் மேலும் முனைப் புடன் வேதம் ஓதப் பழகி யாழ் நிலையத்தில் பஜனையின் முன்னராக ஸ்ரீ ருத்ரம் கிரமமாக ஓதி வந்தார்கள்.

இதிலே விசேடம் ஓர் அன்பர் நாள்தோறும் காலையில் யாழ் நிலையத்திற்கு வந்து ருத்ரம் சொல்ல ஆரம்பித்தார்.

2011 ஸ்வாமியினுடைய பிறந்த தினத்தில் அந்த அன்பரின் பூஜை அறையில் இருந்த சுவாமியின் படத்திலிருந்து விபூதி வெளிப்பட ஆரம்பித்தது. இது ஸ்ரீருத்ரம் சொல்வதை ஸ்வாமி வெளிப்படையாக ஆசீர்வதித்தாக அந்த அன்பர் உணர்ந்தார்.

அவர் இருந்த வீட்டிலிருந்த இன்னொரு வாடகை வீட்டிற்கு மாற வேண்டி ஏற்பட்டது. அப்போ மாறிய வீட்டிற்கு படங்களை நன்றாக துடைத்து புதிய பிரார்த்தனை அறையில் வைத்தார்கள். அன்று மதியமே மீண்டும் படத்திலிருந்து விபூதி அதிகமாக வெளிப்பட்டது.

இதைத் தொடர்ந்து இன்னுமொரு சாயி பக்தை தன் பிள்ளைகளுக்கும் வேதம் பழக்கி நிலையத்தில் நிலைய அன்பர்களுடன் ஓதி வந்தார். 2011 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27 ஆம் திகதி அவர்கள் குடும்பமாக திருகோணமலையில் ஸாயி அன்பருடைய வீட்டில் சொரிந்த விபூதி அற்புதம் காணச் சென்றார்கள். தாங்கள் கொண்டு சென்ற சுவாமியினுடைய திருவுருவப் படத்தையும் அங்கு வைத்து ஸ்ரீ ருத்ரம் ஓதினார்கள். மறுநாள்

**பக்தர்களும் ஸ்ரீருத்ரம் பயில ஆரம்பித்து ஸ்ரீருத்ரம் ஓதவதில் தங்களை இணைத்துக் கொண்டார்கள். விளைவு வேத நாயகனின் ஆசீர்வாதம் அவ்வப்போது விபூதியாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காலை எழுந்து பார்த்த போது அவர்கள் கொண்டு வந்த படத்தில் ஏறத்தாழ பிறை வடிவில் ஸ்வாமியினுடைய முடிப்பகுதியில் விபூதி வெளிப்பட்டிருந்தது. வேதநாயகன் சிவ சாயி நாதன் வேதம் ஓதுபவர்கள் எவரும் வேதியர்களே அவர்களுக்கு நானே நாயகன் என்று உணர்த்தி ஆசீர்வதித்திருந்தார்.

அதைத் தொடர்ந்து அந்த ஸ்வாமியினுடைய திருவுருவப் படத்தை அவர்கள் தங்களது வீட்டிற்கு எடுத்துச் சென்று தினமும் காலையும், மாலையும் கிரமமாக குடும்ப அங்கத்தவர்கள் எல்லோரும் சேர்ந்து ஸ்ரீருத்ரம் ஓத ஆரம்பித்தார்கள். ஸ்வாமி தன்னுடைய ஆசீர்வாதத்தை வெளிப்படையாக்க அங்கு பூஜை அறையில் இருந்த சகல சத்திய சாயி, சீர்டி சாயி திருவுருவப் படங்களிலிருந்தும் விபூதி வெளிப்பட ஆரம்பித்தது.

இவ் வேளையில் ஸாயி அன்பர்களின் வீடுகளில் மட்டும் ஏன் சுவாமி ஆசீர்வாதங்களை அள்ளி வழங்க வேண்டும்? சாயி நிலையத்திலும் தன்னுடைய ஆசீர்வாதத்தை வெளிப்படுத்தக் கூடாது? இங்கும் ஸ்ரீ ருத்ரம் ஓதப்படுகின்றது தானே என்று யாழ் சாயி நிலையத்தைச் சேர்ந்த அன்பர்கள் பலருக்கு மனதிலே எண்ணங்கள் எழுந்தது. வேதநாயகன் ஆசீர்வதிக்க திருவுள்ளம் கொண்டிருந்தாரெனினும் அதற்காக சரியான தருணத்திற்காக காத்திருந்தார் போலும். யாழ் நிலையத்தில் சாயி கணபதி ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டுவதற்கு முதல் நாள் மாலை பஜனை முடிவின் பின்னர் அறிவித்தல் செய்யப்பட்டது. என்னே அதிசயம் ஸ்வாமியினுடைய திருவுருவப் படத்திலிருந்து விபூதி வெளிப்பட்டது. இது நிலையத்தில் ஸ்ரீருத்ரம் ஓதப்படுவதையும், சாயி கணேசர் ஆலயம் அமைக்கப்படுவதையும் ஆசீர்வதிக்கும் ஒரு வெளிப்பாடாகவே பக்தர்கள் உணர்ந்தார்கள். ஸ்வாமியினுடைய வெண்ணிற ஆடையணிந்த அந்த திருவுருவப் படத்திலிருந்து வெளிப்பட்ட விபூதி மாணிக்கவாசகருடைய திருவாசக வரிகளை எமக்கு ஞாபகப் படுத்துகின்றது.

துப்பனே தூயாய்! தூய வெண்நீறு
துதைந்து எழுதுளங்கு ஒளிவயிரத்து
ஒப்பனே! உன்னை உள்வாங்குவார் மனத்தில்
உறுசுவை அளிக்கும் ஆர் அமுதே!

(தமிழர்கள் பக்தியில் சிறந்து விளங்குவதற்கு காரணம் மாணிக்கவாசகரின் திருவாசகம் தான் என்று ஸ்வாமி சென்னையில் கூறியது இங்கு ஞாபகத்தில் கொள்ளத் தக்கது)

அதன்பின்னரும் யாழ் நிலையத்தில் பக்தர்களும் ஸ்ரீருத்ரம் பயில ஆரம்பித்து ஸ்ரீருத்ரம் ஓதுவதில் தங்களை இணைத்துக் கொண்டார்கள். விளைவு வேத நாயகனின் ஆசீர்வாதம் அவ்வப்போது விபூதியாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது.

மேலும் சாயி கணேசர் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு ஸாயி கணேசரை வேத கோசத்துடன் பிரதிஸ்டை செய்த வேளையில் ஸ்வாமியின் ஆசீர்வாதம் விபூதியாக வெளிப்பட்டு கூடியிருந்த பக்தர்களை பரவசப்படுத்தியது. ஸாயி பக்தர்களாகிய எங்களுக்கு இந்த அற்புதங்களின் மூலம் ஸ்வாமி தரும் செய்திதான் என்ன?


வேதநாயகனாகிய சுவாமியை வேதங்கள் ஓதுபவர்களாகிய வேதியர்களாக எம்மை மாற்றுவதன் மூலம் வேதியர் நாயகனாக அவர் எங்களுடன் என்றும் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வோமாக.

ஆகவே இன்று முதல் சகலரும் ஸ்ரீ ருத்ரம் பழகி ஓத ஆரம்பியுங்கள் ஓத முடியாதவர்கள் உங்கள் இல்லங்களிலோ, ஸாயி நிலையங்களிலோ சீடியில் ஸ்ரீருத்ரம் ஒலிக்க செய்து சிரத்தையுடன் கேட்டு பயன் பெற முடியும்.

(குறிப்பு: ஸ்ரீருத்ரம் சீடி, ஸ்ரீருத்ரம் தமிழ் பதிப்பு நூல்களை பெற விரும்புபவர்கள் யாழ் நிலையத்தை தொடர்பு கொள்ளலாம்.)

ஜெய் சாயிராம்

சாயி அன்பர்,
யாழ். சத்திய சாயி சேவா நிலையம்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீக சாதனையா? கடமை செய்வதா சிறந்தது?

**மனச்சாட்சியின்படி கடமையைத் திறம்படச் செய். ஆன்மீக சாதனை உங்களைத் தூய்மைப் படுத்துவதற்கேயாகும். வேலையைப் பிரார்த்தனையாக மாற்று**

**- பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா**

**பேராசிரியர் அனில் குமார் அவர்களுடன் ஓமான் நாட்டில் நிகழ்ந்த கேள்வியும் பதிலும்**

**ஆசிரியருக்கும் குருவுக்குமுள்ள வித்தியாசம் என்ன?**

ஆசிரியர் உலகரீதியான தற்காலிகமான அறிவைப் புகட்டுவார். குரு நிரந்தரமான கல்வியைப் புகட்டுபவர் குரு அக்ஞானம் என்ற இருளைப் போக்குபவர்.

ஒரு முறை சுவாமியுடன் உரையாடிக் கொண்டிருக்கும் போது சுவாமியிடம் முதலிலே மன்னிப்புக் கேட்டுக் கொண்டு "மனிதன் சித்தியடைந்தான், கடவுள் சித்தியடையவில்லை" (சுவாமி ஒரு பார்வை பார்த்தார்) இறைவன் எத்தனையோ அவதாரங்கள் எடுத்தும் மனிதன் திருந்தவேயில்லையே மனிதன் வென்று விட்டான். கடவுள் வெல்லவில்லையே" என தமாஷாகச் சொன்னேன்.

**எஜூகெயர் ஆசிரியர் எப்படியாகச் செயற்பட வேண்டும்?**

சம்பளத்திலோ, பாடத்திட்டத்திலோ, வேறு ஒன்றிலும் கவனம் செலுத்தாது மாணவனின் முன்னேற்றத்தையே நோக்கமாகக் கொண்டு செயற்பட வேண்டும். மாணவன் என் மீது அதீத நம்பிக்கை கொள்ளுமாறு செயற்பட வேண்டும்.

**இளைஞர்கள் மத்தியில் ஆன்மீக வறட்சி தென்படுகிறதேன்?**

சமூகத்திலும் பெரியோர்களிலும் இருக்கும் ஆன்மீக வறட்சியே இதற்கு முக்கிய காரணமாகும். இளவயதில் பௌதீகக் காதல் வழமையானது. அது தெய்வீகக் காதலாக மாற வேண்டும். இறைவனையே சதா சிந்திப்பதும், அவருடன் ஒன்றியிருப்பதுமே தெய்வீகக் காதல். இதில் மகிழ்ச்சியல்ல பரவசமே எழும்.

**தற்போது உள்ள கல்வி முறையில் எவ்வாறு எஜூகெயரை புகுத்தலாம்?**

சாதாரண கல்விமுறையில் அறிவு பகிர்ந்து கொள்ளப்படுகிறது. எஜூகெயரில் முன் மாதிரியான முறை மூலம் கல்வி புகட்டப்படு கின்றது. உதாரணமாக டாக்டர்.அப்துல்கலாம் தனது முதல்நிலைப் பள்ளியில் கற்பித்த ஆசிரியர்களை அடிக்கடி நினைவு கூறுவார். அவர்கள் எவ்வாறு தனது மேன்மைக்கு உதவினார்களென்று அடிக்கடி கூறியுள்ளார். வாழ்க்கையை மேம்படுத்தும் கல்வியே எஜூகெயர்.

**உலக ஆசைகளுக்கும், ஆன்மீகத்தின் நாட்டத்திற்கும் என்ன வித்தியாசம்?**

உலக ஆசைகள் பௌதீகமானவை. ஆன்மீக நாட்டம் ஆத்மாவை அடிப்படையாகக் கொண்டது. உலக ஆசை எட்டாவிட்டாலும் வாழலாம். ஆனால் ஆன்மீக நாட்டம் அத்தியாவசியமான ஒரு தேவை

**இளைஞர்களிடம் எவ்வாறு நம்பிக்கை வளர்க்கலாம்?**

நம்பிக்கை குன்றுவதற்குப் பெற்றோர்களே காரணம். பிள்ளை எவ்வாறு நாளுக்கு நாள் வளர்கின்றான், மலர்கின்றான் என்பதில் அக்கறை காட்டுவதில்லை. அக்கறை கண்காணிப்பு இல்லாததால் பிள்ளைகளுக்குப் பெற்றோர்களில் நம்பிக்கையில்லை. பெற்றோர்களுக்கும் பிள்ளைகளில் நம்பிக்கையில்லை.

மாணவர்கள் ஆசிரியர்களில் நம்பிக்கை இல்லாததற்குரிய காரணங்களாவன:

பாட அறிவு திருப்தியற்றமை

நேரத்தைக் கடத்துவதில் அக்கறை

தெளிவாக பாடத்தை விளங்கப்படுத்த முடியாமை

தனிப்பட்ட வாழ்க்கை முறை சரியின்மை

அன்பில்லாமை ஆகியவையாகும்.

பெற்றோர், ஆசிரியர், சமூகம் நம்பிக்கையூட்டும் விதத்தில் நடந்து கொள்ள வேண்டும்.

**இரட்டை நிலைகளடங்கிய உலகில் வாழும் பொழுது முழுமையான வாழ்க்கையின் அனுபவத் தை நாம் அடையலாமா?**

- வாழ்வு உடம்பிலிருந்து ஆன்மாவை நோக்கிய பயணம்.
- வாழ்வு புறத்திலிருந்து அகத்திற்கு செல்லும் பயணம்.
- வாழ்வு மனித நிலையிலிருந்து தெய்வீக நிலைக்குச்செல்லும் பயணம்.
- வாழ்வு துவைதத்திலிருந்து அத்வைதத்திற்குச் செல்லும் துணிகரமான பயணம்.

துவைதமும், அத்வைதமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களேயாகும். நாம் சமநிலையைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேண வேண்டும். உதாரணம்: கடவுள் ஒன்றே எல்லாவற்றிலும் வீற்றிருப்பவர் என்பது அத்வைதம். ஆனால் நாம் உலகில் செயற்படும் பொழுது வித்தியாசத்தை பேணவேண்டியுள்ளது. உதாரணம், ஆசிரியர், மாணவர், பணிப்பாளர், வேலையாள். ஆனால் தத்துவ அடிப்படையில் எல்லாம் ஒன்று என்ற சிந்தனையில் இருக்க வேண்டும்.

**ஒரு எஜுகெயர் ஆசிரியர் எவ்வாறு இயற்கையிலிருந்து படிப்பினைகளை பெற்றுக் கொள்வார்?**

ஓர் உதாரணம்

சிலர் சீமெந்துக் கல்லுகளை அறுத்து அடுக்கி வேலையிலீடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஒரு கோயில் கட்டுவதற்காகவே இதைச் செய்தார்கள். ஒரு புதியவர் இவர்களில் ஒருவனிடம் என்ன செய்கிறாய்? எனக் கேட்டார். நான் அயலக் கிராமத்தவன் கூலிக்கு நாளாந்த தேவையைப் பூர்த்தி செய்வதற்காக இவ் வேலையைச் செய்கிறேன் என்றான். இன்னொருவனிடம் கேட்ட பொழுது அவன் "நான் ஒரு தேவாலயத்தைக் கட்டுவதற்கு உதவுமுகமாக வேலையைச் செய்கிறேன்" என்றான். இன்னொருவன் "நான் தேவாலயத்தில் ஏதோ ஒரு பகுதிக்குத் தேவையான கல்லை அறுக்கின்றேன். இப் பகுதி என் கைகளால் ஆண்டவனுக்குக் கொடுக்கப்படும் நிவேதனம்" என்றான். இம்மூன்று மறுமொழிகளிலிருந்து கிடைத்த படிப்பினை ஒரே வேலையைச் செய்தாலும் மனப்பாங்கும் அதன் நோக்கமும் அதனை ஒரு தொழிலாகவும், உதவும் தொழிலாகவும், அதனை ஒரு பிரார்த்தனையாகவும் நிர்ணயிக்கின்றன. மூன்றாவது மனப்பாங்குதான் எஜுகெயர்.

**உலகத்திலே 'வாழ்ந்தாலும் உலகத்தை உள்ளெடுக்காதே" இக் கூற்றை விளக்கவும்?**

மற்றையவர்களுடைய செயல்களாகவோ, வார்த்தைகளாலோ புறநிகழ்வுகளாலோ நான் பாதிப்படைந்தால் உலகம் என்னுள்ளே புகுந்து விட்டதென்பதாகும்.

திருமதி.அனில்குமார்: புட்டபர்த்தியில் வந்து வசிக்கத் தொடங்கிய காலத்தில் என்னால் சரிக்கட்டிக் கொள்ள முடியவில்லை. சூழலும், ஆட்களும் எனக்குப் பிடிக்கவில்லை. நான் ஒவ்வொரு நாளும் புறுபுறுப்பது வழக்கம். 3 வருடங்கள் கழிந்தன ஒருநாள் ஒரு குறையும் கூறாமல் தரிசன வரிசையில் இருந்தேன். சுவாமி முன்னால் வந்து "ஏன் இன்று சுப்ரபாதம் பாடவில்லை? என்று வினாவினார். சுவாமி என்னத்தைக் குறிக்கிறாரென்றதை விளங்கிக் கொண்டேன். அப்போது சுவாமியிடம் "என்னால் இங்கிருக்கும் சூழலுக்கும் மக்களுக்கும் முகம் கொடுக்க முடியுதில்லை. என்ன செய்யலாம்" என்று கேட்டேன்.

சுவாமி- "ஏன் இங்கு வந்தாய்? என்று கேட்க நான் சுவாமியிடம் வந்தேன்" என்று பதிலளித்தேன். அப்பொழுது சுவாமி ஆனபடியால் உன்னுடைய கவனம் முழுவதும் சுவாமியின் மேலிருக்க வேண்டும் சூழலிலும் ஏனையோரிலும் அல்ல" என்று விளக்கினார். இது என்னை மேம்படுத்த உதவியது.

**இளைஞர்களுக்கு ஆன்மீகம், சாதனை என்றால் பெரும் குழப்பமாயிருக்கிறது. இதற் விளக்கம் கொடுங்கள்?**

யார் யார் அறநெறி வாழ்வு வாழ்கிறார்களோ, சுவாமியின் மீது நம்பிக்கையும், பக்தியும், அர்ப்பணிப்பும் கொள்கிறார்களோ அவர்களே சுவாமியின் மாணவர்களாவார்கள். அதாவது அண்மையிலிருப்பவர்களாவார்.

ஆன்மீகம் கற்பிக்கும் பொழுது, கற்பவர்களின் வயது விளங்கும் தன்மை, விருத்தி நிலை ஆகியவற்றிற்குப் பொருத்தமாகக் கற்பிக்க வேண்டும். உதாரணம் சிறுபிள்ளைகளுக்கு கதைகள் மூலமும், நாடகம் பாத்திர நடிப்பு மூலமும், மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு மனித மேம்பாடுகளுக்கு விளக்கம் கொடுத்துக் கற்பிக்க வேண்டும். சிறு பிள்ளைகளுக்கு இராமர், இராவணனுடன் போர் புரிந்தார் என்றும் மேல் நிலைப் பள்ளி மாணவர்களுக்கு சத்தியம் என்றால் இராமர், தீயதென்றால் இராவணன், உற்சாகம் ,சேவகன் என்றால் ஆஞ்சநேயன் என்று கற்பிக்க வேண்டும். பட்டதாரி மேல்பள்ளி மாணவனுக்கு எஜுகெயர் என்றால் என்ன? என்று கற்பிக்க வேண்டும்.

இளைஞர்களுக்கு ஆன்மீகம் என்னவென்றால் கடின உழைப்பு, மாணவர்களுக்குப் பாடல்களைச் செவ்வனே கற்றல், பட்டப் பின்படிப்பு மாணவருக்கு ஆராய்ச்சி, வெற்றி, அறிவுத்திறன், மனிதஉன்னதம், உச்ச ஆக்கசக்தி, தலைமைத்துவம், துணிவு ஆகியவையே ஆன்மீகமாகும்.

ஆன்மீகம் முதலில் கசப்பாயிருந்தாலும் பின்பு சுவையானதாயும் இனிப்பாயும் இருக்கும். மாங்காய் சிறியதாயிருக்கும் பொழுது கசப்பாயும், புளிப்பாயும் நன்றாகப் பழுத்த பின்பு இனிமையாகவரும். இதே போலத்தான் ஆன்மீகமும் வளந்தவர்களுக்கு தியானம். பக்தி, கர்மம், ஞானம் என்பவை ஆன்மீகமாகும்.

ஜெய்சாயிராம்

நன்றி:www.saiwisdom.com - Oct 2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# அற்புதங்கள் சாயியின் அறிமுக அட்டைகளே

சாயிபாபா பற்பலவிதமான அற்புதங்களைச் செய்து வருவது பலர் அறிந்த ஒரு விடயமாகும். அவருடைய அருளைப் பெற்றவர்களில் பலர் இந்த அற்புத அனுபவங்களைப் பெற்றுள்ளனர். சிறுவயதில் தன் பள்ளித் தோழர்களுக்கு கற்கண்டு, லட்டு, மாம்பழம், பேனா, அழிஇறப்பர் என அவரது சிருஷ்டிப்பு அற்புதம் ஒரு உயிருள்ள குரங்கை அமெரிக்கர் ஒருவரின் சந்தேகத்தைப் போக்க சிருஷ்டித்தது வரை தொடர்ந்து இன்றும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது. தீராத நோய்கள் அவர் கரம் பட்டவுடன் மறைந்துள்ளன. இறந்தவர் மரணத்தின் பிடியிலிருந்து மீண்டுள்ளனர்.

இவ் அற்புதங்களுக்கு சாட்சியாக பல அன்பர்கள் இருப்பினும் அன்றல்ல இன்றுவரை அவற்றைப் பற்றிய ஒத்த எதிர் வாதங்கள் நடைபெற்றுக் கொண்டே தான் இருக்கின்றன. பகுத்தறிவின் எல்லைக்குட்பட்டது எனப் பொதுவாக எண்ணப்படுவதற்கு வெளியே எது நடந்தாலும் அதை உண்மை என்று மனிதமனம் ஏற்க மறுக்கிறது. இதனால் என்ன பிரயோசனம் என்கிறார்கள் சிலர். இன்னமும் அதிகமாகச் சென்று அற்புதங்கள் செய்வது தப்பேயாகும். அது செய்பவரதும், உட்படுபவரதும் ஆத்மீக முன்னேற்றத்தைத் தடுப்பதாகும் என்கின்றனர். ஆயினும் இவர்களது வாதம் இறைவனைப் பிரத்தியட்சமாக அனுபவித்து விட்டவர்கள், தெய்வ மனிதர்கள், அவதாரங்கள் ஆகியோரது விடயத்தில் உண்மையற்றதாகும். கிறிஸ்துவும், கண்ணனும், சாயிபாபாவும் செய்கின்ற அற்புதங்களில் சொந்த இலாபத்துக்கோ, செருக்குக்கோ, அகங்காரத்துக்கோ, சுயபிரதாபத்துக்கோ சற்றும் இடமில்லை. அவை அவர்களது தெய்வாம்சத்தை அறிமுகப்படுத்தவே உதவுகின்றன. எனவே இவற்றை செய்பவருக்கு மட்டுமின்றி இவருக்கு பாத்திரராகும் பக்தர்களுக்கும் எவ்வித அபாயமுமில்லை. மனித அறிவால் மனிதன் கண்டுபிடிக்கின்ற அனைத்தும் விஞ்ஞானம் என்ற தலைப்புக்குள் அடங்கும். மனித அறிவுக்கு புலனாகாத விடயங்களை மெஞ்ஞானத்தால் மட்டும் தான் உணர முடியும். மெஞ்ஞானத்தின் பொறிதான் அற்புதம். அந்த மெஞ்ஞானமே அற்புதம், அந்த அற்புதமே சாயி பாபா.

பாபா கூறுகின்றார் "மோதிரங்கள்,




அட்சரங்கள், ஜெபமாலைகள் முதலானவற்றை நான் ஏன் கொடுக்கிறேன் என்பதைக் கூறுகிறேன் கேளுங்கள். அவற்றைப் பெறுபவருக்கும் எனக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை அது வெளிக்காட்டுகிறது. அவர்களுக்கு துன்பம் நேரும் போது ஒரு நொடியில் பாதுகாப்பிற்குரிய அருள்பெற்று துன்பம் தீர்க்கும் சக்தியினை என்னிடமிருந்து பெற்றுக்கொள்ள அது உதவுகிறது. இந்த அருளானது என்னை என்ன பெயராலும், என்ன உருவாலும் நினைத்து அழைப்போர் எல்லோருக்கும் கிட்டும். வெறுமனே அந்த பரிசுப் பொருட்களை அணிபவருக்கு மட்டும் கிடைப்பதில்லை. ஒவ்வொரு அற்புதத்திலும் ஓர் ஆத்மீக அம்சம் உண்டு. இதைக் காணாமல் அற்புதமாய் சிருஷ்டியான ஒரு பொருளை அல்லது பிணி தீரல் போன்றவற்றை அம்மட்டோடு பெரிதாக நினைத்து திருப்திப்படுவதோடு ஒரு பக்தர் நின்று விட்டால் அவர் ஒரு பொன்னான வாய்ப்பைக் கோட்டை விட்டதாகவே ஆகும். அவருக்கு அற்புதம் விளைவித்த மனிதர் இவரை ஆத்மீகத்தில் சேர்க்க ஆரம்பத் தூண்டு கோலாகவே அற்புதம் செய்வதால் அவர் இந்த பக்தரை எந்நாளும் லௌகீகத்தில் திருப்திப்

**பாபா கூறுகிறார்: "எனது எல்லையற்ற சக்தி, எனது பராக்கிரமம், எனது இரகசியம் இவை ஒருபோதும் மனித அறிவால் புரிந்து கொள்ள முடியாதவை. எவர் முயன்றாலும் அதற்கு எவ்வளவு காலம் எடுத்தாலும் இந்த அறிவு மனித முயற்சிக்கு அப்பாற்பட்டது. கூர்மையான புத்திக்கும், சூட்சும அறிவிற்கும் அப்பாற்பட்டர் பாபா... ஆகவே பெருமுயற்சி எடுத்து என்னை அறிய முற்படவேண்டாம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படுத்தும் பொருட்டு அற்புதங்களைச் செய்து கொண்டேயிருக்க மாட்டார். அவர் தம் லௌகீக நலனின் பொருட்டு விளைவிக்கும் அற்புத நிகழ்ச்சிகளை நிறுத்தியவுடன் இப்படிப்பட்ட அடியார் அவரையே விட்டு விலகிவிடுவார். மொத்தத்தில் அற்புதங்களின் ஒரு முக்கியமான பயன் பிரபஞ்ச வித்தையை ஆழ்ந்து விசாரணை செய்ய மக்களைத் தூண்டி விடுவதே ஆகும். மக்களின் மந்தத் தன்மையை உலுக்கி அவர்களுக்கு தெய்வசக்தியை நினைவுகூர பிரமிப்பூட்டத்தக்கதான அற்புத நிகழ்ச்சிகள் தேவைப்படவே செய்கின்றன. அற்புதம் என்பது மனித குலத்தின் குருட்டுத்தனத்துக்கு தெய்வீகம் காட்டும் தாட்சண்யமே ஆகும். உபதேசிப்பதை விட ஓர் அற்புதச் செயல் வெளியானால் அது மனிதமனதில் அதிக சக்தியுடன் பதிந்து விடுகிறது.

அற்புதம் ஒரு தெய்வீக இயல்பு. பக்தனுடைய அன்பு இறைவனுடைய அன்பை சந்திக்கும் போது அற்புதங்கள் நடைபெறுகின்றன. அற்புதங்களை நிகழ்த்திக் காட்டுகிற போது அதை நிகழ்த்துபவரிடம் தெய்வத் தன்மை இருப்பதாக மக்கள் நம்புகிறார்கள். இந்த நம்பிக்கை வந்தபிறகு அவர் சொல்லவந்ததை கேட்கத் தொடங்குகிறார்கள். நம்பிக்கை தான் ஆன்மீக அனுபவத்துக்கு அடிப்படை என்பதால் அந்த நம்பிக்கையினை ஏற்படுத்தவே பாபா அற்புதங்களை நிகழ்த்திக் காட்டுகிறார்.

பாபா கூறுகிறார்: "எனது எல்லையற்ற சக்தி, எனது பராக்கிரமம், எனது இரகசியம் இவை ஒருபோதும் மனித அறிவால் புரிந்து கொள்ள முடியாதவை. எவர் முயன்றாலும் அதற்கு எவ்வளவு காலம் எடுத்தாலும் இந்த அறிவு மனித முயற்சிக்கு அப்பாற்பட்டது. கூர்மையான புத்திக்கும், சூட்சும அறிவிற்கும் அப்பாற்பட்டவர் பாபா... ஆகவே பெருமுயற்சி எடுத்து என்னை அறிய முற்பட வேண்டாம். நம்பிக்கையும் மதிப்பும் மிக்க பக்தியை வளர்த்து இறை அன்பினூடாக ஆனந்தத்தை அடையுங்கள். அதுவே உங்களால் செய்ய முடியுமானதான எல்லைக்குட்பட்டது. அதைச் செய்யுங்கள். அதனால் நன்மை பெறுங்கள்.

வரையறைக்குட்பட்டதென்றால் வரையறைக்கு உட்படாதொன்றின் ஆழமான தத்துவத்தை எவ்வாறு அறியமுடியும். ஒரு சிறு எறும்பால் எவ்வாறு ஒரு மலையைக் குடைய முடியும்? நான் ஏன் எதற்கு எனது கரங்களில் பொருட்களைச் சிருஷ்டிக்கிறேன் என்பது உங்களுக்கு தெரிய வேண்டிய அவசியமான தொன்றோ அல்லது அறிவுக்குட்பட்ட தொன்றோ அல்ல. நம்பிக்கையே முக்கியமானது.

"என்னை அறிந்ததாகக் கூறும் ஆராய்ச்சியாளர்கள் யோகிகள், பண்டிதர்கள். ஞானிகள் எல்லோருமே எனது முக்கியம் குறைந்த தன்மையையே அறிந்துள்ளனர். பேரருட்சக்தியின் மிக நுண்ணியதான அளவினதான வெளிப்புறத் தோற்றத்தை அதாவது அற்புதங்களை விளைவிக்கும் சக்தியை மட்டுமே இவர்கள் அறிவார்கள். ஞான சக்தியினது தோற்ற வாயிலை முற்றிலும் கண்டறிவதற்கு அவர்கள் விளைவிக்கும் சக்தியை மட்டுமே இவர்கள் அறிவார்கள். ஞான சக்தியினது தோற்றவாயிலை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முற்றிலும் கண்டறிவதற்கு அவர்கள் விழைவதில்லை. தாம் கற்றதை தமது வித்துவத்தை வெளிப்படுத்த ஒரு சந்தர்ப்பம் கிடைத்தவுடன் திருப்தியடைகிறார்கள். ஆனால் அவர்களுக்காகவே இவ்வேதங்களை தோற்றுவித்து தம்மிடையே வந்துள்ள மூலமூர்த்தியை உணர்ந்து கொள்ள மாட்டார்கள். எல்லாக் காலத்திலும் இது இவ்வாறே நடந்துள்ளது. மக்கள் அவதார புருஷர்களுக்கு அருகில் இருப்பார்கள். ஆனால் அவர்களுக்கு கிடைத்திருக்கும் அதிஷ்டத்தை அறியாது வாழ்க்கையை வாழ்ந்திருக்கின்றனர். ஆனால் ஆற்றும் அற்புதங்களைப் பற்றி அதி அற்புதமாகக் கூறிக் கொள்கின்றனர். எனது பெருமைக்கும், மேன்மைக்கும் அருகில் இயற்கை நியதிகளை மீறி நான் ஆற்றும் அற்புதங்களை ஒப்பிட்டால் அது ஒரு நுளம்பு பலமும் பெரிய உருவமுடைய யானை மேல் அமர்ந்திருப்பது போலத்தான். ஆகவே நீங்கள் அற்புதங்களைப் பற்றிப் பேசும் போது எனது உண்மைநிலையினை உணரக்கூடிய சந்தர்ப்பத்தை இவ்வழியில் மூடத்தனமாக நழுவ விடுகிறீர்களே என்று எண்ணி உங்கள் மேல் பரிதாபம் கொண்டு என்னுள் நான சிரித்துக் கொள்வேன்.

எந்த தெய்வ தூதரும் முதலில் அற்புதத்தாலேயே தன் தெய்வீக இயல்பைப் புரிய வைத்து பின் பக்தர்களை ஆத்ம சுதந்திரமான வீட்டுக்கு இட்டுச் செல்கிறார். ஆயினும் மிகப் பெரும் அற்புதங்கள் வெளிப்படையாக தெரிவன அல்ல என்பதை நாம் மறவாமல் இருப்பதே அறிவுடமை ஆகும். அற்புதங்கள் எவ்வளவு மகிமை வாய்ந்தவையாக இருந்த போதிலும் அவற்றின் மூலம் எதிர்பார்க்கும் நன்மைகளைக் கொண்டு தான் நாம் சாயி தர்மத்தை ஏற்றுக் கொள்வதாக இருக்கக் கூடாது. ஆயினும் எமது அமைதி குலைந்த மனதை சாந்தப்படுத்துவதற்கு சாயி பாபா மீண்டும் மீண்டும் பல்வேறு அற்புதங்களைச் செய்து கொண்டே இருக்கிறார். பாபா சொல்கிறார் “அற்புதங்கள் எனது அறிமுக அட்டைகளே (Visiting Cards) ஒருவரை சரியாக அடையாளம் கண்டு கொள்ள Visiting Card உதவி புரிகிறது. ஆனால் அவரை நன்றாக தெரிந்து கொண்ட பிறகு Visiting Card தேவைப்படுவதில்லை. அதுபோலவே எனது அற்புதங்களுக்கு அதி முக்கியத்துவம் அளிக்க வேண்டாம். எனது தர்மத்தைப் பின் பற்றுங்கள். சேவை மூலம் அன்பும், சமாதானமும் பிறக்க நீங்களும் கூட்டுச் சேருங்கள்” ஆம் உண்மையில் அற்புதம் செய்பவர் தான் பேரற்புதம். அற்புதங்கள் நமது தெய்வீக சக்திகளை வெளிப்படுத்தி பிரபஞ்ச அக்னியின் ஒரு ஜுவாலையே நாம் ஒவ்வொருவரும் என்ற நம்பிக்கையையும், ஊக்கத்தையும் ஊட்டுகின்றன. அது மட்டுமல்ல அத் தெய்வ புருஷரிடமிருந்து வெளிவரும் சக்தி நாம் அறியாமல் நம் அடி ஆழத்துள் புகுந்து நம் இயல்பையே மாற்றி நம் ஆத்மீக மேம்பாட்டைச் சாத்தியமாக்கின்றன”

இது சாயியுகம். 'பாபாவின் ஆற்றல், அன்பு காரணமாக அவர் முன்னிலைக்கு இலட்சக்கணக்கானோர் இழுக்கப்படுகின்றனர். சாயி பாபா என்பதற்கு தெய்வீகத் தாய் தந்தையர் என்று பொருள். அன்னைக்குரிய அளப்பெரும் அன்பையும் தந்தைக்குரிய எல்லையற்ற ஆற்றலையும் உடையவர். இப்படிப்பட்ட இணையற்ற அவதாரத்தின் அன்புப் பிடியிலிருந்து மனிதன் எப்படி நழுவ முடியும்?

ஜெய் சாயிராம்

அனிதா.க
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# பகவான் எம்மை ஆட்கொண்டு அருளிய அற்புதங்கள்

சுவாமியின் பொற்கமலப் பாதங்களுக்கு எனது அன்பான வணக்கம்

நாங்கள் பகவானை வழிபடத் தொடங்கிய ஆண்டு 1972. மானிப்பாய் சந்திக்கு அருகாமையில் உள்ள ஒழுங்கையில் திரு.தம்பிராசா அவர்களின் வீடு. அங்கு தம்பதிகள் இருவரும் பகவானின் படங்களை அழகாக அலங்கரித்து பக்தி சிரத்தையுடன் பஜனை செய்வார்கள். இந்த பஜனையில் 10 அல்லது 15 பேர் தான் இருப்பார்கள். பஜன் நேரத்தில் சுவாமியின் படங்களிலிருந்து பூக்கள் சொரிந்து விழுவதை கண்டு பக்திப் பரவசமடைந்திருக்கிறோம். இனிய பாடல்களுக்கு கைதட்டி கோரஸ் பாடியமை நெஞ்சை விட்டகலாத இனிய அனுபவங்கள்.

சுவாமி எம்மை அரவணைத்து தன் பக்தராக்கியது நாம் முற்பிறவியில் செய்த புண்ணியமே. அவரது அருளும் ஆசியும் எம்மை ஒவ்வொரு விடயத்திலும் வழி நடத்திக் கொண்டிருந்தது. பாடசாலை கல்வியும், பஜனை செய்வதும் தொடர்ந்து கொண்டிருக்கையில் எங்கள் பெற்றோர்களும் சுவாமியின் அடியவராகினார்கள். எனது தந்தை அரசாங்க அலுவலராக சில வருடங்கள் வவுனியா நகர சபையில் கடமையாற்றியதால் அக்காலங்களில் அவர் வவுனியா சமித்தி பஜனைகளில் பங்கு கொண்டு மேலும் சாயி பக்தரானார். சுவாமி தனது சேவைகளை ஆற்றும் பொருட்டு 1977 ஆம் ஆண்டு எனது தந்தையாரை மானிப்பாய் நகர சபைக்கு மாற்றலாக்கி அனுப்பி வைத்தார். அவ் ஆண்டுகளில் நாம் உயர்தர வகுப்பில் பயின்று கொண்டிருந்ததால் பஜனைக்கு போவதை குறைத்து வியாழக்கிழமைகளில் வீட்டில் பஜனை செய்து வழிபட்டோம். அந்த நாட்களில் சுவாமி பல தடவை கனவில் வந்து எம்மை ஆசீர் வதித்துள்ளார்.

அக்கால கட்டத்தில் அமரர்களான திரு.ராஜசுந்தரம், திரு.மா.இராசரத்தினம்(எனது தந்தை) அவர்களுடன் திருமதி ஜெகநாதன் (அம்மம்மா அன்ரி), திருமதி நவரட்ணராஜா ஆகியோருடன் சில பக்தர்களும் சேர்ந்து சுவாமியின் செயற்பாடுகளில், பஜன்களில் அளவில்லா ஆனந்தத்துடன் ஈடுபடலானார்கள். அவர்கள் எல்லோரும் சேர்ந்து 1981 ஆம் ஆண்டு மானிப்பாய் சமித்தியை ஆரம்பித்து பதிவு செய்து, அமரர் திரு.இராஜசுந்தரம் தலைவராகவும், திரு.மா.இராசரத்தினம் செயலாளராகவும் இருந்து அயராத உழைப்பால் சமித்தியை வளர்த்தார்கள். பின் நாட்களில் திரு.ஆர்.வசந்தசேனன் பொறுப்பேற்று நடத்தினார்.

மானிப்பாய் சமித்தி ஆரம்பிக்கப்பட்ட காலங்களில் தொலைபேசி வசதிகள் இல்லாமையால் சாயி செய்திகள், பணிகள் என்பவற்றை வீடு வீடாகச் சென்றோ, அல்லது தபால் மூலமோ தான் தெரிவிக்க வேண்டியிருந் தது. என் தந்தை தன் கடன் பணி செய்து கிடப்பதே என சைக்கிளில் சென்று சாயி பணிகளை மன மகிழ்ச்சியோடு மேற்கொண்டார். அலுவலக பணி முடிய சாயி பணி. தனது நேரத்தை அர்ப்பணிப்புடன் செலவிட்டார். சுவாமியின் 60 ஆவது பிறந்ததினமன்று திரு.செ.சிவஞானம் ஐயாவுடன் புட்டபர்த்தி சென்று பாபாவின் ஆசீர்வாதத்தையும் பெற்றார்.

சுவாமியின் ஆசீர்வாதம் என் தந்தைக்கு கிடைத்ததால் போலும் நானும் எனது கணவரும் 1987 ஆம் ஆண்டு புட்டபர்த்திக்கு சென்ற போது (பழைய மந்திர்) முதல்வரிசையில் இருக்க இடம் கிடைத்தது. சுவாமி இருவருக்கும் பாத நமஸ்காரம் தந்து ஆசீர்வதித்தார். நாம் அங்கு நின்ற காலத்தில் சுவாமியின் அற்புதம் ஒன்று எங்களை மெய் சிலிர்க்க வைத்தது. தரிசனத்திற் காக பக்தர்கள் மண்ணில் அமர்ந்த பின் வானம் கறுத்து மழை பெய்ய ஆரம்பித்தது. சில பக்தர்கள் மழைக்கு பயந்து எழுந்து சென்று விட்டார்கள். நாம் அப்படியே அருந்தோம். சுவாமி பழைய

**சுவாமியின் சமாதியை நோக்கிய பாத யாத்திரை எமது ஆன்ம ஈடேற்றத்தை நோக்கிய பயணம். சுவாமியின் சமாதியின் பின் அவரது ஜனனதினம் கடந்த நவம்பர் 23 மே் திகதி நடந்த போது நானும் கணவரும் புட்டபர்த்தியில் இருந்தோம். திரு.அனில்குமார் அவர்கள் உரையாற்றும் போது புட்டபர்த்தி துவாரகா, மதுரா, திருப்பதி போல் ஓர் புண்ணிய சேஷத்திரம் என்பதை பக்தர்களுக்கு நன்கு தெளிவு படுத்தினார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரிலிருந்து இறங்கி நடக்கும் சரிவுப் பாதையில் பாத கமலங்களை வைத்து மண்ணில் நடக்கத்தொடங்கியதும் பைப் பூட்டியது போல் மழை நின்று விட்டது. தரிசனம் முடித்து சுவாமி விறாந்தைக்கு சென்றதும் திரும்பவும் மழை பெய்ய நாங்கள் எல்லோரும் சுவாமியின் பக்தி மழையில் நனைந்து பரவசமானோம். எம் வாழ்வில் நேரில் கண்ட அற்புதம் இதுவாகும்.

சுவாமியின் பல அற்புதங்களை பின் நாட்களில் கண்டிருக்கிறேன். அவற்றில் குல்வந் மண்டபம் கட்டப்பட்ட பின் 2007 ஆம் ஆண்டு ஜூலை மாதம் உலக இளைஞர் மகாநாடு புட்டபர்த்தியில் நடந்த போது எமது பிள்ளைகளையும் கொழும்பில் இருந்து அனுப்பி வைத்தோம். திருமதி.பால்தாள் கொழும்பு சமித்தி நாடக குழவினரை பார்த்து யார் வயதில் குறைந்தவரோ அவர்தான் சுவாமிக்கு பூ கொடுக்கலாம், எனக் கூறி எங்கள் மகள் பிரசாந்தியை அழைத்து அவர் கையில் பூவைக் கொடுத்து சுவாமிக்கு சமர்ப்பிக்கச் செய்தார். சுவாமி சிரித்து ஆசீர்வதித்து பூவைப் பெற்றுக் கொண்டார். இத்தகைய இனிய நிகழ்வைக் கண்டு மெய்சிலிர்த்து ஆனந்தக் கணீர் பெருகினோம். சுவாமி தங்கள் கருணைக்கு எல்லைதான் உண்டோ? பின்னர் கொழும்பு, யாழ்ப்பாண இளைஞர்களின் நாடகங்கள் இடம் பெற்றது. சுவாமி யாழ் இளைஞர்களுக்கு புடவைகள் வழங்கி தன் அன்பை பகிர்ந்து கொண்டார்.

கலியுக தெய்வம் சாயியின் அருளும் ஆசியும் கிடைக்கப் பெறுவது முற்பிறவித் தொடர்புகளாலேயே கிடைக்கப் பெறுகிறது என்பது முற்றும் உணர்ந்து அறியப்பட்டதொன்றாகும். சுவாமியின் மகாசமாதி 24.4.2011 அன்று அறிந்ததும் அவரது ஸ்தூல உடலைத் தரிசிக்க உலகெங்கும் இருந்து பக்தர்கள் புறப்பட்டனர். இச்செய்தி அறிந்த எனது கணவரும் உடனேயே புறப்பட்டு இரவே புட்டபர்த்தி சென்று சுவாமியை தரிசித்தார். பலமுறை இந்தியா செல்லக் கூடிய விசா அவரிடம் இருந்ததால் இது சாத்தியமாகிற்று. நாங்கள் 2011 மார்ச் 2 ஆம் திகதி சிவராத்திரிக்கு புட்டபர்த்தியில் இருந்தோம். சாதாரண இந்தியா விசா நடைமுறையில் 2 மாதத்தின் பின்னரே திரும்ப விசா எடுக்க முடியும். அதனால் எனக்கு விசா இல்லையே என தவித்து கலங்கினேன். சுவாமி அனைத்தையும் ஒழுங்கு படுத்தி எனக்கு விசா கிடைக்கச் செய்தார். கொழும்பில் இருந்து 26 ஆம் திகதி காலை புறப்பட்ட சாயி பக்தர்களுடன் எனது சகோதரியும் நானும் சென்றோம். வழமையாக புட்டபர்த்தி செல்லும் பயணத்திலும் பார்க்க இப்பயணம் கடினமானதாகவும், கனமானதாகவும், பாதை தூரமானதாகவும் இருந்தது. எனது சகோதரி 3 தடவை இதய சத்திர சிகிச்சை செய்தவர் அவரால் எப்படி அப்பயணத்தை மேற்கொள்ள முடியும் எனக் கலங்கினேன். தன் சுகயீனம் பெரிதல்ல சுவாமியை தரிசிக்காமல் தன்னால் இருக்க முடியாது என பிடிவாதமாக எம்முடன் நடந்து வந்தார். சுவாமியே அதற்கான சக்தியை அருளினார். விமான பயணத்தின் பின் காரில் சென்று புட்டபர்த்தியிலிருந்து 5 கிலோ மீற்றர் தொலைவில் இறங்க வேண்டி ஏற்பட்டது. அவ்விடத்திலிருந்து சித்திராவதி வீதியால் நடந்த அந்த நிகழ்வு மெய்சிலிர்க்க வைக்கும் காட்சியாகும். சுவாமி சத்யம், தர்மம். சாந்தி, பிரேமை போதனைகளால் எப்படி எல்லாம் வழி நடத்தியுள்ளார். வழி நெடுக தண்ணீர், சாப்பாடு, பழம் என எந்தக் களைப்பும் தெரியாத வகையில் தொண்டர்களால் உணவு விநியோகிக்கப்பட்டது. பக்தர்கள் பஜன் பாடல்களை பாடி சிறிதேனும் களைப்புத் தெரியாமல் ஓர் உத்வேகத்துடன் நடந்து சென்றதை கண்கூடாக கண்டு சுவாமியின் கருணையை எண்ணி பரவசமானோம். சுவாமியின் சமாதியை நோக்கிய பாத யாத்திரை எமது ஆன்ம ஈடேற்றத்தை நோக்கிய பயணம் போலவே இருந்தது. சுவாமியின் சமாதியின் பின் அவரது ஜனனதினம் கடந்த நவம்பர் 23 மே் திகதி நடந்த போது நானும் கணவரும் புட்டபர்த்தியில் இருந்தோம். திரு.அனில்குமார் அவர்கள் உரையாற்றும் போது புட்டபர்த்தி துவாரகா, மதுரா, திருப்பதி போல் ஓர் புண்ணிய சேஷத்திரம் என்பதை பக்தர்களுக்கு நன்கு தெளிவு படுத்தினார். புட்டபர்த்தி கடவுள் அவதரித்து வாழ்ந்த சொர்க்க பூமியாகும். எம் பகவான் சர்வதர்ம பிரியர். அவர் கிருஸ்ணர், யேசு, புத்தர், அல்லா போன்று மனித வடிவில் எம்முடன் இக் கலியுகத்தில் வாழ்ந்த பரம் பொருள். சுவாமி மனித உருவில் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்து அவரது அற்புதங்களை அனுபவத்தில் கண்டு அனுபவித்து மகிழ கொடுத்து வைத்த ஆன்மாக்களாக நாம் இருப்பது முற்பிறவி புண்ணியமே. எம் பிரமாண்ட நாயகன் சாயி சுந்தரன் உலகெங்கும் வியாபித்து அங்குள்ள பக்தர்களை ஆசீர்வதித்த படியே உள்ளார். சுவாமி எம் வாழ்க்கைக்கு கூறிய வழிமுறைகள், புகட்டிய நல் அறிவுரைகளை கருத்திலெடுத்து உண்மையான சாயி பக்தர்களாக வாழ்ந்து காட்டுவதே நாம் ஆற்ற வேண்டிய பணியும் சேவையும் ஆகம்.

சுவாமியின் திவ்ய பாதங்களுக்கு கோடி ப்ரணாம்

ஜெய் சாயிராம்

திருமதி.மாலா சூரியகுமார்
கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

## ஸ்ரீ சத்திய சாயி பாபாவின்

# தேனாமிர்தம்

சுவாமியின் பொற்கமலப் பாதங்களை நமஸ்கரித்து, ஆசிர்வாதங்களையும் வேண்டிக் கொண்டு

12.11.2011 முதல் சுவாமியிடம் ஒரு பிரார்த்தனை:

சுவாமி இவ்வளவு காலங்களாக விபூதி வழங்கிய கைகள் எங்கே, அபயம் அழித்த கைகள் எங்கே, நாம் என்ன சொல்வது, எப்படி நாம் செயற்படுவது என சுவாமியிடம் மனமார பிரார்த்திக்கிறேன். 23.11.2011 பிறந்த நாள் இன்னும் 4, 5 நாட்கள் தானே இருக்கின்றது. இம்முறை உங்கள் ஸ்தூல உருவம் எங்கே?, சுவாமி உங்கள் ஸுக்கும வடிவத்தை எங்கே எப்படி எல்லோரும் ..... சிந்தனை தொடர்கிறது. சுவாமி உமது உடல் சமாதி வைக்கப்பட்டுள்ள வேளையில் இப்படி அமைதியாக இருக்க உங்களால் முடியுமோ.... இதற்கு ஓர் விடை தாருங்கள்..” மானசிகமான பிரார்த்தனை

மேலேயுள்ள பிரார்த்தனை இரவு, பகல் என்று பாராமல் என் மனதில் நகர்ந்த வண்ணம் இருந்தது. நித்திரைக்குச் செல்கிறேன். திடீரென



கண் விழித்தால் ஒரு சில துளிகள் கண்களில் வருவதை உணர்ந்தேன். இப்படியாக அகண்ட நாம பஜனை நடந்தது. (12, 13.11.2011) 13 ஆம் திகதி மாலை 5.00 மணி போல் என் அருகில் பாடியபடி இருந்த பெண் பக்தர் இறுக்கமாக எனது கைகளைப் பிடித்து (கண்பார்வையற்றவர்) “அக்கா! பகவான் உரு சிறுத்து சின்னப்பையனாக எம்மிருவருக்குமிடையில் வந்து அமர்ந்ததையும், மெல்ல அசைந்து உங்களுக்குள் புகவதைக் கண்டேன். கண்கள் கலங்க கூறினார்” இதைத் தொடர்ந்து என் நினைவில் வருகின்றது. ஆவணி மாதம் அதிகாலை 3.00 மணியளவில் சுவாமி தனது குரலில் அழைத்து ஆறுதலாகவும், அமைதியாகவும் “நான் கோப்பாயில் தானே சமாதி அடைந்துள்ளேன், இந்தியாவில் அல்ல இது யாருக்கும் தெரியாது” என்ற ஒரு வாக்கைச் சொல்லி மெல்ல நகர்ந்து செல்வதை உணர்ந்தேன். எனது கணவருக்கு சுவாமி தனது சக்கர நாற்காலியில் சமாதியின் முன் தினம் கோப்பாய் கிராமம் முழுமையாக உலா வந்து ஆசீர்வாதம் தருவதையும், தொடர்ந்து வரும் நாட்களில் யாழ் கைலாசபிள்ளையார் ஆலய வீதியின் ஒரு வீட்டில் அரிசி மா பக்கட்டுக்களை சுவாமி பார்வையிட்டு தொழிலாளர்களுடன் கதைப்பதையும் கண்டார்.

17.11.2011 அன்றைய தினம்

வியாழக்கிழமை எமது இல்லத்தில் உள்ள ஹோலில் வைக்கப்பட்டிருந்த சுவாமியின் படத்தில் வலது அபயக் கரத்திலிருந்து சிறு துளிகள் விபூதி வந்திருப்பதை காண முடிந்தது. அத்னைத் தொடர்ந்து இத் துளிகள் சுவாமியி னுடையது தானா என்பதை உறுதிப்படுத்த

**ஆவணி மாதம் அதிகாலை 3.00 மணியளவில் சுவாமி தனது குரலில் அழைத்து ஆறுதலாகவும், அமைதியாகவும் “நான் கோப்பாயில் தானே சமாதி அடைந்துள்ளேன், இந்தியாவில் அல்ல இது யாருக்கும் தெரியாது” என்ற ஒரு வாக்கைச் சொல்லி மெல்ல நகர்ந்து செல்வதை உணர்ந்தேன். எனது கணவருக்கு சுவாமி தனது சக்கர நாற்காலியில் சமாதியின் முன் தினம் கோப்பாய் கிராமம் முழுமையாக உலா வந்து ஆசீர்வாதம் தருவதையும் கண்டார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த நாள் (18.11.2011) எனது கணவருடன் படத்தை மீண்டும் வடிவாக துடைத்து அதே இடத்தில் வைத்திருந்தோம். அடுத்து 19.11.2011 அன்றைய தினம் மகளிர் தினம் காலையில் எனது காலைப் பிரார்த்தனையை முடித்து 5.15 மணியளவில் மீண்டும் வந்து பார்த்த போது ஹோலில் வைக்கப்பட்டிருந்த சுவாமியின் அதே படத்தில் அபயக் கரத்தில் இருந்த விபூதி துளிகள் உள்ளங்கைகளில் வந்திருந்ததை பார்த்த வேளை மூத்தமகனும் நித்திரை விட்டெழுந்து அவசரமாக கூறினார் "அப்பா.. பாபா கனவில் வந்து எமது சாயி நிலையத்திலுள்ள படத்திலிருந்து கை நீட்டி தம்பி விபூதி இந்தாரும் எனச் சொல்லி எனது கையில் தந்ததை கண்டேன் என்றார். அபயக் கரத்தில் இருந்து வந்த விபூதி அவரது முழங்கால் வரையிலான அங்கி மேல் வந்திருந்தது. இது காலையில் நிகழ்ச்சி, தொடர்ந்து மாலை எமது சாயி நிலையத்தில் மாலை 4.00 மணி பஜனை முடிந்து 5.30 மணியளவில் மீண்டும் வீடு வந்து பார்த்த போது ஹோல் முழுமையாக சுவாமியின் விபூதி மணம் எங்கும் நிரம்பியிருந்ததை உணர முடிந்தது. அப்படத்தை அண்மித்த வேளை பாதம் வரையில் விபூதி வீழ்ந்து இருந்ததை கண்டு பரப்பிரம்மம் எனது பிரார்த்தனையை கேட்டுத்தான் உள்ளார் என்ற நம்பிக்கை உள்ளூர ஏற்பட்டது. இந்த சந்தர்ப்பத்தில் ஓர் நினைவு வருகின்றது. சுவாமியை ஒருபோதும் நேரில் பார்த்தது இல்லை. திருமதி.சி.இரவீந்திரன் அவர்களின் வழிகாட்டலின் மூலம் தான் சுவாமியை கடவுளாகக் கண்டேன். எனவே அவரை அழைத்து இவ்வாறு நடைபெறுவதைக் காட்டினோம் அவர் கூறிய வார்த்தை "விபூதி சுவாமியின் பிரசன்னத்தைக் காட்டுகிறது. அத்துடன் உங்களை கருவிகளாக்கி சுவாமி நல்ல சேவைகளையும் செய்யவுள்ளார். சில வேளை களில் அமிர்தமும் வரலாம்." அடுத்த படத்தில் பார்த்த போது நீர் வடிந்து கொண்டிருப்பதை கண்டோம். அருகிலிருந்த படத்தையும் நன்றாக துடைத்து விட்டோம்" சுவாமியின் நாம ஜெபமும், வேதபாராயணமும், பஜனை, பகவத் கீதை, பஜகோவிந்தம், பக்திப் பாடல்கள் போன்ற வற்றையும் பாராயணம் செய்துவருகின்றோம். விபூதி கைகளிலிருந்து பரவி தற்போது படம் முழுவதுமாக பரவி வருவதையும், விபூதி பாதத்தில் வீழ்வதையும் அவதானித்துக் கொண்டிருந்த வேளை இச் செய்தி மெல்ல மெல்ல பரவி சாயி பக்தர்களும், சாயி பக்தரல்லாத வர்களும், வேறு மதத்தினரும் பார்த்து வருகின்றனர்.

சுவாமியின் ஜனன தினமாகிய 23.11.2011 ஆம் திகதி காலை தொடக்கம் மாலை வரை நாம் சாயி நிலையத்திலிருந்து பல சேவைகள், பஜனைகள் செய்து வீடு திரும்பும் போது அதிகளவில் விபூதி சொரிந்திருந்ததை காணக் கூடியதாகவிருந்தது. க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு செல்லும் மாணவர்கள் காலையில் வந்து பிரார்த்தனை செய்து விட்டு பரீட்சைக்குச் செல்வார்கள். 21 மார்கழி 2011 அன்று அருகிலிருந்த படத்திலிருந்து 3,4 கோடுகளாக திரவம் வடிவதை காண முடிந்தது. அப்பொழுது நின்ற சாயி பக்தை ஒருவர் அதனை தனது கையில் எடுத்து சுவைத்து பார்த்த வேளையில் தேன் மாதிரி இனிக்குது என்றார். எறும்புகளும் உலாவுவதை காண முடிந்தது. முன்புபோல வடிவாக தூய துணி கொண்டு துடைத்து மீண்டும் அப்படத்தை அதே இடத்தில் வைத்தோம். அது ஓர் வியாழக்கிழமை. 22 மார்கழி 2011 மாலை நேரமாயிற்று அதிலிருந்து தொடர்ந்து தேன் போன்ற அமிர்தம் வருவதை கவனித்தோம். யாவும் பார்க்கக் கூடியதாகவிருக்கின்றது. எல்லோரும் பருகியும், வீடுகளுக்கு கொண்டு செல்வதும், வெளிநாடுகளுக்கு கொண்டு செல்வதுமாக உள்ளனர். பெரும்பாலானவர்கள் நோயாளிக்கு அமிர்தம் தாருங்கள் என வாங்கிக் கொண்டு செல்கின்றனர். யாழ் வைத்தியசாலை புற்றுநோயாளர் சேவைக்கு சென்ற போது யாழ் சென்றல் நிலையத்தினரும், யாழ்ப்பாண நிலையத்தினரும் இவ் அமிர்தத்தை எடுத்துச் செல்கின்றனர். விசேட தேவையுடையவர்கள் வருகை தந்து செல்கின்றனர். நோயாளிகள் வந்து கண்ணீர் சிந்துவதை காண முடிகின்றது. அமிர்தம், விபூதி பெற்றுச் சென்றவர்கள் நோய் நீங்குவதாக சொல்கின்றார்கள்.

இவ்வகையில் கசப்புடனான இனிப்பு, உவர்ப்புடனான இனிப்பு, கைப்புடனான இனிப்பு, பஞ்சாமிர்தம் போன்ற மணம், சுவை வேப்பம் மணம் உள்ள அமிர்தம் இப்படியாக நாளுக்கு நாள் வித்தியாசமாக வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. மருந்தாக பாவித்து குணமடைந்தவர்களும் மீண்டும் எடுத்துச் செல்கின்றனர்.

ஆரம்ப காலங்களில் இரவு 10.00 மணி வரையும் பக்தர்கள் வந்து சென்றனர். இளைஞர்கள் தொடர்ந்து வந்து பஜனை, நாம சங்கீர்த்தனம் செய்கின்றனர். கொழும்பு, வவுனியா, மட்டக்களப்பு போன்ற சாயி நிலையங்களை சேர்ந்த பக்தர்களும் யாழ் வருகின்ற வேளையில் பஜனை செய்து செல்கின்றனர். அமிர்தம் சாயி இளைஞர்களுக்கு வழங்கும் போதெல்லாம் சுவாமியின் பணியை தூய்மையாக செய்ய இவர்களுக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளுறைந்து வழிகாட்டுங்கள். என சுவாமியை நாம் பிரார்த்திப்போம். ஒரு நாளில் 2, 3 தடவைகள் அமிர்தம் வருவதைக் கண்டோம். ஒரு கிழமையாக இவ்வாறிருந்த அமிர்தம் பக்தர்கள் கூடக் கூட அதிகளவில் வருவதைக் காண முடிந்தது.

இதனைத் தொடர்ந்து ஜனவரி 27,2012 விநாயக சதுர்த்தி அன்று யாழ்ப்பாண நிலையத்தில் விநாயகர் கோவில் அமைப்பதற்காக அடிக்கல் நாட்டப்பட்டது. அன்றைய தினம் அங்கு செல்லக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது, இவ் வைபவத்தை முடித்து வீடு திரும்பிய சமயம் நண்பகலிலிருந்து சிரடி பாபாவின் சிலையிலிருந்து அமிர்தம் வருவதாக வீட்டிலுள்ளோர் கூறினார்கள். அழகான, அற்புதமான காட்சி ஆச்சரியம், அழகு நிறைந்த காட்சி.

விபூதி அமிர்தம் வந்ததை பார்க்க வந்த குருக்கள் ஐயா ஒருவர் கூறினார். இவ் வமிர்த்தை தேன் என்று சொல்ல வேண்டாம். இது ஆதிமூலத்திலிருந்து வடிகின்றது. இதற்கு இன்றிலிருந்தே "தேனாமிர்தம்" என்று கூறுங்கள் வருகிறவர்களுக்கும் இதையே கூறுங்கள் என்றார்.

இவ்வாறாக கடந்த 17.11.2011 ஆந் திகதியிலிருந்து சற்று மாற்றம் ஏற்பட்டு சிவராத்திரி தினத்திலிருந்து இரவு பகல் பாராது அமிர்தம் வருவதையும், விபூதி பாதத்தால் சொரிவதையும் காணக்கூடியதாகவுள்ளது. இந்நிகழ்வு இன்றுவரை தொடர்ந்து நடைபெறுகின்றது. பல் மொழி, பல் இன மக்களும் பார்வையிடுகின்றனர். புட்டபர்த்தியிலிருந்து வந்த சிலரும் சுவாமியின் அமிர்தத்தை எடுத்துச் சென்றனர். யாராவது அமிர்தம் கேட்டால் சுவாமியிடம் பிரார்த்தனை செய்யும் பட்சத்தில் அமிர்தம் வருவதை காண முடிகின்றது.

24.04.2011 சுவாமியின் சமாதி செய்தியினை அறிந்து மிகவும் அதிர்ச்சியடைந்து வருகின்ற வேளை இவ்வாறாக நடைபெற்றது நம்பிக்கையை ஊட்டியுள்ளது. சுவாமியை சக்கர நாற்காலியிலோ, சமாதியில் தன்னும் நினைத்தது இல்லை. எப்போதும் சுவாமி மஞ்சள் அங்கியுடன் ஆசீர்வாதம் தருவதையே நாம் உணர்வதுண்டு.

சுவாமியின் 9 ஒழுக்க நெறிக் கோவையில் உள்ளபடி நடக்க வேண்டும். பாலவிகாஸ் பயிற்சியில் காலடி எடுத்து வைத்து, பாலவிகாஸ் குருமார்கள் தூய்மையாக பாலவிகாஸ் கல்விப் பணியில் தாமதமின்றி ஈடுபடுங்கள்.

24.3.2012 வ.பிராந்திய இணைப்புக்குழு கூட்டத்தில் கேட்கப்பட்ட வினா

**சுவாமியின் விபூதி, அமிர்தம் ஏன் எதற்காக வருகிறது? எப்படிவருகிறது?**

- மந்திர ஜெபத்தினால் மந்திரத்திற்கு அதிபதியாகி, இடைவிடாத மந்திர ஜெபம் நம் மூச்சுடன் மூச்சாக கலந்து விடும் போது மந்திரத்தின் அதிதேவதையை நாம் பார்க்கலாம். சாதனையின் விளைவாக சுவாமியின் அற்புதங்கள் எடுத்துக் காட்டப் படுகின்றது. அதாவது சுவாமியின் மகிமை ஸுக்கும தன்மை அற்புதமாக விபூதி, அமிர்தம், குங்குமம், சந்தனமாக வெளிப்படுகிறது.

- சிலர் உண்மை, பொய் எது என்று வீடு வீடாக தொடர்ந்து தேட வேண்டாம். பல பல இடங்கள் அலைய வேண்டாம். அற்புதம் ஒரு அறிமுக அட்டை மட்டுமே. நீர் உமது வீட்டில் அவரது மகிமையை வெளிப்படுத்த சாதனையை செய்ய ஆயத்த மாகுங்கள்.

எல்லோருடைய உள்ளத் தாமரையில் வீற்றிருக்கும் சுவாமியின் பாதக் கமலங்களுக்கு மலர்கள் தூவி ஆழமான பிரார்த்தனை செய்யுங்கள்.

சாதனை, சேவை ஒன்றிணைய வேண்டும்.


சுவாமியுடன் இதயத்திற்கு இதயம் என்று கதைக்கலாம்.


சுவாமியுடம் உள்ள Unity. Divinity, Purity இவை மூன்றையும் எம்மிடம் வளர்த்தால் சுவாமியும் நாங்களும் வேறல்ல.

Love All
Serve All

ஜெய் சாயிராம்

திருமதி.செல்வரஞ்சிதம் ஜெயமோகன்,
கோப்பாய்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# தேசிய சாயி இளைஞர் மாநாடு

**ஜூலை 13,14,15 2012**

## "நீ எனது பணியைச் செய், உனது வேலையை நான் செய்வேன்"

யாழ்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் 2012ஆம் ஆண்டு ஜுலை மாதம் 13, 14, 15 ஆம் திகதிகளில் "நீ எனது பணியைச் செய் நான் உனது வேலையைச் செய்வேன்" (You do my work, I will do your work ) என்ற கருப்பொருளில் நடைபெறவுள்ள தேசிய சாயி இளைஞர் மாநாட்டுக்கு சர்வதேச சத்திய சாயி நிறுவனங்களின் தலைவர் டாக்டர்.நரேந்திரநாத் ரெட்டி அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். மாநாட்டின் கருப்பொருள் பற்றியும் சுவாமியுடனான தனது அனுபவங்கள் பற்றியும் அவர் எமக்கு உதாரணங்களுடன் உரையாற்றவுள்ளார். அத்துடன் இளைஞர்களின் ஆத்மீக சந்தேகங்களுக்கும் அவர் விடையளிக்கவுள்ளார். இம் மகாநாடானது எம்மை தெய்வீகத்தின் பொறிகளாக உணரச் செய்து அன்பையும், உண்மையையும், சாந்தியையும் எம் வாழ்வில் மலரச் செய்யப் பாடுபடும். எமக்கு சுவாமியின் போதனைகளை அறிவுறுத்தி அவற்றை கைக் கொள்ள உதவி செய்யும். எம்மை ஒன்று சேர்த்து தன்னலமற்ற சேவையை சமுதாயத்திற்கு வழங்க ஒரு தளமாக அமையும்.

மாநாட்டின் நோக்கங்களாவன:

1. சுவாமியின் வாழ்வையும், வழிகாட்டலையும் போதனைகளையும் அறிந்து அவற்றை தம் வாழ்வில் நடைமுறைப்படுத்தி தமது வாழ்வை அர்த்தமுள்ளதாக்க இளைஞர்களை ஊக்குவித்தல்
2. இளைஞர்களின் ஆத்மீக வாழ்வில் ஏற்படும் சந்தேகங்களைப் பற்றிய கலந்துரையாடலுக்கான ஒரு தளமாக அமைதல்
3. சேவைச் செயற்பாடுகள் மூலம் சமூகத்திற்கு இளைஞர்கள் தமது அன்பை வெளிப்படுத்த ஊக்குவித்தல்
4. பகவானுடைய தெய்வீக நோக்கமாகிய தர்மத்தை நிலை நிறுத்துதல் என்பதற்கு அமைவாக சாயி இளைஞர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கான ஆர்வம், ஊக்கம், தலைமைத்துவஇயல்பு ஆகியவற்றை வழங்கல்


மாநாடு தொடர்பான விபரங்கள்:

- பங்கு பற்றுனர்கள்

  இலங்கையிலுள்ள அனைத்து சாயி நிலையங்கள், மற்றும் பஜன் மண்டலிகளில் அங்கத்துவம் வகிக்கின்ற அனைத்து சாயி இளைஞர்களும் பங்கு பற்றலாம். இளைஞர் அணியினருக்கான வயதெல்லை 18 35 என வரையறுக்கப்பட்டுள்ளது. இளைஞர்களுடன் எமது தேசிய மற்றும் பிராந்திய இணைப்பாளர்கள், தேசிய மற்றும் பிராந்திய இளைஞர் இணைப்பாளர்கள், தேசிய இளைஞர் மகாநாட்டு ஒழுங்கமைப்புக் குழுவினர், மற்றும் சாயி நிலையங்களில் இளைஞர் அணிகளுக்குப் பொறுப்பேற்று வழிநடத்துகின்ற இளைய தலைவர்கள் அனைவரும் கலந்து கொள்வர்.

- பதிவு செய்தல்

  இளைஞர் மாநாட்டின் பங்கு பற்றுனர் அனைவரும் தம்மைப் பதிவு செய்தல் அவசியமாகும். இதற்கான படிவம் வலய இளைஞர் இணைப்பாளர்களூடாக ஒவ்வொரு வலயத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பங்குபற்றுனரிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் நிலையத் தலைவரூடாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். அவ் விபரங்கள் மென்பிரதியாக தரப்பட்ட மாதிரிப் படிவத்தில் ஒழுங்கிணைக்கப்பட்டு பதிவேற்றப்பட்டு nsyc12jaffna@gmail.com என்ற முகவரிக்கு 7 நாட்களுக்கு ஒரு தடவை பிராந்திய இளைஞர் இணைப்பாளரால் அனுப்பி வைக்கப்பட வேண்டும். மாநாட்டின் பங்கு பற்றுனர்கள் பதிவு செய்வதற்கான இறுதி நாள் 2012 ஜுன் 21. மாநாட்டில் பங்கு பற்றுவதற்கு கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாநாட்டுக்கு வருகை தரல்

ஜூலை 12 ஆம் திகதி மாலை பங்குபற்றுநர்கள் யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்திற்கு வருகை தந்து தங்கள் பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அன்று மாலை மாநாட்டினைப் பற்றிய விளக்க உரையும் சாதனையும் இடம் பெறும். ஜூலை 13, 14 ஆம் திகதிகளில் அதிகாலை 5.30 க்கு மகாநாடு ஆரம்பமாகி இரவு 7.30 மணியளவில் நிறைவு பெறும். 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவுள்ள சேவை நிகழ்ச்சியுடன் மதியம் மாநாடு நிறைவு பெறும்.

- தங்குமிட வசதிகள்

மாநாடு நடைபெறவுள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா சேவா நிலையத்தினை சூழ பொருத்தமான தங்குமிடங்கள் ஆண்கள், பெண்களுக்கென ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. தங்குமிடங்களிலிருந்து மாநாட்டுக்கு வருவதற்கான பிரயாண ஒழுங்குகள் செய்யப்படும். தங்குமிட வசதிகளுக்காக கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

- உணவு வசதிகள்

மாநாட்டுக்கு வருகை தருபவர்களுக்கு ஜூலை 12 ஆம் திகதி இரவு உணவு மற்றும் ஏனைய மூன்று நாட்களுக்குமான உணவு மற்றும் தேநீர் என்பவை மாநாட்டு மண்டபத்தில் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குடிநீர் வசதி தங்குமிடங்களில் செய்யப்பட்டிருக்கும்.

மாநாட்டின் அமர்வுகள்:

தேசிய சாயி இளைஞர் மாநாட்டு ஒழுங்கமைப்புக் குழுவானது இலங்கை மத்திய சபையுடன் இணைந்து மாநாட்டுக்கான செயல்திட்டத்தினையும் நிகழ்ச்சிநிரலையும் தயாரித்துள்ளது.

மகாநாட்டின் நிகழ்ச்சி நிரலானது பின்வரும் அம்சங்களைக் கொண்டிருக்கும்

- மாநாட்டின் கருப்பொருளை ஆராய்ந்து அழைக்கப்பட்ட விருந்தினர்கள் ஆற்றும் உரைகள்.
- டாக்டர்.நரேந்திரநாத் ரெட்டி அவர்களுடன் இளைஞர் ஆத்மீக சந்தேகங்களை தீர்க்குமுகமான கலந்துரையாடல்
- இளைஞர்களின் பிராந்திய ரீதியிலான கலாசார நிகழ்வுகள்
- தலைமைத்துவப் பண்பை வளர்ப்பதற்கான பயிற்சிப் பட்டறை
- இளைஞர்களுக்கான 9 ஒழுக்கக் கோட்பாடுகள், 10 கட்டளைகள் என்பவை பற்றிய கலந்துரையாடல்
- இளைஞர்களின் சாயியுடனான அனுபவங்கள் பற்றிய உரைகள்
- கிராம சேவை பற்றிய ஒரு கள நிகழ்வு.

மாநாட்டில் பங்கு பற்றும் இளைஞர்களுக்கான செயற்திட்டங்கள் பின்வருமாறு வகுக்கப்பட்டுள்ளன.

1. மாநாட்டுக்கு முந்தைய சாதனை நிகழ்ச்சிகளில் ஆர்வத்துடன் ஈடுபடல். இச்சாதனை நிகழ்வானது 2 வகையாக செயற்படுத்தப்பட வேண்டும்.

1) தனிப்பட்ட சாதனை: -

✓ பகவானால் எமக்கு வழங்கப்பட்ட 9 ஒழுக்கக் கோட்பாடுகள் மற்றும் 10 கட்டளைகளை அறிந்து உணர்ந்து வாழ்வில் கடைப்பிடிக்க எம்மால் இயன்ற அளவு முயற்சி செய்தல். உ-ம்:

- தினமும் தியானமும் நாமஸ்மரணையும் சாயி இலக்கியங்களைக் கற்றலும் - குறைந்தது ஒவ்வொன்றும் 15 நிமிடங்களாவது செய்தல் வேண்டும்.
- சைவ உணவை மட்டுமே உட்கொள்ளுதல்.
- ஆசைக்கு வரம்பு வைத்தல். சேமிக்கப்படும் பணத்தினை சேவைச் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தல்
- பெற்றோரை மதித்துப்பேணல்
- அன்பாகவும் இனிமையாகவும் குறைவாகவும் பேசுதல்.

2) கூட்டு சாதனை:

அ) நிலைய பஜனை மற்றும் ஏனைய செயற்பாடுகளில் ஆர்வத்துடன் பங்குபற்றல். பிராந்திய ரீதியில் மாதம் ஒரு முறை இளைஞர் சாதனா நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தல். வேதபாராயணத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும.

ஆ) கல்வி வட்டம்

குறைந்தது நிலையத்தில் வாரம் ஒரு முறையும் பிராந்திய ரீதியில் மாதம் ஒரு முறையும் கல்வி வட்டத்தினை ஒழுங்கு செய்தல். இதற்காக 1997, 2007 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற உலக சாயி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்களுக்கான மாநாட்டில் பகவான் ஆற்றிய உரைகளைத் தெரிவு செய்யலாம். அத்துடன் 9 ஒழுக்கக் கோட்பாடுகள், 10 கட்டளைகள் பற்றிய மாநாட்டு ஏற்பாட்டுக் குழுவினால் வழங்கப்பட்டுள்ள கையேட்டினையும் ஆராயலாம்.

இ) சேவை நிகழ்வுகள்

தமது நிலையத்தில் தேவைப்படும் சேவைகளை இனங்கண்டு இளைஞர் அணியினர் சேவை நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தல் வேண்டும். குறைந்தது ஏதாவது ஒரு வெளிச்சேவையிலாயினும் இளைஞர்கள் பங்கு பற்ற வேண்டும். (உ-ம்: கிராம சேவை, வைத்தியசாலை சேவை )

3) மாநாட்டினை முன்னிட்டு நடாத்தப்படும் ஆக்கத்திறன் போட்டிகளில் பங்கெடுத்தல்.

இப் போட்டிகள் 3 வகைகளில் நடைபெறும். பங்கு பற்றுவோர் தமது ஆக்கங்களை கட்டுரையாகவோ, கவிதையாகவோ, சுவாமியுடனான தமது அனுபவங்களின் பகிர்வாகவோ nsyc12jaffna@gmail.com என்ற முகவரிக்கு எழுதி அனுப்பி வைக்கலாம்.

4) ஆத்மீக சந்தேகங்களை தொகுத்து அனுப்பி வைத்தல்

மகா நாட்டில் இடம்பெறவுள்ள அமர்வில் பிரதம விருந்தினரிடம் தமது சந்தேகங்களுக்கான விடையை தெரிந்து கொள்ள விரும்புவோர் அவற்றை முன்னதாகவே nsyc12jaffna@gmail.com என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

5) மாநாட்டு அமர்வுகளில் பங்கு பற்றுதல்

சாயி இளைஞர்கள் அனைவரும் மாநாட்டுக்கு வருகை தந்து முழுமையாக ஊக்கத்துடன் பங்கு பற்றி ஒத்துழைக்க வேண்டும்.

6) சாயியுடனான தமது அனுபவங்களை மாநாட்டில் பகிர்ந்து கொள்ளல் ஆக்கத்திறன் போட்டிகளுக்காக அனுப்பி வைக்கப்படும் சாயி அனுபவப் பகிர்வுகளிலிருந்து பிராந்திய ரீதியில் தெரிவு செய்யப்படுவோர் மாநாட்டில் தமது அனுபவங்களைப் பகிர ஒழுங்கு செய்யப்படும்.


7) 9 ஒழுக்க கோட்பாடுகள், 10 கட்டளைகள் பற்றிய உரைகளில் பங்கேற்றல் பிராந்திய ரீதியில் இவற்றுக்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படும்

8) கலாசார நிகழ்ச்சிகளில் பங்கேற்றல்பிராந்திய ரீதியில் 20 நிமிடங்கள் கலாசார நிகழ்வுக்காக ஒதுக்கப்படும் அவற்றில் ஆர்வத்துடன் பங்கு பற்ற வேண்டும்.

9) மாநாட்டு சேவையில் பங்கேற்றல் பிராந்திய ரீதியில் இரண்டு ஆண்,பெண் சேவாதள அங்கத்தவர்கள் மாநாட்டு சேவையில் பங்கு பற்ற அனுமதிக்கப்படுவர்.

மேற்குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்கான வழிகாட்டற் குறிப்புக்கள் பிராந்திய இணைப்பாளர்களுக்கூடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என வடபிராந்திய தேசிய சாயி இளைஞர் மாநாட்டு ஒழுங்கமைப்புக் குழு இளைஞர் இணைப்பாளர் சி.சிவோதயன் அவர்கள் மேற்படி விபரங்களை வெளியிட்டுள்ளார்

**சாயி இளைஞர்களே! இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாது மாநாட்டில் கலந்து கொண்டு எமது ஆன்மீகப் பயணத்தில் யாவரும் ஒன்றிணைவோம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# நிறுவனச் செய்திகள்

## வட பிராந்தியம்

- ஈஸ்வரம்மா ஜீவாதார திட்டம்

இலங்கையிலுள்ள இளைஞர், யுவதிகளை சேவையூடாக உள்வாங்கி அவர்களை ஆத்மீக வழிக்கு அழைத்துச் செல்லும் நோக்குடன் இலண்டனிலுள்ள "சாயி மொட்" என்ற அமைப்பின் உதவியுடன் இத் திட்டம் ஆரம்பிக் கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் மூலம் பரீட்சார்த்தமாக ஒரு தொகை புழுங்கல் அரிசி, அரிசி மா, பச்சை அரிசி என்பன அனுப்பி வைக்கப்பட்டது. இலங்கை மக்களுக்கு உதவவேண்டும் என்ற ஆர்வத்தில் அனுப்பி வைக்கப்பட்ட முழுப் பொருட்களும் சில மணி நேரத்தில் வாங்கப்பட்டு விட்டது. இத்திட்டத்தில் ஈடுபட்ட அனைவருக்கும் இது பெரும் உற்சாகத்தைக் கொடுத்துள்ளது. இத்திட்டத்திற்கான சிறு தொழிற்சாலை கோப்பாயில் "சாயி சுதா" என்ற கட்டிடத்தில் அமைக்கப்பட்டு வருகின்றது.

இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புடன் ஆத்மீக சூழலில் கடமையாற்றக் கூடிய சந்தர்ப்பங்களும் இதனூடாக கிட்டும். இத் தொழிலில் அனுபவம் வாய்ந்த இளைஞர்கள் தேவைப்படுகிறார்கள்.

நெல், மிளகாய் போன்ற விவசாய உற்பத்திப் பொருட்களை நேரடியாக விவசாயிகளிடமிருந்து வாங்குவதுடன் இயற்கை உரத்தை பாவிக்கும் விவசாயிகளை ஊக்குவிக்கும் நோக்குடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

- பூம்புகார் கிராமத்தில் சாயி சேவை

அண்மையில் மீளக்குடியமர்த்தப்பட்ட அரியாலை கிழக்கு பகுதியிலுள்ள பூம்புகார் கிராமத்தில் அடிப்படை தேவையை கருத்தில் கொண்டு அங்குள்ள பாடசாலை மாணவர்களின் தேவைக்கும், கிராம மக்களின் தேவைக்குமாக குடிநீர் வழங்கும் நோக்கத்திற்காக ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த தண்ணீர் தாங்கிக்கு குழாய் இணைப்பு வசதிகள் செய்யப்பட்டதுடன், புதிய நீர் இறைக்கும் இயந்திரமும் பொருத்த ப்பட்டுள்ளது. இக்கிராமத்தில் மேலும் பல தேவைகள் இனங்காணப்பட்டுள்ளன.

- தேசிய இளைஞர் மகாநாடு - ஜுலை 2012

யாழ்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் 2012ஆம் ஆண்டு ஜுலை மாதம் 13, 14, 15 ஆம் திகதிகளில் " நீ எனது பணியைச் செய் நான் உனது வேலையைச் செய்வேன்" (You do my work, I will do your work ) என்ற கருப்பொருளில் நடைபெறவுள்ள தேசிய சாயி இளைஞர் மாநாட்டுக்கு சத்திய சாயி சேவா நிறுவனங்களின் சர்வதேச தலைவர் டாக்டர். நரேந்திரநாத்ரெட்டி அவர்கள் பிரதம விருந்தின ராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

## வடமத்திய பிராந்தியம்

- தண்ணீரூற்றில் சாயி நிலையம் திறப்பு விழா

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளைக் கிராமத்தில் தண்ணீரூற்று என்ற இடத்தில் சத்திய சாயி சேவா நிலையத்திற்கான புதிய மண்டபம் 25.03.2012 திகதியன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையம் பல சேவை திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

## கிழக்குப் பிராந்தியம்.

- மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலுள்ள புற்று நோயாளர்களுருக்கான புதிய சேவைத் திட்டம் ஒன்று 30.10.2011 இல் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இதன்மூலம் பால்மா, உடுப்பு, பழவகை என்பன ஒவ்வவொரு மாத இறுதியிலும் விநியோகிக்கப்படுகிறது.

- நவம்பர் 2011 இல் கல்லடி, தம்பிடுவில், கல்முனை ஆகிய இடங்களில் மூன்று தினங்கள் இரத்ததான நிகழ்வு இடம் பெற்றது. 132 பேர் இரத்த தானம் செய்தனர்.

- கதிரவெளி குருகுல மாணவர்களுக்கும், பழவெளி கிராமம் நேருபுரம், திராய் கேணி ஆகிய இடங்களிலுள்ள வசதிகுறைந்த வர்களுக்கு உடைகள் வழங்கப்பட்டன.

- "அவதார புருஷர் சாயி பாபாவும், ஆன்மீக விழிப்புணர்வும்" என்ற நிகழ்வு ஒன்று 26.01.2012, 27.01.2012 திகதிகளில் காரைதீவு என்ற இடத்திலுள்ள மாணவர்களுக்காக நடாத்தப் பட்டது. இந் நிகழ்வில் திரு.என்.புவனேந்திரன், திரு.பிரேமதாசன், திரு.எம்.இராஜேஸ்வரன், திரு.ஜி.விநாயகமூர்த்தி, பிராந்திய இணைப் பாளர் திரு.எஸ்.இளங்குமரன் ஆகியோர் பங்கு பற்றினர்.

- 17.3.2012 இல் தாமரைக்கேணி சாயி நிலையத்தில் பாலவிகாஸ் குருமார்ருக்கான பயிற்சி முகாம் சத்திய சாயி நிறுவனங்களின் மத்திய சபை உபதலைவர் டாக்டர்.ஜெகநாதன் தலைமையில் நடைபெற்றது. 80 பேர் கலந்து கொண்டனர்.

- சுவாமியின் சமாதி தின சேவையாக நேருபுரம் என்ற கிராமம் தத்தெடுக்கப்பட்டு 5.4.2012 இல் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இக்கிராமத்தில் மின் இணைப்பு, குடிநீர் வசதி, மலசுடம் அமைத்தல் என்பன மேற்கொள்ளப்படவுள்ளன.

- சித்திரைப் புத்தாண்டையொட்டி கதிரவெளி குருகுல மாணவர்களுக்கு புதிய உடைகள், குடைகள் என்பன கல்முனை சாயி நிலையத் தால் 11.04.2012 இல் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சத்திய சாயி பாடசாலை பண்புவிருத்தி விளையாட்டு விழா 2012, பிரதம விருந்தினராக மத்திய சபை உபதலைவர் டாக்டர்.ஜெகநாதன் கலந்து கொண்டார்.



தண்ணீரூற்றில் புதிய சாயி நிலையம் திறப்பு விழா 25.03.2012




அன்புவார இறுதி நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு.சத்தியசீலன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org